மஞ்சரி

கர - ஆடி

உள்ளங்கை ரகசியம்

கல்வியில் பொம்மலாட்டம்

வரி கொடாத வீரர்

உடற் பயிற்சி வேண்டாம்

பாங்கி அநுபவம் (சிறுகதை)

பிரளயம் (நாவல் சுருக்கம்)

-6-

வாழ்வும் சாவும்

பிரபஞ்சத்திலே சகலமும் பயனுடையதுதான். சாவு எவ்வளவு அற்பமானது என்பதை வாழ்வு போதிக்கிறது; வாழ்வு எவ்வளவு அற்பமானது என்பதைச் சாவு போதிக்கிறது.

—லாண்டார்

மஞ்சரி

ஆசிரியர், பதிப்பாளர்: என். ராமரத்தினம்

நிர்வாக ஆசிரியர்: தி. ஜ. ரங்கநாதன்

பாஷை ஆசிரியர்கள்:

கி. வா. ஜகந்நாதன்
கா. ஸ்ரீ. ஸ்ரீ.
த. நா. ஸேனுபதி
'குமுதினி'
வி. எச். சுப்பிரமணிய சாஸ்திரி
கி. சாவித்திரி அம்மாள்
சீதா தேவி
'ஆர்வி'
கௌரி அம்மாள்
மோ. ஸ்ரீ. செல்லம்

ஓவியர்கள்: ஸாமி; சங்கர், மகான்.

மஞ்சரி, தபாற் பெட்டி நெ. 604, மயிலாப்பூர், சென்னை 4. பிரதி மாதமும் முதல் தேதி வெளிவரும். தனிப் பிரதி விலை 6 அண. வருஷ சந்தா ரூ. 4/8. கலைமகள் சந்தாதார்களுக்கு மட்டும் ரூ. 4/- சந்தாத் தொகையை 'ஸர்க்குலேஷன் மானேஜர்' என்ற விலாசமிட்டு அனுப்புக. விலாச மாற்றங்களைத் தங்கள் பழைய விலாசத்துடன சந்தா எண்ணையும் குறிப்பிட்டுத் தெரிவியுங்கள். மஞ்சரியிலுள்ள எல்லாக் கட்டுரைகளும் கதைகளும் பதிப்புரிமை பெற்றவை.

மஞ்சரி
மாதத்தின் சுவையான மலர்க்கதம்பம்

ஊரும் உலகமும்

★

பத்திரிகை மதிப்பு: 'கால்பந்தாட்டம் பார்க்கும் பத்திரிகை நிருபர்கள் என்ன கடமை புரிகிறார்கள்? அவர்களுக்கு இலவச டிக்கட் தேவையில்லை. கொடுத்தால் அதற்கும் தமாஷ் வரி உண்டு, என்று பம்பாய் கலெக்டர் உத்தரவு போடுகிறார். பத்திரிகைச் சுதந்தரங்களைக் கட்டுப்படுத்தும் ஒரு திருத்தத்தை அரசியல் சட்டம் 19 - (2) பிரிவுக்கு இந்திய சர்க்காரே செய்து வைக்கிறது. இந்த நிலையில் இந்தியப் பத்திரிகாசிரியர் மகாநாடு கூடியது; தன் ஆலோசனைச் சபைகள் இனிச் சர்க்காருக்கு ஆலோசனை சொல்வதில்லை என்று கோபத்துடன் தீர்மானம் செய்திருக்கிறது. அது நியாயம். இதையெல்லாம் பார்க்கும்போது, பத்திரிகைகளிடம் முந்திய பிரிட்டிஷ் சர்க்கார் வைத்திருந்த மதிப்பே மேல் என்று தோன்றுகிறது.

ஈரான் துணிவு: எண்ணெய்க் கிணறுகளைத் தேசத்தின் சொத்தாக்கிச் சர்க்காரே நிர்வகிப்பது என்று ஈரான் தீர்மானித்த பிறகு, பிரிட்டிஷ் - ஈரான் எண்ணெய்க் கம்பெனியுடன் சமரசமாய் அந்தக் காரியத்தைச் சாதிக்க முயன்றது ஈரான் சர்க்கார். கம்பெனி சரிப்பட்டு வரவில்லை; பிரிட்டிஷ் சர்க்கார் சட்டம் பேசத் தொடங்கியது. பொறுத்துப் பொறுத்துப் பார்த்த ஈரான் பொறுமை இழந்தது. வலுக்கட்டாயமாக ராணுவத்தைக் கொண்டு அபடான் கிணறுகளைக் கைப்பற்றிவிட்டது. விளைவு என்னவானாலும், ஈரானின் துணிச்சலைப் பாராட்டத்தான் வேண்டும்.

முறிந்த பேச்சு: பிரான்ஸ், ஸோவியத் யூனியன், இங்கிலாந்து, ஐக்கிய அமெரிக்கா இந்த நான்கின் வெளிவிவகார உதவி மந்திரிகளும் பாரிஸில் நாலு மாதமாய், 74 தடவை கூடிப் பேசியாயிற்று. உலக சமாதானப் பேச்சுக்கான அட்டவணையே தயாராகவில்லை. அட்டவணையில் வட அட்லாண்டிக் உடன்படிக்கையையும் சேர்க்க வேண்டும் என்றது ஸோவியத் யூனியன். மற்றவை அதற்குச் சம்மதிக்கவில்லை. பரஸ்பர சந்தேகந்தான் காரணம். பேச்சு முறிந்தது. இப்படி வல்லரசுகள் ஒன்றையொன்று நம்பாமல் முரண்டிக்கொண்டேயிருப்பது உலகத்துக்கே மிக அபாயம்.

கணக்குத்தான் மாறியது: அரசியல் சட்டத்துக்கு இந்திய சர்க்கார் செய்த திருத்தத்தைப் பின்பற்றி, சென்னை சர்க்கார் ஒரு புதிய ஜி.ஓ. பிறப்பித்திருக்கிறது. வைத்தியம்,

எஞ்சினீரிங், விவசாயம், வெட்டரினரி காலேஜ்களில் மாணவருக்கு இடம் அளிப்பது பற்றியது அது. ஷெட்யூல் ஜாதிகளுக்கு 15 சதவிகிதமும் சமூகத்திலும் கல்வியிலும் பிற்போக்கான வகுப்பினருக்கு 25 சதவிகிதமும் ஒதுக்கி வைப்பார்கள். மீதி 60 சதவிகிதத்தில் எவ்வித வகுப்புவாதமும் காட்ட மாட்டார்களாம். வைத்தியக் காலேஜில் 20 சதவிகிதம் பெண்களுக்கு ஒதுக்கிவைப்பார்கள். ஆனால், இந்த விகிதாசாரங்களின் படி மாணவர்களுக்கு இடம் அளிக்கும் வேலையைச் சர்க்கார் நியமித்துள்ள கமிட்டிகள் ஏற்கும். படிப்பு யோக்கியதையைத் தவிர, மாணவரின் விளையாட்டுத் திறன், விசேஷ இயல்பு, தேகாரோக்கியம், குடும்பத்தின் கல்விப் பிற்போக்கு ஆகியவற்றையும் கவனித்தே இடம் கொடுப்பார்களாம். இது தான் விநோதமாக இருக்கிறது. சமூகம், பொருள் ஆகிய நிலைகளில் பிற்போக்கானவர்களுக்கு இலவசமாகப் பணம், உணவு முதலிய வசதிகளைக் கல்வி நிலையங்களில் அமைக்கலாம். இப்படி வகுப்பு வேற்றுமை காட்டுவது அடிப்படையிலே பெருந்தவறாகும். வகுப்பு வாதம் தொலையவில்லை; சதவிகிதக் கணக்குத்தான் மாறியிருக்கிறது!

கோதுமையா, மக்காச் சோளமா?—ட்ரூமன் செய்த அபார முயற்சியால் இந்தியாவுக்கு 19 கோடி டாலர் விலையுள்ள தானியங்களைக் கடன் கொடுக்க ஐக்கிய அமெரிக்க ஜனப் பிரதிநிதி சபைகள் தீர்மானித்து விட்டன. இதனால் சுமார் 20 லட்சம் டன் தானியங்களை இந்தியா வாங்கிக் கொள்ளலாம். அதில் கோதுமை எவ்வளவு இருக்குமோ? மக்காச் சோளம் எவ்வளவு இருக்குமோ? யாரும் தெரிவிக்கவில்லை. ஆனால் ஒன்று: இந்தியாவின் கௌரவத்துக்கே இழிவாக சிலர் நிபந்தனை போட்டார்கள். யுத்தத்துக்குதவும் மொனஸைட் முதலிய மூலப்பொருள்களை இந்தியா கொடுக்க வேண்டும் என்றார்கள். அது பலிக்கவில்லை. மொத்தத்தில் இந்த உதவிக்கு இந்தியா நன்றி செலுத்த வேண்டியதுதான்.

மாலிக் யோசனை: கொரியாவில் சமரசம் ஏற்படுத்த, ஸோவியத் பிரதிநிதி மாலிக் சில யோசனைகள் கூறியிருக்கிறார். போர் தொடுக்கும் இரண்டு கட்சிப் படைகளும் போரை நிறுத்தி 38-ஆவது அட்சரேகையைவிட்டு விலகி நிற்கவேண்டும் என்பதுதான் அவர் யோசனை. சமரசத்துக்கு முதற்படியாக இதை அவர் சொல்லுகிறார். முன்போலக் கம்யூனிஸ்ட் சீனாவை ஐ. நா. வில் அங்கம் வகிக்கச் செய்யவேண்டும் என்றெல்லாங்கூட அவர் நிபந்தனை விதிக்கவில்லை. கம்யூனிஸ்ட் சீனாவும் இந்த ஸோவியத் யோசனையை வரவேற்கிறது. அமெரிக்கா முதலிய நாடுகள் இந்த யோசனையை ஏற்பது தான் உசிதம். அப்படியில்லாமல் ஏதாவது சாக்குச் சொல்லி, இந்தச் சந்தர்ப்பத்தையும் கை நழுவ விட்டால் பிறகு கொரியா நெருக்கடிக்கு விமோசனமே இல்லாது போய் விடும்.

சில மனிதர்கள் முதலில் பணம் சம்பாதிப்பதில் நேரத்தைச் செலவழிக்கிறார்கள்; பிறகு பணம் செலவழிப்பதில் நேரத்தைக் கொல்லுகிறார்கள்.

—ஸ்டார் யெல்லாண்டு

கித்வாயின் யுக்தி

★

மத்திய அரசாங்கத்தில் மந்திரியாக இருந்துகொண்டு, காங்கிரஸ் மகாசபையையும் விடாமல், அதே சமயம் எதிர்க் கட்சி ஒன்றிலும் அங்கம் வகிக்கிறார் ராபி அகமது கித்வாய். இது எல்லாருக்கும் பெரும் புதிராக இருக்கிறது. இது எப்படியிருந்தாலும் சரி, மனுஷர் மகா கெட்டிக்காரர். அவரைப்பற்றிய இந்த ரசமான துணுக்கு 'ஸ்வதந்த்ரா' பத்திரிகையில் சியாமா சரண் காலா என்பவர் எழுதிய ஒரு கட்டுரையிலிருந்து எடுத்தது:

"ராபி சாகேப் மனசு வைத்தால் போதும். லட்சக்கணக்கில் நிதி திரட்டிவிடுவார்; அவ்வளவு சக்தி உண்டு அவருக்கு. ஒரு சமயம் உத்தரப் பிரதேசத்திலே காங்கிரஸ் தேர்தல் பிரசாரத்தில் மும்முரமாக ஈடுபட்டிருந்தார் ராபி சாகேப். முக்கியமான ஒரு தொகுதியில் தேர்தல் செலவுக்கு ரூ. 30,000 தேவை என்று காங்கிரஸ் நிர்வாகி ஒருவர் வந்து அவரிடம் தெரிவித்தார். ராபி சாகேபினிடம் பணம் இல்லை. ஆனாலும், 'நாளைக்கு வாருங்கள். தருகிறேன்' என்று வாக்குறுதி கொடுத்து வந்தவரை அனுப்பிவிட்டார். பிறகு சிறிது யோசனை செய்தார். அவருக்கு ஒரு யுக்தி தோன்றியது. அப்போது ஒரு தொகுதியில் காங்கிரஸ் அபேட்சகரோடு நவாப் யூசப், சட்டாரி நவாப் என்ற இரண்டு ஜமீன்தார்கள் போட்டியிட்டார்கள். 'காங்கிரஸ் ஜயித்தாலும் சரி சட்டாரி தோற்கவேண்டும்' என்று யூசபுக்கு எண்ணம். அதே மாதிரி சட்டாரிக்கும், 'காங்கிரஸ் ஜயித்தாலும் சரி யூசப் தோற்கவேண்டும்' என்று இருந்தது. ராபி சாகேபுக்கு இது தெரியும். அதனால் சட்டாரிக்கு, 'எங்கள் கையில் பணம் இல்லை. ஆகவே, உங்கள் தொகுதியில் யாரையும் காங்கிரஸ் அபேட்சகராக நிறுத்தப் போவதில்லை' என்று போன் செய்தார்.

"சட்டாரி நவாபுக்கு, 'எங்கே யூசப் ஜயித்துவிடுவாரோ?' என்று திகில் வந்துவிட்டது. அவர் உடனே, "நீங்கள் கட்டாயம் காங்கிரஸ் அபேட்சகரை நிறுத்துங்கள். நான் செலவுக்குப் பணம் தருகிறேன்" என்று ராபி சாகேபுக்கு ரூ. 15,000-க்கு ஒரு செக் அனுப்பிவிட்டார். ராபி சாகேப் இதேமாதிரி யூசப்பிடமும் சொல்லவே அவரும் பயந்துவிட்டார். அவரிடமிருந்தும் ரூ. 15,000 கறந்து, தாம் கொடுத்த வாக்குறுதியையும் மறுநாள் நிறைவேற்றிவிட்டார் ராபி சாகேப்."

புதிய சந்திரன்

★

முனிவன் விசுவாமித்திரனுக்குக் கோபம் வந்ததாம். பிரம்மாவுக்குப் போட்டியாகப் புதிய உலகங்களைச் சிருஷ்டிக்கத் தொடங்கிவிட்டானாம். இது புராணக் கதை. ஆனால், இதோ அமெரிக்க விஞ்ஞான நிபுணர்கள், வானத்திலே புதிய சந்திரன் ஒன்றைச் சிருஷ்டிக்க முயன்றுகொண்டிருக்கிறார்கள்! முக்கிய நோக்கம் என்ன தெரியுமோ? ராணுவத்துக்கு உதவுவதே.

சூரியனைப் பூமியும் மற்றக் கிரகங்களும் சுற்றுகின்றன; பூமியைச் சந்திரன் சுற்றுகிறது. இது பள்ளிக்கூடத்துப் பையன்களுக்கெல்லாம் தெரியும். இப்போது, பூமியைச் சுற்றுவதற்கு இன்னொரு 'சந்திர'னைச் சிருஷ்டிக்க ஐக்கிய அமெரிக்க விஞ்ஞானிகளும் எஞ்சினீர்களும் முயன்றுகொண்டிருக்கிறார்கள். இந்த முயற்சிக்கு அமெரிக்க சர்க்காரே பணவுதவி செய்துவருகிறார்கள். இது என்ன விந்தையான செய்தி என்றுதான் நமக்கெல்லாம் தோன்றும். ஆனால் இதுபற்றிய ரசமான சில விவரங்களும் படங்களும் பிரசித்தி பெற்ற 'பாப்புலர் ஸயின்ஸ்' என்ற அமெரிக்கப் பத்திரிகையில் வெளியாகியிருக்கின்றன.



படம் 1

அமெரிக்க ராணுவத்துக்கு உதவியாக இருப்பதற்காக இந்தப் புதிய சந்திரனைச் சிருஷ்டிக்க முயல்கிறார்கள். இந்தப் புதிய சந்திரனில் யாரும் இருக்க மாட்டார்கள். இது இயங்குவதற்கு எண்ணெய், கரி முதலிய எரிபொருள் எதுவும் தேவையில்லை.

இது இப்போதுள்ள சந்திரனைவிட மிகவும் சிறியதாயிருக்கும்; மிகவும் வேகமாய் இயங்கும்; பூமிக்கு மிகவும் கிட்ட இருக்கும். என்றாலும் தாயின் சேலைத் தலைப்பை விட்டு அகலாத குழந்தைபோல, பூமாதேவியை விட்டு நீங்காமல் தொடரும். இன்னும் பத்து அல்லது பன்னிரண்டு வருஷத்துக்குள் இந்தச் சந்திரன் சிருஷ்டியாகி ஆகாயத்தில் உலவத் தொடங்கிவிடும் என்று சொல்லுகிறார்கள்.

பூமியை விட்டு எழுந்து, அந்தரத்தில் பாய்ந்து, மணி ஒன்றுக்கு 18,000 மைல் வேகத்தில் ஓடும்படி ஒரு குண்டை வீசிவிட்டால் போதும்; அந்தக் குண்டு இன்றைய சந்திரனைப்போலவே பூமியைச் சுற்றிவந்துகொண்டிருக்கும்;

ஒரு நாளும் விழாது.

ஆனால், இவ்வளவு வேகத்தில் பாயும்படி ஒரு பொருளை அந்தரத்தில் வீசுவது எப்படி? இந்தச் சிக்கலைத் தீர்க்கத்தான் இப்போது விஞ்ஞானிகள் திட்டம் போட்டிருக்கிறார்கள்.

யுத்தகாலத்தில், 'வி-டு ராக்கெட்' என்பதுபோன்ற ஜெர்மன் வாணக்குண்டுகளைப்பற்றி நாம் எல்லாரும் கேள்விப்பட்டிருக்கிறோம். இந்த மாதிரி வாணக்குண்டுகளை, இரண்டு அல்லது மூன்றடுக்கு உள்ளதாக அமைக்கப் போகிறார்கள். முதல் படத்தைப் பாருங்கள். ஒரு பெரிய குண்டு இருக்கிறது. அந்தக் குண்டு செகண்டு ஒன்றுக்கு 5,500 அடி வேகத்தில் கிளம்பிக் கொஞ்சதூரம் போகும்; அப்போது, அதற்குள் நெ. 2 என்று குறிப்பிட்டிருக்கும் குண்டு அதிலிருந்து வெடித்துக் கிளம்பும். இப்போது முதல் குண்டின் வேகத்தோடு இரண்டாவது குண்டின் வேகமும் சேரும். இரண்டாவது குண்டு, செகண்டுக்கு 14,000 அடி வேகத்தில் கொஞ்ச தூரம் போகும்; அப்போது அதிலிருந்து மூன்றாவது குண்டு வெடித்துக் கிளம்பும். அதுதான் மணிக்கு 18,000 மைல் அல்லது செகண்டு ஒன்றுக்கு 5 மைல் வேகத்தில், பிரளயகாலம் வரையில் பூமியைச் சுற்றிச்சுற்றி வலம் வந்து கொண்டிருக்கும்.

அந்தக் குண்டு அல்லது 'புதிய சந்திர'னில், எஞ்சின் ஒன்றும் இராது. அதை ஓட்ட எவ்விதச் சக்தியும் இல்லை. பம்பரம் தானாகச் சுழல்வதுபோல, 'இனெர்ஷியா' (Inertia) என்ற தாமஸசக்தியாலேயே அது இயங்கும். பம்பரம் சுழலச் சுழல வேகம் குறைந்து கொண்டே வந்து, கடைசியில்



படம் 2

ஓய்ந்து விழுந்துவிடுமே; இது மட்டும் எப்படி ஒருநாளும் ஓய்ந்து விழாமல் சுற்றும்? இந்தச் சந்தேகம் நம் மனத்தில் உதிக்கும். இது சுற்றுவதில் ஒன்றும் ஆச்சரியம் இல்லை.

இரண்டாவது படத்தைக் கவனியுங்கள். நடுவில் வட்டமாக இருப்பது பூமி. அதன் நடுவே, '+' என்ற கூட்டல் குறி போட்டுக் காட்டியிருப்பது பூமியின் மையம். முதல் வாணக்குண்டை மட்டும் விட்டிருந்தால், அது மேலே எழும். பிறகு அதன் தாமஸ சக்தி வேகம், பூமியின் ஆகர்ஷணசக்தி (Gravity) இரண்டும் சேர்ந்து, அதைத் தள்ளக்கூடிய பாதையை நீண்ட வட்டமாகக் காட்டியிருக்கிறது. ஆனால், அந்த வட்டம் முழுவதும் அது சுற்றுவதானால் பூமியைக் குடைந்து கொண்டுதான் செல்லவேண்டும். அது சாத்தியமல்ல; ஆகவே, அந்த முதல் வாணக்குண்டு, பூமியில்தான் வந்து விழுந்து விடும். ஆனால், அதிலிருந்து இரண்டாவதும், இரண்டாவதிலிருந்து மூன்றாவதும் கிளம்பினால், அந்த மூன்றாவது வாணக்குண்டு சுற்றக்கூடிய பாதையை வெளிவட்டம் காட்டுகிறது.

மூதல் வாணக்குண்டை, செங்குத்தாகக் கிளம்பும்படி விசேஷ பீரங்கி மூலம் வீசுவார்கள். மூன்ருவது குண்டு, மேலே செங்குத்தாகக் கிளம்பாமல், நேர்க்கோணத்தில் (Right angle) திரும்பிப் பாயும்படி ஏற்பாடு செய்திருப்பார்கள். இந்த மூன்ருவது குண்டு, பூமியைச் சுற்றியுள்ள வாயுமண்டலத்தை (Atmosphere) தாண்டிச் சென்றிருக்கும். ஆகவே, அதன்மீது உராய்வு (Friction) எதுவும் இராது. இப்போது அதன் பாதையை நிர்ணயிப்பவை அதன் தாமஸ சக்தி, பூமியின் ஆகர்ஷண சக்தி இரண்டும் மட்டுமே.

தன் தாமஸசக்தியால், மூன்ருவது வாணக்குண்டு தன் வேகம் குறையாமல் ஒரே நிதானமாக அந்தரத்தில் ஓடுகிறது. பூமியின் ஆகர்ஷண சக்தி அந்தக் குண்டை இழுப்பதால், அதன் பாதை வளைகிறது. செகண்டுக்கு 5 மைல் வேகத்துக்குக் குறைந்து செல்லுமானுல், அதன் பாதை வளைவு (Orbit) பூமியில் வந்து மோதும். இப்படி இல்லாமல் அந்த வேகம் செகண்டுக்கு 5 மைலாக இருக்குமானுல், அதன் பாதை பூமியைச் சுற்றிச் செல்லும். அதாவது, அதன் பாதை எவ்வளவு வளையும்படி (Curve) பூமியின் ஆகர்ஷண சக்தி அதை இழுக்கிறதோ அவ்வளவுக்குப் பூமியின் வட்டமும் வளைந்திருக்கிறது. மைல் ஒன்றுக்கு 8 அங்குலம் பூமியின் வட்டம் வளைந்திருக்கிறது. ஆகவே, குண்டு பூமியில் வந்து விழப் பார்க்கும்போதெல்லாம் பூமியின் வட்டம் எட்டிப் போய்க் கொண்டேயிருக்கிறது. வானமண்டலங்கள் ஒன்றை ஒன்று சுற்றுவதும் சற்றேறக்குறைய இதே முறையில்தான்.

பூமியைச் சூழ்ந்துள்ள வாயுமண்டலத்தின் உராய்வு துளிகூட இல்லாத உயரம் 470 மைல். இந்தப் 'புதிய சந்திரன்' எப்படியும் அந்த உயரத்துக்குப் போனுல்தான் வேகம் குன்ருமல் ஒரே அளவாய்ப் பாயும். அந்த உயரத்தில் மணிக்கு 18,000 மைல் வேகத்தில் சுற்றும் 'புதிய சந்திரன்' 100 மினிட் நேரத்தில் பூமியை ஒரு சுற்றுச் சுற்றிவிடும். இப்படி இல்லாமல் பூமியின் மேல்தளத்திலிருந்து (Surface) 22,300 மைல் உயரத்துக்குச் சென்று அது சுற்றும்படி விட்டால், நம் 'புதிய சந்திரன்' பூமியைச் சுற்றவே சுற்ருது. அதாவது, நிலையாய் நிற்பதுபோல் பூமியில் ஒரே இடத்தில் உள்ளவருக்கு மட்டுமே தோன்றிக்கொண்டிருக்கும். ஏனென்ருல், 24 மணி நேரத்தில் பூமி தன்னைத் தானே ஒரு முறை சுற்றுவதற்சேற்க, நம் 'சந்திர'னும் 24 மணி நேரத்தில் பூமியை ஒரு சுற்றுச் சுற்றி விடும். இது வேடிக்கையாய்த்தான் இருக்கும். ஆனுல், விஞ்ஞானிகளுக்கு இப்படிப்பட்ட 'புதிய சந்திர'னுல் ஒரு பயனும் இல்லை. ஆகவே, குறைந்த உயரத்தில் பூமியைப் பலமுறை சுற்றும் 'சந்திர'னைத்தான் அவர்கள் அமைப்பார்கள்.

ஆமாம், இப்படி ஒரு 'புதிய சந்திர'னைப் படைத்து, பூமியைச் சுற்றவிடுவதால், என்ன லாபம்? பற்பல லாபங்கள் உண்டு என்கிருர்கள். சூரியமண்டல (Solar) ஆராய்ச்சிகள் பலவற்றை நடத்த இது உதவுமாம். மூன்ருவது படத்தைப் பார்த்தால், குண்டிலிருந்து பல பக்கங்களிலும் ஊசி போல் அநேகம் கம்பிகள் நீண்டிருப்பதைக் காணலாம். இவையெல்லாம் வேருென்றும்



படம் 3

அல்ல; நம் ரேடியோக்களுக்கு ஏரியல் (Aerial) என்ற ஆகாயக்கம்பிகள் அமைக்கிறோமே அவை போன்றவையே. மூன்றாவது குண்டு வெடித்துக் கிளம்பும்போது இவை இப்படி நீண்டிருக்கமாட்டா; பூமியைச் சுற்றத் தொடங்கும்போது தான் இவ்விதம் நீளும். குண்டுக்குள் இருக்கும் நுட்பமான ரேடியோக் கருவிகளுடன் இவை இணைந்திருக்கும். வானமண்டலத்தில் மீட்டியர் (Meteor) என்ற சிறு சிறு வானக் கற்கள், ஐயோன் என்ற மின் அணுக்கள் சூழ்ந்த ஜலவாயு மண்டலம் (Clouds of Ionised Gas) இவை முட்டும்போது ஏற்படும் நிகழ்ச்சிகளை அந்த ரேடியோக்கள் பூமிக்கு மின்காந்த அலைகளாக (Electro-Magnetic Waves) அனுப்பும். இதைக் கொண்டு அவைகளின் தன்மையை விஞ்ஞானிகள் அறியலாம். அந்த ரேடியோக்கள் வேலை செய்வதற்கு வேண்டிய மின்சார சக்தியை, சூரிய கிரணத்தைக் கொண்டு தாமாகவே உற்பத்தி செய்யக்கூடிய கருவிகளையும் அமைத்திருப்பார்கள். ஆனால், இதையெல்லாம் வெகு ரகசியமாக வைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

இந்தச் 'சந்திரன்' வெறும் கண்ணுக்குத் தெரியும்படி பிரகாசிக்காது. ஆனால், தூரதிருஷ்டிக் கண்ணாடியில் தெரியும்படி பிரகாசிக்கும். இதைக் கொண்டு கப்பலோட்டும் மாலுமிகள் திசை தெரிந்துகொள்ளலாம்.

யுத்தத்தில் 3,000 மைல் தூரத்துக்கு அப்பால் சென்று குறிப்பிட்ட குறியைத் தாக்கும்படி ஒரு வாணக் குண்டை அனுப்புவதென்றால், அதற்கு வேண்டிய கணிதங்களைச் செய்ய ஆகாயத்தில் சில நட்சத்திர நிலைகளைப் பார்க்க வேண்டியிருக்கிறது. அந்த நட்சத்திர நிலைகளுக்குப் பதிலாக இந்தப் 'புதிய சந்திர'னின் நிலையை வைத்துக்கொண்டு கணித்து, எதிரி நாட்டில் வாணக் குண்டுகளை வீசலாம். முக்கியமாக, இந்த நாச வேலைக்கு உதவுவதற்காகத்தான் அமெரிக்க விஞ்ஞானிகள், இந்தப் 'புதிய சந்திர'னைப் படைக்கும் முயற்சியில் தீவிரமாய் இறங்கியிருக்கிறார்கள்.

ஒரு பெண்ணின் இயல்பைப்பற்றி நமக்கு ஒன்றும் சொல்லத் தெரியாது; தெரிந்தால் அதைச் சொல்லி மீள முடியாது.

—'ஆம்பியன்'

க்விஸ்

[இதோ சில கேள்விகள்: எங்கே உங்களுக்கு விடை தெரிகிறதா பாருங்கள். பிறகு 80-ஆம் பக்கத்து விடையுடன் ஒப்பிட்டுக்கொள்ளுங்கள்.]

1. இரண்டு வாரத்துக்கு முன் 'வருணனின் தர்பார்' நடந்தது. எங்கே நடந்தது, யார் நடத்தினார்கள் என்று உங்களால் விளக்க முடியுமா?

2. பூமியின் நிறை என்ன? அதை முதல் முதல் நிறை போட்டுக் கணித்துச் சொன்னவர் யார்?

3. ஒரு மலையைக் குடைந்து 'டன்னல்' (குகைப்பாதை) வெட்டுகிறார்கள். அப்படிக் குடையும்போது, வெட்டி எடுத்த பாறைகள் ஏற்கனவே மலையின் பாரத்தில் ஓர் அளவைச் சுமந்துகொண்டிருந்தன. அவை சுமந்த பாரம் இப்போது (டன்னலை வெட்டிய பிறகு) எங்கே போகிறது?

4. "மனிதன் நாகரிகம் உள்ளவன். ஏனென்றால், ஜீவப்பிராணிகளுக்குள்ளே மனிதன் ஒருவன்தான் தன் அங்கங்களுக்கு உதவியாகப் பலவிதக் கருவிகளை உபயோகிக்கிறான்" என்று ஒருவர் சொன்னார். இது சரியா, தவறா?

5. 'நைலான்' என்ற பட்டு வந்திருக்கிறதே. இது தாவரமா? ஜீவ உடலா? கனிப்பொருளா?

6. 'பஞ்சாங்கம்' என்ற பெயர் என்ன காரணத்தினால் ஏற்பட்டது?

7. கரியேறிய ஒரு பித்தளைப் பாத்திரத்திலும், நன்றாய்ப் பளபளவென்று தேய்த்துத் துலக்கிய மற்றொரு பித்தளைப் பாத்திரத்திலும் தனித்தனி ஒரே அளவான சூட்டில் நீரைக் கொதிக்கவைத்தால், எதில் விரைவாக அதிகச் சூடு ஏறும்? இதேமாதிரி வேறு இரண்டு பாத்திரங்களில் ஒரே அளவான சூடுள்ள நீரை ஊற்றினால், எதில் சீக்கிரத்தில் சூடு குறையும்?

8. சென்னை மாகாணத்தில் டெலிபோன் உள்ள எல்லா ஊர்களிலும் தீயணைக்கும் படையைக் கூப்பிட (அ) வெவ்வேறு எண்கள், (ஆ) 99 என்ற ஒரே எண், (இ) சில இடங்களில் 99 என்ற எண்ணும் மற்ற இடங்களில் வேறு எண்களும் குறித்திருக்கிறார்கள். இந்த மூன்றில் எது சரி?

9. ஜவ்வரிசியை மரவள்ளிக் கிழங்கிலிருந்து தயாரிக்கிறார்கள் என்று பொதுவாகச் சொல்லுகிறார்களே, இது சரியா தவறா?

10. ஒருவனிடம் ஆறு பட்டையான பல மரச்சக்கைகள் இருக்கின்றன. நீலம், பச்சை இரண்டு வர்ணச் சாயங்களும் இருக்கின்றன. ஒவ்வொரு சக்கையின் ஒவ்வொரு பட்டையிலும், நீலமோ பச்சையோ இரண்டில் ஒரு வர்ணம் கட்டாயம் பூசிவிடவேண்டும். ஒன்று போல் மற்றொன்று இராமல், இப்படி வர்ணம் பூசிய எத்தனை மரச் சக்கைகளைத் தயாரிக்க முடியும்?

உலகத்திலேயே இந்தியர் மிகச் சிறந்து முதன்மையாய் நிற்பது இந்த அருமையான விளையாட்டில்தான்.

ஹாக்கியின் கதை

எம். எல். கபூர்

ஹாக்கி விளையாட்டு மிகவும் ரசமானது. அது ஆதியில் எங்கே எப்போது தோன்றியது என்பதைப்பற்றிச் சரியான விவரம் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை. சில பழைய வரலாறுகளிலிருந்து, முன்காலத்தில் பாரசீகத்தில் தடியை வைத்துக்கொண்டு இந்தமாதிரி விளையாடி வந்ததாகத் தெரிகிறது. இவர்களிடமிருந்து கிரேக்கர்களும், பிறகு கிரேக்கர்களிடமிருந்து ரோமர்களும் இதைக் கற்றுக்கொண்டார்கள். ஏதென்ஸ் நகரில் கி.மு. 514-449-இல் தெமிஸ்டோகிள்ஸ் என்பவன் கட்டிய கட்டடத்தின் இடிந்த சுவர் ஒன்று இருக்கிறது. அதில், ஹாக்கித்தடி மாதிரி ஒன்றை வைத்துக்கொண்டு இரண்டுபேர் விளையாடுவதுபோல் குடைந்திருக்கிறது; இன்னும் நாலு பேர் அவர்களுக்குத் துணையாக ஆடுகிறார்கள். ஆனால் ஒரு வித்தியாசம்: இந்தத் தடியின் நுனி கீழ்ப்பக்கம் வளைந்திருக்கிறது. இந்தச் சிற்பம் இப்போது கோபன்ஹேகன் மியூசியத்தில் இருக்கிறது.

அமெரிக்காவிலுள்ள சிவப்பிந்தியர்களும் வெகு காலமாக இந்த மாதிரி ஒரு விளையாட்டு ஆடிவந்ததாகத் தெரிகிறது. கயிற்றை உருண்டையாகக் கட்டிப் பலகாலமாக இப்படிக் கீழ்த்திசை நாடுகளில் ஆடிவந்திருக்கவேண்டும்; நாளடைவில் மேல் நாடுகளிலும் இது பரவியிருக்கும் என்று தோன்றுகிறது.

அயர்லாந்தில் பல நூற்றாண்டுகளாக ஹாக்கிமாதிரி ஓர் ஆட்டம் ஆடிவந்திருக்கிறார்கள்; அங்கே இதை 'ஹர்லி' என்கிறார்கள். அயர்லாந்து நாட்டின் தேசீய விளையாட்டாக இதைக் கொண்டாடிவருகிறார்கள். ஸ்காட்லாந்திலும் கி. பி. 12-ஆம் நூற்றாண்டிலிருந்தே ஹாக்கி விளையாடி வந்ததாகத் தெரிகிறது. அங்கே இதை 'ஷிண்டி' என்கிறார்கள்.

இடையில் பல ஆண்டுகள் ஹாக்கியைப்பற்றியே ஒரு விவரமும் தெரியாவிட்டாலும் மக்கள் ஏதோ அந்த மாதிரி ஒரு விளையாட்டு ஆடிக்கொண்டுதான் இருந்திருக்கவேண்டும்; அது நிச்சயம். 1875-இல் இங்கிலாந்தில் கிரிக்கெட் பந்தையும் ஓக் தடியையும் வைத்துக்கொண்டு ஒரு விதமான ஹாக்கி ஆடிவந்தார்கள். இந்தத் தடிகள் ஒரே அளவாக இராமல் சில குட்டையாகவும் சில நீண்டும் இருக்கும். அந்த நாளில் ஹாக்கி கோஷ்டியின் அமைப்பே வேறு விதமாக இருந்தது. முன்புறம் நடுவில் இரண்டுபேரும் பக்கங்களில் இரண்டு இரண்டு பேருமாக எட்டுப் பேர் இருப்பார்கள். பந்தைத் தடுத்து நிறுத்தக் கோல்

காப்பிரைட்: ஸ்போர்ட் அண்ட் பாஸ்டைம் (ஆங்கிலம்: 2-6-'51), சென்னை.

கீப்பரும் இரண்டு '½ பாக்'களும் இருப்பார்கள். ஹாக்கிக்கென்று ஒழுங்கான விதி முறைகளை இன்னும் வகுக்காத காலம் அது. அதனால் அதிகமாக உடம்பை அலட்டிக்கொண்டு விளையாடுவார்கள். அந்த நாளில் இந்தப் பதினொரு பேரும் அமைந்திருக்கும் முறை பந்தைத் தடுத்து நிறுத்தும் கோஷ்டியாருக்கு அசௌகரியமாக இருந்தது. ஆகவே, முன்புறத்தில் நடுவே இருந்த இரண்டு பேரில் ஓர் ஆசாமியை '½ பாக்'காகப் போட்டு, 1896-முதல் ஒரு '¾ பாக்'கையும் புதிதாகப் போட்டார்கள். இன்னும் ஒரு வருஷம் கழித்து முன்னால் இருப்பவர்களின் எண்ணிக்கையைக் குறைத்து ஆறாக்கி மூன்றாம் '½ பாக்' ஒருவனைப் போட்டார்கள். 1889-இல் முன்னால் ஐந்து பேரும், மூன்று '½ பாக்'களும் இரண்டு 'புல் பாக்'களும் ஒரு கோல்கீப்பரும் போட்டு ஆடிப் பார்த்தார்கள். ஆட்டம் நன்றாக அமைந்தது; முன்போல் எல்லாரும் ஒரே மொத்தமாகப் பந்தின்மேல் பாய்ந்து அதிகக் களேபரம் ஏற்படாதபடி இப்போது ஒழுங்கான முறையில் இருந்தது.

1886-ஆம் வருஷம் ஜனவரி மாதம் 18-ஆம் தேதி ஹாக்கி சம்பந்தமான எல்லா விதிமுறைகளையும் வகுத்து ஒழுங்குபடுத்த மத்திய ஸ்தாபனம் ஒன்று பிரிட்டனில் ஏற்பட்டது. ஏழாம் எட்வர்டு மன்னர் அப்போது வேல்ஸ் இளவரசராக இருந்தார். பிரிட்டிஷ் ஹாக்கி சங்கத்தின் தலைவராக அவரைத் தேர்ந்தெடுத்தார்கள். நூற்றுக்கணக்கான சிறு சங்கங்கள் ஏற்பட்டு இந்தத் தலைமை ஸ்தாபனத்தோடு இணைந்து வேலை செய்யத் தொடங்கின. 1895-இல் முதல் தடவை நடந்த சர்வதேச ஹாக்கி பந்தயத்தில் இங்கிலாந்து அயர்லாந்தை ஜயித்துவிட்டது. அதில் இங்கிலாந்து 5 கோல் எடுத்தது; அயர்லாந்து ஒரு கோல் கூடப் போடாமல் தோற்றுவிட்டது. 1894-இல் ஐரிஷ் ஹாக்கி சங்கமும் 1897-இல் வெல்ஷ் ஹாக்கி சங்கமும் ஏற்பட்டன.

1890-இல் எல்லாரும் சேர்ந்து சர்வதேச ஹாக்கி ஸ்தாபனம் ஒன்று ஏற்படுத்தினார்கள். அதில் அயர்லாந்து, வேல்ஸ் இந்தப் பிரதேசங்களின் பிரதிநிதிகளாக இரண்டு இரண்டு பேரும், பிரிட்டிஷ் ஹாக்கி சங்கத்தின் பிரதிநிதிகளாக மூன்றுபேரும் இருந்தார்கள். 1902-இல் ஸ்காட்டிஷ் ஹாக்கி சங்கம் ஏற்பட்டதும், பின்னும் பத்துப் பேரைப் பிரதிநிதிகளாகச் சேர்த்துக்கொண்டார்கள்.

ஐரோப்பாவிலும் ஹாக்கி விளையாட்டுப் பரவிப் பிரபலமாயிற்று. 1907-இல் இங்கிலாந்துக்கும் பிரான்ஸுக்கும் போட்டி நடந்தது. 1913-இல் ஜெர்மனிக்கும் இங்கிலாந்துக்கும் நடந்த ஹாக்கி போட்டியில் ஜெர்மனி தோற்றது. பெல்ஜியம், டென்மார்க், ஹாலந்து, ஸ்பெயின், ஆஸ்திரியா, சுவிட்ஜர்லந்து இந்த நாடுகளும் இந்த மாதிரிப் போட்டிகளில் ஈடுபட்டு வந்தன. பிறகு ஆஸ்திரேலியா, நியூஜீலந்து, தென் ஆப்பிரிக்கா இந்த இடங்களிலும் ஹாக்கி விளையாட்டுக்கு மவுசு ஏற்பட்டது. இந்தியாவில் 1880-வாக்கில் ஹாக்கி விளையாட ஆரம்பித்தார்கள்.

ஹாக்கியில் அபிவிருத்தி ஏற்பட ஏற்பட அதற்கேற்றபடி விதிமுறைகளையும் வகுத்து ஒழுங்குபடுத்தினார்கள். 1886-இல் 'D' என்று வழங்கும் பந்தடிக்கும் வட்டத்தின்

அளவு நிர்ணயமாயிற்று. மூன்று வருஷங் கழித்து ஹாக்கி ஆடும் களத்தின் நீளம் 100 கஜத்துக்கும் அகலம் 60 கஜத்துக்கும் மேல் போகக்கூடாது என்று வரையறுத்து விட்டார்கள். அடாவடியாகப் பந் தடிக்கும் வழக்கம் வெகுநாள் வரை நிற்கவில்லை. ஆகவே, "அந்த மாதிரி சந்தர்ப்பங்களில் உடனே ஆட்டத்தை நிறுத்தி எதிர் எதிர்க் கோஷ்டியைச் சேர்ந்த இருவர் மறுபடியும் பந்தாடத் தொடங்கவேண்டும். அப்படி அடித்து முடிகிறவரையில் மற்ற வர்கள் சற்றுத் தொலைவில் நிற்கவேண்டும்" என்று விதி வகுத்தார்கள். இதற்குப் 'பெனல்டி புல்லி' என்று பெயர். அடாவடி ஆட்டம் மட்டுப்பட்டது. அதே வருஷம் மூலையிலிருந்து கோலை நோக்கிப் பந்தடிப்பதைத் தடுக்க ஒரு விதியை வகுத்தார்கள்: மூலையிலிருந்து பந்தைக் கோலை நோக்கி அடிப் பதற்கு முன் அதை நிறுத்தித் தான் அடிக்கவேண்டும். அல்லது அப்படி அடிப்பதற்கு முன்னே எதிர்க் கோஷ்டியாரில் யாராவது ஒருவர்மீதோ அவர் தடிமேலோ பந்து பட்டிருக்கவேண்டும்.

1906-க்கு முன் பந்தை முன் ளுேக்கித்தான் உருட்டி விடுவது வழக்கம். இப்போது எந்தப் பக்கம் வேண்டுமாலுைம் உருட்டி விட லாம். ஏறக்குறைய இதே சமயத் தில் இன்னொரு விதத்திலும் மாறு தல் செய்தார்கள். "எதிராளியின் கோலுக்கும் பந்துக்கும் இடையில், ஒருவர் தமக்கு முன் எதிர்க் கோஷ்டியாரில் மூன்று பேர்கூட இராதிருக்கும்போது குறுக்கிட்டால் 'ஆப்ஸைடு' ஆகிவிடுவார்" என்று முடிவு செய்தார்கள். 1909-இல் 'பெனல்டி கார்னர்' என்ற முறை அமலுக்கு வந்தது. 1925-இல், 'வேண்டுமென்றே தடியைத் தோளுக்குமேல் தூக்கிப் பந்தைக் கோலுக்குப் போகாதபடி தடுப்பது தவறு' என்று விதி அமைத்தார்கள். இப்படி நேர்ந்தால் ஆட்டத்தை நிறுத்தி மறுபடி ஆடவேண்டியது தான். 'D' என்று வழங்கும் பந்த டிக்கும் வட்டத்தின் அளவு கோலிலிருந்து பதினைந்து கஜம் என்று இருந்தது போய் இப்போது பதினறு கஜம் என்று மாற்றி யிருக்கிருர்கள். இன்னும் சில விதிகளையும் மாற்றி அமைத்திருக் கிருர்கள்.

வெகுகாலமாக இந்த மாதிரி ஒரு விளையாட்டை இந்தியாவிலே ஆடிவந்திருக்கிருர்கள். இருந்தா லும் ஆங்கிலேயர் வந்தபிறகு தான் - 1880-க்குப் பிறகுதான் - இப்போது இருக்கும் முறையில் இங்கே ஹாக்கி விளையாடக் கற்றுக் கொண்டார்கள். அதற்கு முன் பஞ்சாபில் துணிப்பந்தும் வளைதடி யும் வைத்துக்கொண்டு இப்படி ஆடிவந்தார்கள்; தடிமட்டும் ஒரே அளவாக இராது.

இன்று ஹாக்கி நம் நாட்டில் பிரபலமாகி, நம் தேசீய விளையாட் டாக விளங்குகிறது.

மனித லட்சணங்கள்

ரசிகத்தனம் படித்தவனுக்கு அழகு; மனேதர்மம் கலைஞனுக்கு அழகு; உணர்ச்சி நிதானம் மனப் பக்குவம் அடைந்தவனுக்கு அழகு.

—பிலிப், 'போரம்.'

ஈரான் எண்ணெய்த் தொழில்

—'அமிருதபஜார் பத்திரிகை'

எண்ணெய்ப் புள்ளி விவரம்

ஆங்கிலோ- ஈரானிய எண்ணெய்க் கம்பெனியின் ஆஸ்தி	5,000 லட்சம் பவுன்
பங்குதாரர் போட்ட மூலதனம்:	330 ,,
மொத்த லாபம்:	330 ,,
1947 - 48 ல் அளித்த லாபப் பங்கு	30 சதவிகிதம்
ஈரானிய சர்க்காருக்கு அளித்த ராயல்டி விகிதங்கள்:	1933 - ஆம் ஆண்டு வரை 15 லட்சம் பவுன். 1933-க்குப்பின் 80 லட்சம் பவுன்
பிரிட்டிஷ் சர்க்காரின் பங்கு	52. 9 சதவிகிதம்
பர்மா எண்ணெய்க் கம்பெனியின் பங்கு	26. 30 சதவிகிதம்
தனிப்பட்டவர்களின் பங்கு	17. 8 சதவிகிதம்
ஓர் ஆர்மீனியரின் பங்கு	5 சதவிகிதம்

ஈரானில் எடுக்கும் எண்ணெய்:

ஈரானில் தற்போது எடுக்கும் எண்ணெய்:	வருஷம் ஒன்றுக்கு 190 லட்சம் டன். அதாவது பூமிக்குள் இருக்கும் மொத்த எண்ணெயில் 1.8 சதவிகிதம்; நாள் ஒன்றுக்கு 3,00,000 பாரல்.
இன்னும் பூமிக்குள் இருப்பதாக மதிப்பிட்டுள்ள எண்ணெய்	சுமார் 700 கோடி பாரல்கள்

பிரிட்டன், அமெரிக்கா, பிரான்ஸ் மூன்று நாடுகளும் மத்தியக் கிழக்கு நாடுகளில் எடுக்கும் மொத்த எண்ணெய் (பாரல் கணக்கில்):

	பிரிட்டன் (79%)	அமெரிக்கா (16%)	பிரான்ஸ் (5%)
ஈராக்	1,30,67,000	65,33,000	65,33,000
பாஹ்ரீன்	....	73,00,000	....
ஸாதி அரேபியா	91,25,000	54,75,000	....
ஈரான்	7,50,00,000	....	....
மொத்தம்	9,71,92,000	1,93,08,000	65,33,000

பல் வேறு நாடுகளில் நாள் ஒன்றுக்குக் கிடைக்கும் எண்ணெய் (டன் கணக்கில்): மத்தியக் கிழக்கு நாடுகள் - 1,000; வெனிசூலா 25; ருமேனியா $7\frac{1}{2}$; அமெரிக்கா $1\frac{1}{2}$; போலந்து $\frac{1}{2}$.

ஆங்கிலோ - ஈரானிய எண்ணெய்க் கம்பெனியில் 70,000 தொழிலாளர் வேலை செய்கிறார்கள். இது ஈரானில் உள்ள தொழிலாளரின் மொத்த எண்ணிக்கையில் பாதியாம்.

ஈரானிலிருந்து ஏற்றுமதியாகும் பொருளில் 90 சதவிகிதம் எண்ணெய்தான்.

ஈரானிய அரசியல்வாதிகளைச் சரிக்கட்டுவதற்காக 15 லட்சம் பவுனை ரகசிய நிதியாக எண்ணெய்க் கம்பெனியார் ஒதுக்கி வைத்திருக்கிறார்களாம்.

—ஓரியெண்ட்

தசரதனின் பிரிவு ★

ஸீதா லட்சுமணர்களுடன் ராமன் கங்கையின் தென் கரையை அடைந்தான். அவன் சுமந்திரனை அயோத்திக்குத் திரும்பிப் போகும்படி கண்டிப்பாகச் சொல்லிவிட்டதால் சுமந்திரன் மிகவும் வருத்தத்துடன் குதிரைகளைத் தேரில் பூட்டிக்கொண்டு அயோத்திக்குச் சென்றான். புறப்பட்டு இரண்டாம் நாள் மாலை அங்கே வந்து சேர்ந்தான். நகரம் மகிழ்ச்சியும் சந்தடியுமற்றுக் கிடந்தது. அவனைக் கண்டதும் மக்கள், “ராமன் எங்கே?” என்று கேட்டுக்கொண்டு ஓடி வந்தார்கள். ராமனைக் காணாமல் அவர்கள் புலம்புவது சுமந்திரனின் செவியில் விழுந்தது. முகத்தை மூடிக்கொண்டு அவன் நேராக அரண்மனையை நோக்கித் தேரை ஓட்டினான்.

அரண்மனையை அடைந்ததும் தேரை விட்டு இறங்கித் தசரதனைக் காணச் சென்றான். போகும் வழியில் பெண்கள் சுமந்திரனைக் கண்டு ராமன் வராததை உணர்ந்து வருந்தினார்கள். புத்திர சோகம் தாங்காமல் தசரத மன்னன் துடித்துக்கொண்டிருந்தான். சுமந்திரன் அவனை வணங்கி ராமனைப்பற்றித் தெரிவித்தான். மன்னன் பதிலே பேசவில்லை; துக்க மிகுதியால் அறிவிழந்து தரையில் விழுந்தான். அப்போது அந்தப்புரத்தில் இருந்தவர்களெல்லாரும் ‘ஓ’ என்று கதறினார்கள். அவனைத் தூக்கிப் படுக்கையில் சுமித்திரையும் கௌசல்யையும் அமர்த்தினார்கள். “ஏன் இப்படிப் பேசாமல் இருக்கிறீர்கள்? அநீதியான காரியம் செய்துவிட்டு இப்போது வருந்தி என்ன பலன்?

உலகில் சிறந்த ஆதி இலக்கியம் வால்மீகி ராமாயணம். அதன் சாரம் ஒவ்வொரு பகுதியாக 'மஞ்சரி'யில் வெளிவருகிறது.

இங்கே கைகேயி இல்லை. நீங்கள் சுமந்திரனோடு தாராளமாகப் பேசலாம்'' என்று புலம்பிக்கொண்டே கௌசல்யையும் வருத்தம் தாங்காமல் தரையில் விழுந்தாள்.

பிறகு தசரதன் ஒருவாறு தேறிச் சுமந்திரனை அழைத்து ராமனைப்பற்றி விசாரித்தான். "தர்மாத்மாவான ராமன் மரத்தடியிலா வாசம் செய்கிறான்? கஷ்டமே அறியாதவன் அவன்; அனாதை மாதிரி எப்படித்தான் காலந்தள்ளுவானோ? கொடிய மிருகங்களும் கருநாகங்களும் இருக்கும் காட்டில் ராம லட்சுமணர்கள் சீதையோடு எப்படித்தான் நடந்து போனார்களோ? சுமந்திரா, ராமன் என்ன சொன்னான்? லட்சுமணன் என்ன சொன்னான்? சீதை என்ன சொன்னாள்?'' என்றெல்லாம் கேட்டான். இதற்குச் சுமந்திரன் பதில் சொல்லும்போது, கண்ணீர் வந்து தடை செய்தது.

''ராமன் கைகூப்பிச் சொன்னது இதுதான்: 'என் தந்தைக்கும் தாய்மார்களுக்கும் என் நமஸ்காரத்தைத் தெரிவி; நாங்கள் க்ஷேமமாக இருக்கிறோம் என்றும் சொல். கௌசல்யாதேவியிடம், மன்னரைத் தெய்வமாக மதித்துக் காத்து வரும்படி சொல். மற்றத் தாய்மார்களிடம் கர்வம் கோபம் இரண்டையும் விட்டுப் பிரியமாக இருக்கும்படி சொல். கைகேயிக்கு அநுகூலமாகவே நீ நடந்துகொள்ள வேண்டும். பரதன் உனக்கு அரசன் என்ற எண்ணத்தோடு பழகவேண்டும்.' அப்போது அவன் கண்ணில் நீர் பெருகுவதைக் கண்டு லட்சு

மணன் கோபத்தோடு சில வார்த்தைகள் சொன்னான். சீதை பெருமூச்சு விட்டுக்கொண்டு பேய்பிடித்தவள்போல் அசைவற்றிருந்தாள்.

"மகாராஜா, உம்முடைய ராஜ்யத்தில் மரஞ்செடி கொடிகளுங்கூட ராமனுடைய பிரிவால் அரும்பு, பூ, காய்களோடு வாடிவிட்டன. தாமரை ஓடைகளும் நதிகளும் வறண்டுவிட்டன. தோட்டங்களில் பறவைகள் கூவுவதில்லை. ராமன் இல்லாமல் அயோத்திக்குள் நான் நுழைவதைப் பார்த்து ஜனங்கள் பெருமூச்சு விடுகிறார்கள்."

இப்படிச் சுமந்திரன் சொன்னதும் தசரதன், "கைகேயியின் சொல்லைக் கேட்டுத் தகாத காரியத்தைச் செய்துவிட்டேனே! மந்திரிகளோடு கலந்து யோசிக்கவும் இல்லையே! ஐயோ! சுமந்திரா, ராமனை என்னிடம் அழைத்து வா! அவன் இல்லாமல் என் உயிர் நிற்காது. அவன் வெகு தூரம் போய்விட்டானானால் என்னை யாவது அவனிடம் அழைத்துப் போ. ராமா, லட்சுமணா, ஜானகீ!" என்று கதறினான். பிறகு கௌசல்யையை நோக்கி, "வருத்தத்தைத் தாங்க முடியவில்லையே!" என்று சொல்லி மூர்ச்சை அடைந்து படுக்கையில் விழுந்தான்.

கௌசல்யை பேய்பிடித்தவள் போல் தரையில் புரண்டு, "அவர்கள் இருக்கும் இடத்துக்கு என்னையும் அழைத்துக் கொண்டு போ. இல்லா விட்டால் என் உயிரும் நிற்காது" என்றாள். சுமந்திரன் கண்ணீர் மிகுதியால் குரல் அடைக்கக் கை கூப்பிச் சொல்வான்: "ராமன் காட்டில் சுகமாகவே இருப்பான். லட்சுமணன் அவனுக்குப் பணிவிடை செய்துகொண்டு சந்தோஷமாக இருப்பான். சீதையும் வீட்டில் இருப்பதுபோல் அங்கே நிம்மதியாகவே இருப்பாள். வருத்தப்படாதீர்கள்."

அப்படியும் கௌசல்யையின் வருத்தம் நீங்கவில்லை. கணவனைப் பார்த்துக் கடுமையாகப் பேச ஆரம்பித்தாள். அரசன் மிகவும் வருத்தமுற்றான். முன் ஒரு சமயம் தான் வேட்டையாடும்போது, யானை என்று ஒரு ரிஷிகுமாரனைக் கொன்றதால் ஏற்பட்ட சாபத்தின் விளைவே இது என்று சொல்லிக் கௌசல்யையைத் தேற்றினான். அவளும் தான் சொன்ன கடுஞ்சொற்களை எண்ணி வருந்தி அரசனுக்கு ஆறுதல் மொழி கூறினாள்.

தசரதன் வருத்தந்தாங்காமல் "கௌசல்யே, உன்னைப் பார்க்க முடியவில்லையே! என்னைத் தொடு. என்னுடைய முன்னோர்கள் இதோ வந்து நிற்கிறார்களே; இனி என் உயிர் நிற்காது. ராமனைக் கண்டால் ஒரு வேளை பிழைக்கலாம். இதோ யமதூதர்கள் என்னை அவசரப் படுத்துகிறார்கள். பதினைந்தாம் வருஷம் ராமனுடைய முகத்தைப் பார்க்கப்போகிறார்களே, அவர்கள் தான் கொடுத்து வைத்தவர்கள். கௌசல்யே, என் இருதயம் சோர்ந்து போகிறதே! ஒன்றுமே தெரியவில்லையே! ஹா ராமா! எங்கேடா அப்பா போய்விட்டாய்? ஹா கௌசல்யே, ஹா சுமித்திரே, கைகேயி - அடி என் குலத்தைக் கெடுத்தவளே" என்று சொல்லிக் கொண்டே தசரதன் உயிர் நீத்தான்.

உள்ளங்கை ரகசியம்

★

“ரேகை சாஸ்திரம் என்பது என்ன? நூற்றுக்கு 30 பங்கு இச்சகம்; 50 பங்கு இரு பொருள் படும் பேச்சு; 10 பங்கு ஊகம்; 10 பங்கு உண்மை. இவ்வளவுதான்” என்கிறுள் ஐலீன் ஜே. மார்க்கரெட் என்ற பிரபல ஆவியுலக ஆராய்ச்சிக்காரி. ரேகை பார்ப்பதிலும் அவளுக்கு நல்ல செல்வாக்கு உண்டு. புது மோஸ்தர் ரேகை சாஸ்திரிகளைப் பற்றி அவள் சொல்லும் விஷயங்களை ஆதாரமாகக்கொண்ட இந்தக் கட்டுரை, நம் நாட்டு ரேகை சாஸ்திரிகளுக்கும் பொருந்துமா, பொருந்தாதா என்பது நமக்குத் தெரியாது.

பஞ்சாங்கம், ஜாதகம் எல்லாம் பார்த்து, கணிதங்களெல்லாம் செய்து, சங்கடப்பட வேண்டியதில்லை; எவரும் வெகு சுலபமாகக் குறி சொல்லி மிக விரைவாக ஜனங்களிடம் செல்வாக்குப் பெற்றுவிடலாம். அதற்கு ஏற்றது ரேகை சாஸ்திரம். பெரும்பாலான ரேகை சாஸ்திரிகள் நம் கையைப் பார்த்து அறியும் விஷயம் மிகவும் சொற்பம். மீதியெல்லாம் நம் முகஜாடையையும் நடையுடை பாவனைகளையும் பேச்சின் போக்கையும் கவனித்து, அவைகளை அநுசரித்து, குருட்டாம் போக்கில் திரிக்கும் சரடுகளே.

நீங்கள் ரேகை சாஸ்திரத்தின் மூலம் ஜனங்களிடம் பிரபலமடைய வேண்டுமா? அப்படியானுல், முதலில் உள்ளங்கையின் அமைப்பைப் பாருங்கள். அது கரடு முரடாக இருந்தால், நல்ல வேலை வெட்டி செய்யும் கை; நீண்டு நாசூக்காக இருந்தால், புத்திசாலியின் கை; சதுரமாயிருந்தால், ஒழுங்கும் லௌகிக ஞானமும் உள்ளவன் கை; முண்டும் முடிச்சுமாக இருந்தால் சிந்தனை மிக்கவனின் கை. ஆனுல் இந்த விஷயத்தையெல்லாம், குறி கேட்கிறவரிடம் சொல்லாதீர்கள். அவருடைய கை எப்படி வேண்டுமானுலும் இருந்து தொலையட்டும். அவர் மகா புத்திசாலி, கலைஞர், ஞான திருஷ்டி உடையவர் என்றெல்லாமே சொல்லுங்கள்.

குறி கேட்பவரின் குணுதிசயத்தை உண்மையிலே காட்டக் கூடியது அவருடைய நகம்தான். அது குட்டையாய், சுத்தமாய், கச்சிதமாயிருந்தால், ஆசாமிக்கு நல்ல சுத்தமும் சுவையும் உண்டு. நீண்டு வளைந்து கொக்கிபோல் அழகாய்ச் சீவி விட்டிருந்தால், அவர் டம்பக்காரர். கோணலும் மாணலுமாய்க் கடித்துப் பிய்த்திருந்தால், அவர் நரம்புக் கோளாறு உள்ளவர். நகத்தில் ரோஜா நிறம் இருந்தால், சுத்த ரத்த ஓட்டமும் ஆரோக்கியமும் ஆண்மையும் உள்ளவர். சாம்பல் அல்லது நீலம் பாரித்த நகம், ரத்தக் குறைவையும் மூச்சுத் திணறலையும் காட்டும்.

புகையிலையிலிருந்து எண்ணெய் போல் வெளிவரும் 'நிகோடைன்' (Nicotine) என்ற விஷம் பட்டுப் புள்ளிகள் விழுந்திருந்தால், ஆசாமி ஓயாமல் சுருட்டுக் குடிப்பவர்.

உள்ளங்கைத் தோல் பழுத்துத் தடித்திருந்தால், தொழிலாளி; மிருதுவாய் வெளுத்திருந்தால், சுக வாசி. உறுதியாய்க் கடினமாயிருந் தால், மன உறுதி உள்ளவர்; மிருதுவாயும் சுருக்கங்கள் விழுந்தும் இருந்தால், ஸ்திரபுத்தி இல்லாத வர். இதெல்லாம் யுக்தியாலும் அநுபவத்தைக் கொண்டும் அறிய வேண்டிய விஷயம்.

இனி, கை ரேகைகளைக் கவனிக் கலாம். வலதுகைப் பழக்கமுள்ள வராயிருந்தால், அவருடைய வலது கை அவர் தலையெழுத்தைக் காட்டு கிறது; இடது கை அவர் சுயமுயற்சி யால் அடைந்த சம்பாத்தியத்தைக் காட்டுகிறது. இடது கைப் பழக்கம் உள்ளவராயிருந்தால், கைகளின் பலனை மாற்றிக்கொள்ள வேண்டும். நீங்கள் சாஸ்திர ரீதியாக ரேகை பார்த்துப் பலன் சொல்ல விரும்பி னால் படத்தையும் அதன் கீழுள்ள குறிப்புகளையும் உபயோகித்துக் கொள்ளுங்கள். ஆனால், இந்தத் தொழிலில் உங்களுக்கு நல்ல செல்வாக்கு மட்டுமே வேண்டும் என்றால், அதுகூடத் தேவையில்லை. ஒவ்வொருவரும் உங்கள் வாயி லிருந்து நல்ல குறிகளையே எதிர் பார்க்கிறார்கள். ஆகவே, இதோ இருக்கிற உதாரணத்தின்படி குறி சொல்லத் தொடங்கிவிடுங்கள்:

"ஆஹா! இது ஓர் அபூர்வமான கை. நீர் நல்ல ரஸிகர். கலைச்சுவை நிறைந்தவர். உமக்கு எதுவும் அழகாயிருக்க வேண்டும். (யாருக் குத்தான் வேண்டாம்?) இதோ இந்தக் கட்டை விரல், எவ்வளவு வாளிப்பாய் நிமிர்ந்து நிற்கிறது! இது உம் திடசித்தத்தைக் காட்டு கிறது. (இப்படிச் சொன்னால் போதும். கை காட்டுகிறவர் தம் வீரப்பிரதாபங்களைத் தாமாகவே எடுத்துச் சொல்லத் தொடங்கிவிடு வார்.) உம்மைப் பார்த்தால், சாது வைப் போல் எல்லாருக்கும் தோன்றுவீர். ஆனால், உள்ளுக் குள்ளே நீர் பலே ஆசாமி. உம்மை யாரும் ஏமாற்ற முடியாது. ஒன்றைப் பிடித்தால், அதைச் சாதித்தே தீரு வீர். ஓர் ஆளைப் பார்த்தவுடனே, அவன் இப்படிப்பட்டவன் என்று சொல்லக்கூடிய 'நிகா' உமக்கு உண்டு. (இந்த அற்புத சக்தி தமக்கு உண்டு என்றால், மகிழ்ந்து போகாத வர் இந்த உலகத்தில் இல்லை; மறு உலகத்தில் ஒருவேளை இருப்பாரோ என்னவோ!)

"இன்னொரு விஷயம்: உம்மிடம் எல்லாருக்கும் பிரியம். பல பேர் உம்மிடம் வந்து யோசனை கேட்பார் கள். யாரும் தங்கள் ரகசியத்தை உம்மிடம் சொல்லிவிடுவார்கள்.

"இனி மற்ற விரல்களைப் பார்க்க லாம். அடேடே! என்ன திட சித்தமிருந்தாலும், உமக்கு ரொம்ப இளகிய மனசு. அதோடு நீர் உணர்ச்சிக் களஞ்சியம். கோயிலில் எல்லாரும் சாமி கும்பிடுவதுபோல நீர் கும்பிடுவதில்லை. நீர் கடவுளை நம்புவதாய்ச் சொன்னாலும் சரி, சொல்லாவிட்டாலும் சரி, உமக்கு ரொம்ப ஆத்ம சக்தி உண்டு.

"ஆனால் ஒன்று: உம் உடம்பைப் பற்றி உமக்குக் கவலையே இல்லை (வெருக்குத்தான் இருக்கிறது!). உங்கள் ஆயுள் ரேகையின் ஆரம்பத் தில் ஒரு பிளவு இருக்கிறது. சின்ன வயதில் ரொம்பக் கடுமையான வியாதி வந்திருக்க வேண்டுமே. (வராதவரே இருக்கமாட்டார்கள்.

ரேகா பலன்



(1) ஆயுள் ரேகை: நீண்டு உறுதியாயிருந்தால் நீடித்த ஆயுள்.

(2) சிரோ ரேகை: நீண்டிருந்தால் புத்திக் கூர்மை; நேராயிருந்தால் லௌகிக சாமர்த்தியம்.

(3) இருதய ரேகை: முறிந்திருந்தால் காதல் ஏமாற்றம்.

(4) ஆரோக்கிய ரேகை: இது தோன்றியிருந் தாலே உடல் உறுதி.

(5) விதி ரேகை: நீண்டிருந்தால் அதிருஷ்டம்.

(6) தன ரேகை: சிதைந்திருந்தால், பண விரயம்.

வியாழன்: ஆசை, டம்பம், வெற்றி.
சனி: கலைத்திறன், சிந்தனை சக்தி.
சூரியன்: ரசிகத் தன்மை, ஊதாரித்தனம்.
புதன்: வாக் சாதுர்யம்.
செவ்வாய்: துணிவு, அமைதி, செருக்கு.
சந்திரன்: சிந்தனை சக்தி, பகற் கனவு.
வெள்ளி: நகைச் சுவை, உல்லாசம்.

ஆகவே, இதைக் கொஞ்சம் அழுத்த மாகவே சொல்லலாம்.) சுத்த ரத்தமானதால்தான் அதிலிருந்து தப்பிப் பிழைத்தீர். (இதைக் கேட்டால், எவருக்குமே இனிப்பாக இருக்கும்.)

"உமக்குச் சில சிரமம் ஏற்பட்ட துண்டு. (சிரமம் என்பது அவர் அவர் எண்ணத்தைப் பொறுத்தது. ராஜபோகத்தில் வாழ்பவன்கூடத் துளியும் சிரமமில்லாது வாழ்வதாக நினைப்பதில்லை.) எது வந்தாலும் நீர் அஞ்சுவதில்லை. பாடுபட்டு உழைத்து எந்தச் சிரமத்தையும் வென்று விடுவீர். எதிர்காலத்தில் மிக நல்ல நிலையை அடையப் போகிறீர். (இந்த நல்ல வாக்குக் காகத்தான் எல்லாரும் ஏங்கிக் கொண்டிருக்கிறார்கள்.)

"நீர் மகா தீரர்... உமக்கு ரொம்பத் தாராள மனசு.... அருமையான மனோதர்மம்..." இப்படியே அடுக்கிக்கொண்டு போகவேண்டும்.

குறி கேட்கிறவர், இடை யிடையே பேசும்பேச்சைக் கொண்டு அவருடைய யோகக்ஷேமங்களையும் இயல்பையும் ஊகித்தறிந்து- அவை களை அநுசரித்து இங்கிதமான குறி களைச் சொல்ல வேண்டும். மனைவி மக்கள், பணங்காசு, பிரயாணசுகம் முதலிய பல பாக்கியங்களும் உண்டு என்று சொல்லவேண்டும். இப்படி விறுவிறுப்போடும் இச்சகமாகவும் பல நல்ல பலன்களைச் சொன்னால், நாவிலே இரண்டு பலிக்காமற் போகாது. குறி கேட்டவர் எழுந்து செல்லும்போது தமக்கு,

நாணயம்
தயாளம்
நட்பு
விதரணை
அன்பு
விநயம்
சந்துஷ்டி
சிக்கனம்
தீரம்
தூய்மை
பெருந்தன்மை

இப்படிப் பல அருமையான குணங் கள் பொருந்தியிருப்பதைக் கண்டு ஆனந்தமாய் நடப்பார். அவர் அதி நாகரிக ஆசாமியாக இருக்கலாம். ஆயினும், இந்தப் பலன்களுக்கு மசியாதவராக இருக்கமாட்டார். இதுதான் 1951 மோஸ்தர் ரேகை சாஸ்திரம்.

மூளி விழுந்தும் வாழலாம்

பல உள்ளுறுப்புகளில் ஒரு பகுதி சேதமாகியும் ஜீவிக்கக் கூடிய சக்தி மனிதனுக்கு இருக்கிறது. பித்தநீர்ப் பை (Gall bladder) அடியோடு தேவையில்லை; சிறுநீர்ப் பை (Kidney) கால்பாகம் இருந்தால் போதும்; நுரை (Lung) நாற்பது சதவிகிதம் போதும்; சிறுகுடல் (Small intestine) ஆறு சதவிகிதம் போதும். இவைகளை வைத்துக்கொண்டே அவன் நெடுங்காலம் வாழமுடிகிறது.

"இவன் மூளையிலே பாதி மூளியடா! இவன் எப்படித் தான் வாழ்கிறானோ?" என்று யாரையும் கேலி செய்யாதீர்கள். சில பேர் மூளையிலே பிளவை (Tumors) புறப்பட்டதால், பாதி மூளையை நறுக்கி எறிந்துவிட்ட பிறகும் அவர்கள் வாழ்ந் திருக்கிறார்கள்.

—'அன்னல்ஸ் அவ் இன்டெர்னல் மெடிஸின்'

அவிவேக பூரண குரு

★

தமிழில் தனியே உரைநடையில் கட்டுரையும் கதையும் எழுதும் வழக்கம் 18-ஆம் நூற்றாண்டில்தான் தோன்றி வளர்ந்தது என்று சொல்லவேண்டும். கிறிஸ்தவப் பாதிரிமார்கள் முதல் முதலாகத் தமிழில் பத்திரிகை வெளியிட்டார்கள். கிறிஸ்தவப் பாதிரியாகிய பெஷி என்பவர் முதல்முதல் சதுரகராதி என்ற தமிழ் அகராதியைத் தொகுத்து வெளியிட்டார். அவர் தேம்பாவணி முதலிய செய்யுள் நூல்களும், வேதியர் ஒழுக்கம் முதலிய உரைநடை நூல்களும் இயற்றியிருக்கிறார். 1680 - ஆம் ஆண்டில் இத்தாலியில் பிறந்த அவர் தமிழ் நாட்டுக்கு வந்து வாழ்ந்து தமிழ் கற்றுப் புலவர் ஆனார். வீரமா முனிவர், தைரியநாதசுவாமி என்ற பெயர்களைப் பெற்றார். 1747 - ஆம் ஆண்டில் அவர் காலமானார். அவர் எழுதிய அவிவேக பூரண குரு கதை என்பது நகைச்சுவை நிரம்பியது. அதில் வரும் நிகழ்ச்சிகளில் ஒன்றே பின்னே இருப்பது.

வீரமா முனிவர் (அவிவேக பூரண குரு கதை - வாடகை மாடேறிப் போனது): பல நாள் சென்ற பின்பு தூரப்பயணம் போகும்படி அவசரம் உண்டாயிற்று. சீஷர்கள், "அவ்வளவு தூரம் நம்முடைய குருவானவர் கால் நடையாகப் போக முடியாது! அதிகப் பிரயாசமாம்" என்று ஒரு மோழை மாடு வாடகைக்கு அமர்த்திக் கொண்டு வந்தார்கள். அதற்கு வாடகை நாளொன்றுக்கு மூன்று பணம் கொடுக்கத் தீர்த்துப் பல அலுவலினாலே விடிந்ததன் மேல் ஒரு ஜாமங் கடந்தபின் குருவும் சீஷர்களும் பயணம் புறப்பட்டுப் போனார்கள். கடுவேனில் என்னும் கோடைக்காலமாகையால், அவர்கள் நடக்க நடக்கக் கொள்ளி கொண்டு சுடுகிறது போலச் சுள்ளு சுள்ளென வெயிலெறிக்க, மரம் மட்டு, குளம் குட்டை இல்லாமையால் உண்ண நீரும் ஒதுங்க நிழலும் கிடையாத வெட்ட வெளியாகிய பாலை நிலத்தில் அகப்பட்டுக் கொண்டார்கள்.

அப்படியே போகப் போக அகோரமும் கடூரமுமான வெயிலின் வெப்பம்

பொறாமல் பசிய இளங் கீரைத் தண்டுபோலக் கிழக் குருக்கள் துவண்டு கீழே விழத் தலைப்பட்டார். அதைக் கண்டு சீஷர்கள் மாட்டை நிறுத்தி அவரை இறக்கி அவர் வெப்பத்தை ஆற்றுவதற்கு நிழல் எங்கும் இல்லாமையால் நிறுத்தப் பட்ட மாட்டின் நிழலிலே தரையில் துணியை விரித்துப் போட்டுக் கிடத்தி, விசிறி யில்லாததனால் வஸ்திரத்தி னாலே விசிறிக்கொண் டிருந் தார்கள். அவருக்கு அதிலே கொஞ்சம் ஆறுதலான பிறகு குளிர்ந்த காற்று வீச, மறுபடி யும் மாட்டின் மேலேற்றி மெள்ள மெள்ள நடத்திக் கொண்டுபோய்ப் பொழுது போகுமுன்னே ஒரு சிற் றூரிற் சென்று இறங்கினார் கள். அங்கே ஒரு சிறிய வீட்டின் நடையிற்போய் இருக்கும்படி வாசலுக்குள் நுழைந்தவுடனே, மாட்டுக் காரனுக்கு மூன்று பணத்தை எடுத்துக் கொடுத்தார்கள். அவன், "அது போதாது" என்றான். "இஃது என்னே? முன் உன்னோடே பேசிச் சம்மதித்த நாட்கூலி மூன்று பணந்தான் அல்லவோ?" என்று அவர்கள் சொல்ல, அவன் மறுத்து, "மாடு வாகனமாய் ஏறிப் போவ தற்காக உதவினதற்கு இந்தக் கூலி பொருந்தினது சரிதான். பிறகு நடு வழியில் வெயி லுக்குத் தடையாக உதவின தற்குக் கூலி கொடுக்க வேண்டாமா?" என்று கூச் சற்போட, "இஃது அநியா யம், அநியாயம்" என்று அவர்கள் கோபித்துக் கடூர மாய்ப் பேச, அப்புறம் மாட் டுக்காரனுக்கும் அவர்களுக் கும் சண்டையாய்ப் பெரிய ஆரவாரம் உண்டானதால், ஊரார் அறிந்து ஆண் பெண் பெரியோர் சிறியோரெல் லாம் ஒரு கூட்டமாகக் கூடி மொய்த்து வந்தார்கள். அவர்களில் நியாயக்காரன் ஒருவன் சந்தடியை விலக்கி வந்து, கூச்சலை அடக்கி, இரு திறத்தார் வழக்கையும் விசா ரித்து, "நல்லது; நான் சொல்லுகிற தீர்ப்புக்கு உள் ளாவீர்களோ? உங்கள் சம் மதி என்ன? சொல்லுங்கள்" என்று கேட்டுப் பின்பு சொல்லத் தொடங்கினான்.

"நான் சில நாளுக்கு முன் தூரதேசத்துக்குப் பிரயாண மாய்ப் போகையில் நடுவழி யிலே ஒரு ராத்திரி ஒரூரில் ஒரு பெரிய விடுதியில் தங்கி

னேன். அங்கே வந்தவர்க்கெல்லாம் வசிக்குமிடம் குடிக்கூலிக்கு விடுவதன்றிச் சாப்பிடுகிறதற்கு வேண்டிய சோறு கறி முதலானவைகளும் கிரயத்துக்குக் கொடுப்பார்கள். ஆகையால், 'உனக்கு ஏதாவது வேண்டுமா?' என்று அவர்கள் என்னைக் கேட்டபொழுது எனக்குச் செலவுக்குப் பணம் இல்லாமையால், 'நான் கட்டுச்சோறு கட்டிக்கொண்டு வந்திருக்கிறேன்; வேறொன்றும் தேவையில்லை' என்றேன். அத்தருணத்தில் அங்கு வந்த மற்றவர்களுக்கு ஒரு பெரிய ஆட்டுத்துடையை இருப்புச் சலாகையிற் கோத்து நெய் தடவித் தணலின்மேற் காட்டிப் பக்குவமாய்ச் சுழற்றிச் சுட்டார்கள். அது சிவக்க வேக வேக அதிற் பூசிய நெய் உருகி நெருப்பில் துளித்துப் புகையத் தலைப்பட்டது. அப்போது அதன் வாசனை அதிக ரம்மியமான பரிமளமாயிருந்தது. நான் கொண்டுவந்த கட்டுச் சாதத்தை அந்த மணத்தோடே சாப்பிடுகிறது நல்லதென்று நினைத்து, அதை அப்படியே சற்றுநேரம் சுழற்றிக்கொண் டிருக்கும்படி உத்தரவு கேட்டேன். அவ்வாறே சுழற்றிக்கொண் டிருக்க நான் சாதத்தை அவிழ்த்தெடுத்துச் சீலையோடே ஒரு கையால் அந்தப் புகையின் மேற் பிடித்து மற்றொரு கையால் சீக்கிரமாய் அள்ளி அள்ளி அவ்வாசனையிலேயே இன்பமாய்ச் சாப்பிட்டேன். பிறகு போகவேண்டுமென்று இருக்கையில் விடுதிக்காரன் வாசனை மோந்ததற்காகக் கூலி கேட்டான். நான் 'அதற்கேது கூலி?' என்றேன். அவன், 'கொடுக்க வேண்டும்' என்றான். நான், 'கொடுக்கிறதில்லை' என்று எழுந்து நடந்தேன். அவன், 'நீ கொடாமற் போகக் கூடாது' என்று ஆணையிட்டுத் தடுத்தான். இந்தப்படி இருவரும் வழக்கிட்டு, அந்த ஊர் அதிகாரியண்டைப் பிராதுக்குப் போனோம். அவனோ பூரண பண்டிதன்; சகல சாஸ்திர நிபுணன்; அதிக புத்திமான்; மகா சமர்த்தன்; மிகவும் நியாய சூக்ஷ்மந்தெரிந்தவன். அந்த மகாநுபாவன் பண்ணின நியாயத் தீர்ப்புக் கேளுங்கள். 'கறி தின்றதற்கு விலை பணமும், கறி மணம் மோந்ததற்கு விலை பணத்

தின் மணமும் ஆகும். இது தான் தீர்ப்பு' என்று, விடுதிக்காரனை அருகே அழைத்துப் பணம் நிறைந்த பையை எடுத்து, அவன் மூக்கிலே அழுந்த உரைத்துத் தேய்த்தான். அவனும், 'மூக்குப் போயிற்று! ஐயோ, மூக்குப் போயிற்று! இந்த மட்டில் வந்த கூலி போதும், போதும்' என்றான். பார்த்தீர்களோ! இதுவே நல்ல நியாயமும் உத்தம நீதியுமாம் அல்லவா? இந்தத் தீர்ப்புத்தான் உங்களுக்கும்; எப்படியென்றால், மாடேறி வந்ததற்குக் கூலி பணமும், மாட்டின் நிழலில் இருந்ததற்குக் கூலி பணத்தின் நிழலும் போதுமானவை. ஆகிலும் மாட்டு நிழற் கூலிக்கு இப்போது அஸ்தமித்ததனால் பண நிழல் அகப்படாது. அதற்குப் பதிலாகப் பணச் சத்தத்தை ஒத்துக் கொள்" என்று சொல்லி, அவனைச் சிக்கெனப் பிடித்துப் பணப் பையைத் தூக்கி அவன் காதிலே உரமாகத் தாக்கும்படி அதனால் மோதியடித்து, "பணச் சத்தம் கேட்டையா?" என்றான். அவனும், "ஆமையா, ஆமையா; கேட்டேன், கேட்டேன். காது நோகிறது. போதும் கூலி, போதும், அப்பா; உனக்குப் புண்ணியமாய்ப் போகிறது; என்னை விட்டுவிடு" என்றான். அந்தச் சமயத்தில் அவனைப் பார்த்துக் குருவும், "உன் மாடு எனக்குப் போதும். இந்தச் சஞ்சலம் இனி ஆகாது. நீ மாட்டை ஓட்டிக்கொண்டு போ. இன்னும் கொஞ்சந் தூரந்தான் பயணம் போக வேண்டும். காலமே மெள்ள நடந்து போகிறேன்" என்று அவனைப் போகச் சொல்லிப் பின்பு நியாயக்காரனைப் பார்த்து, "ஐயா! நீர் எங்கள் வழக்கைப் பாரபக்ஷமில்லாமல் எள்ளுக்காய் பிளந்தாற்போலச் சரியாய்த் தீர்த்தீர்" என்று அவனைப் புகழ்ந்து ஆசீர்வதித்து அனுப்பினார்.

நகைச் சுவை

உங்களுக்கு நேர்ந்திருந்தால் உங்களைப் பித்துப் பிடிக்கச் செய்திருக்கக்கூடிய ஒரு சம்பவத்தைக் கண்டு உங்களுக்குச் சிரிப்பு வருகிறதே, இதுதான் நகைச் சுவை.

—'க்வோட்'

பாபுராவ் பதில் சொல்லுகிறார்

கேட்பவரின் கேள்விகளுக்கு, 'பிலிமிண்டியா' ஆசிரியர் பாபுராவ் அளிக்கும் பதில்கள் பிரசித்தம். அவைகளில் விறுவிறுப்பும் கேலியும் நிறைந்திருக்கும்.

கேள்வி: ஒருவனே ஏழு பிறவிக்கும் கணவனாக வரவேண்டும் என்று ஹிந்து மனைவி பிரார்த்திக்கிறாள். ஹிந்து ஆடவன் என்ன பிரார்த்திக்கிறான்?

பதில்: ஒவ்வொரு பிறவியிலும் ஏழு மனைவிகள் வேண்டுமென்று தான்.

* * *

கே: கிராமத்து டாக்டர்கள் ஏன் நிறையச் சம்பாதிக்கிறதில்லை?

ப: அவர்கள் டாக்டரென்ற பெயரைக் காப்பாற்றிக்கொள்ள நோயாளிகளைச் சொஸ்தப்படுத்த வேண்டியிருக்கிறது. நோயாளிகள் நெடுங்காலம் சொஸ்தமாகாமல் இருந்தால்தான் டாக்டருக்குப் பணம் வரும்.

* * *

கே: இருபதாவது நூற்றாண்டில் யார் ஆண் தெய்வங்கள்? யார் பெண் தெய்வங்கள்?

ப: அரசியல்வாதிகளே ஆண் தெய்வங்கள்; ஸினிமா நட்சத்திரங்களே பெண் தெய்வங்கள்.

* * *

கே: மை இல்லாத பேனா—?

ப: ஊமை மங்கைக்குச் சமானம்,

* * *

கே: முட்டாள் உபதேசம் செய்ய முடியுமா?

ப: உபதேசம் செய்கிறவர்கள் எல்லாரும் முட்டாள்களே. அவர்கள் உலகத்தையே திருத்தத்தான் புறப்படுகிறார்கள். இவ்வளவு ஊக்கமும் நல்ல எண்ணமும் இருந்துங்கூட ஒரு மனிதனையாவது மாற்ற அவர்களால் முடிவதில்லை. சாதுக்கள் சக்தியுடையவர்களாக இருந்திருந்தால் இந்த அரசியல் வாதிகளுக்கு வேலையே இல்லாமல் போயிருக்குமே.

* * *

கே: பொதுக் காரியாலயங்களுக்குத் திருவுள்ளச் சீட்டுப் போட்டுப் பொறுக்கின மனிதர்களை நியமித்தால் என்ன?

ப: அப்படிச் செய்தாலாவது கொஞ்சம் நல்ல நிர்வாகிகள் வரலாம். இப்போது தேர்ந்தெடுக்கும் முறையில் மருமான்களும் மாப்பிள்ளைகளுமே வருகிறார்கள்.

* * *

கே: காஷ்மீரில் பொதுஜன வாக்கு எடுத்து அது பாகிஸ்தானுக்குப் போய்விட்டதானால் அதைக் காப்பாற்ற இது வரைக்கும் இந்தியா செலவழித்த பணத்தை எப்படித் திரும்பப் பெறுவது?

ப: அமெரிக்கர்கள் தாங்கள் செலவழித்த டாலர்களைச் சியாங் கே ஷேக்கிடமிருந்து எப்படி வாங்குவார்களோ அப்படி. அமெரிக்கர்கள் பணத்தைச் சவக்குழியில் போட்டார்கள்; நாம் பச்சைப் பள்ளத்தாக்கில் போட்டிருக்கிறோம்.

கே: நீங்கள் நம் அரசாங்கத்து அயல்நாட்டு மந்திரியாக இருந்தால், உங்களுடைய அயல் நாட்டுக் கொள்கை எப்படி இருக்கும்?

ப: உள்நாட்டுப் பலம் இல்லாமல் வெளிநாட்டுக் கொள்கை இல்லை. நான் ஆயுதச் சட்டத்தை எடுத்திருப்பேன். வெவ்வேறு விதமான ஆயுத உற்பத்திக்கு உற்சாகமூட்டுவேன். 20 வயதுக்கு மேல் முப்பது வயதுக்குள் இருக்கும் ஒவ்வோர் இளைஞனுக்கும் கட்டாய ராணுவப் பயிற்சி அளிப்பேன். ராணுவ விளையாட்டுப் போட்டிகளை ஆதரித்து வளர்த்து நாடு முழுவதையும் ஐந்து வருஷ காலத்தில் ஆயுத வீரர் நிறைந்த பாளையம் ஆக்குவேன். பழங்காலத்திலும் சரி, சமீப காலத்தில் சிவாஜியின் நாள் வரையிலுங்கூட, யுத்தத்துக்கும் நம்முடைய பாதுகாப்புக்கும் வேண்டிய ஆயுதங்களை நாமே உற்பத்தி செய்து வந்தோம். இந்தக் காலத்திலோ நயமான நூல் நூற்க நகத்தைக்கூட வளர்க்க இயலாது. ஏனென்றால், இருநூறு வருஷகாலமாகப் பிரிட்டிஷார் அப்படிச் செய்யக் கூடாதென்று தடுத்துவிட்டார்கள். காந்தியடிகள் கொல்லுவதற்கேற்ற முனையில்லாத ஆயுதத்தைக் கொண்டு வந்தார். நேருவோ ஆற்ற மாட்டாதவர்களின் ஆயுதமாகிய நடுநிலைமையை மேற்கொண்டார். ஒவ்வொரு வீட்டிலும் ஒரு ராணுவ வீரனை வைத்துக்கொண்டு பிறகு நம்முடைய அண்டை வீட்டில் உள்ள அபாயகரமான ஸ்டாலினோடு கைகுலுக்கி அரிசி, கோதுமை, ஆயுதம், விஞ்ஞானிகள், மற்றத் தேவைகள் ஆகியவற்றைக் கேட்டிருப்பேன். பத்தாயிர மைலுக்கு அப்பாலுள்ள நிச்சயமற்ற சிநேகிதனை, தன்னுடைய பைத்தியக்காரத்தனத்தாலும் முரட்டுத்தனத்தாலும் உலகத்தை ஹதமாக்கும் வழிக்கு இழுத்துச் செல்லும் சிநேகிதனை நம்ப வேண்டிய அவசியமே எனக்கு இராது. பிரிட்டன், அமெரிக்கா, ருஷியா என்ற பேராசை பிடித்த நாடுகளுக்கிடையே இருந்தும் ஆப்கனிஸ்தானம் ஏன் இன்றும் சுதந்தர நாடாக இருக்கிறது? ஏனென்றால், அங்கே ஒவ்வொரு வீட்டிலும் ஒரு வீரனும் ஒரு துப்பாக்கியும் இருக்கின்றன. இரண்டும் மலையில் விளைந்த சுதேசிப் பண்டங்கள். ஒரு காலத்தில் உலகத்துக்கே ஆயுதசாலையாக இருந்த இந்தியா இப்போது துருப்பிடித்த உலைக்களங்களைக் கொண்ட சுடுகாடாக இருக்கிறது; கொல்லத் தொழிலாளர்களெல்லாம் வியாபாரிகளும் கள்ளச் சந்தைக்காரர்களும் ஆகிவிட்டார்கள்.

சரியான தீர்ப்பு

ஸ்காட்லாந்து தேசத்து ஜட்ஜி ஒருவரிடம் அண்ணன் தம்பி பாகப் பிரிவினை வழக்கொன்று வந்தது. அவர் வழங்கிய சரித்திரப் பிரசித்தமான தீர்ப்பு இது: 'சொத்தையெல்லாம் அண்ணன் இரண்டு பங்காகப் பிரிவினை செய்யவேண்டியது. அதில் தனக்கு வேண்டிய பங்கைத் தம்பி முதலில் தேர்ந்தெடுத்துக்கொள்ள வேண்டியது.'

—பிரான்ஸிஸ் லியோ கோல்டன், 'மகஸின் டைஜெஸ்ட்.'

நம் நாட்டில் மிகச் சிறந்து விளங்கிய இந்தக் கலை இன்று மங்கிவிட்டது. ஆனால் அமெரிக்காவிலோ வலுத்துவருகிறது!

கல்வியில் பொம்மலாட்டம்

வி. ஜே. எப். குழந்தை

பொம்மலாட்டத்தைக் கண்டு களிக்காதவர்கள் உலகில் யாரும் இருக்க முடியாது. அதில் நாடகப் பண்பு நிறைந்திருக்கிறது. சிருஷ்டிக் கலைக்கு அது ஒரு முக்கியத் தூண்டுகோலாகவும் இருக்கிறது. அமெரிக்காவில் பொம்மலாட்டம் வெகு காலமாய் இருந்து வருகிறது. அதன் வரலாறு மிகவும் ரசமானது. ஸினிமா, ரேடியோ, டெலிவிஷன் ஆகியவை தோன்றியுள்ள இப்போதுங்கூட ஜனங்கள் பொம்மலாட்டத்தையும் கண்டு களிக்கிறார்கள்.

1742-ஆம் வருஷம் டிசம்பர் மாதம் 30-ஆம் தேதியன்றுதான் முதல் முதல் அமெரிக்காவில் பொம்மலாட்டம் நடைபெற்றது. பிலடெல்பியா என்ற ஊரில் சந்தோஷமான முடிவோ சோகமான முடிவோ கொண்ட ஒரு ரசமான நாடகத்தை இரண்டு அடி உயரமுள்ள பொம்மைகளைக் கொண்டு நடக்கச் செய்தார்களாம். கப்பல், கடல் இவைகளைத் தவிர, பஞ்ச் என்பவரும் அவர் மனைவி ஜோன் என்பவளும் வேடிக்கையாகப் பேசுவது போலுள்ள காட்சிகளையும் காட்டினார்களாம். பெரும்பாலும் இந்தப் பொம்மலாட்டங்கள் இங்கிலாந்து, பிரான்ஸ், ஸ்பெயின் முதலிய தேசங்களிலிருந்துதான் முதலில் அமெரிச்காவுக்கு வந்தன. நாளடைவில் அமெரிக்கர்கள் இந்த நூதனக் கலையிலுள்ள சிறந்த அம்சங்களைக் கண்டு, இதை ஒரு பொழுது போக்காகப் பயன்படுத்தத் தொடங்கினார்கள்.

1749-ஆம் வருஷம் ஒரு பொம்மலாட்டக் கம்பெனி, ஜூலை மாதத்திலிருந்து நவம்பர் மாதம் வரையில் பிரத்தியேகமான ஒரு கொட்டகையில் நாடகங்களைக் காண்பித்தது. இங்கிலாந்திலிருந்து அடிக்கடி இந்த மாதிரி கம்பெனிகள் அமெரிக்காவுக்கு வந்து பல இடங்களுக்குச் சென்று நடித்துக் காட்டின. அது முதல் ஜனங்களுக்குப் பொம்மலாட்டங்களைக் காண்பதில் ஒரு தனி ருசி வளர்ந்து வந்தது. 1829-ஆம் வருஷம் நியூயார்க்கில் சாதாம் ம்யூஸியம் என்ற இடத்தில் அதுவரையிலும் கண்டிராத ஓர் உயர்ந்த பொம்மலாட்ட நாடகம் நடைபெற்றதாகச் சொல்லுகிறார்கள். யந்திர சாதனங்களுடன் கூடிய தியேட்டர்கள் முதல் முதல் 1836-ஆம் வருஷம் நியூயார்க் நகரில் ஆரம்பமாயின. 1840-ஆம் வருஷம், பேசும் சூத்திரப் பொம்மைகளுடன் அமெரிக்காவுக்கு வந்த இத்தாலி தேசத்துப் பொம்மலாட்டக்காரர்களின் உதவியைக் கொண்டு 'பஞ்சும் ஜூடியும்' என்ற தமாஷ் கதையை அவர்கள் பல இடங்களில் நடித்துக் காட்டி-

மூலம்: அமெரிக்கன் ரிபோர்ட்டர் (ஆங்கிலம்: 30-5-'51), புது டில்லி.

னார்கள். இந்த ஆட்டம் மிகப் பிரபலமாகி நியூ யார்க்கிலுள்ள பார்க் தியேட்டரில் மிகவும் மும்முரமாக நடைபெற்றது. கண்ட இடங்களிலெல்லாம் உள்நாட்டுப் போர் நடக்கும்போது, போர் முனைகளில் கூடப் பொம்மலாட்டங்கள் நடைபெற்றன. "அமெரிக்காவுக்கு வரும்போது இங்கிலீஷ்காரராயிருந்த பஞ்ச் மிக விரைவில் அமெரிக்க மனிதராகிவிட்டார்" என்று சொல்லிக்கொண்டார்கள். ஆனால் பொம்மலாட்டத்தைக் காண்பதில் ஜனங்களுக்கு எவ்வளவோ உற்சாகம் இருந்தும், நாட்டில் அது மிகவும் நிதானமாய்த்தான் வேரூன்றி வந்தது.

1935 - ஆம் வருஷம் கலைப் பற்றுள்ள சிலர் தங்கள் நண்பர்களின் பொழுதுபோக்குக்காக நூதனமான பொம்மலாட்டம் ஒன்றைச் சிருஷ்டித்தார்கள். அவர்களில் சிலர் இதையே தம் தொழிலாகக் கொண்டு பொதுமக்களின் மனத்தையும் கவர்ந்தார்கள். எல்லன் வான் வால்கன்பர்க், டோனி ஸார்க், ரெமோ பபானோ என்ற மூன்று பேருந்தான் அமெரிக்காவில் பொம்மலாட்டக் கலையை அப்பியசித்தவர்களில் முதன்மையானவர்கள். இந்த மூன்று பேரிலும் டோனி ஸார்க் என்பவரே இந்தக் கலையில் மிக அதிகமாக ஈடுபட்டு வேலை செய்தவர். இங்கிலாந்திலிருந்து அமெரிக்காவுக்கு வந்து ஸார்க் முதலில் ஒரு பத்திரிகையில் படம் போடும் வேலையில் அமர்ந்தார். ஆனால் பொம்மலாட்டத்தில் இருந்த உற்சாகத்தாலும் தேர்ச்சியாலும் தனியே தம் நண்பர்களுக்குச் சில ஆட்டங்களை நடித்துக் காண்பித்தார். அவருடைய கலைத் திறமையைக் கண்டு வியந்து, அவருடைய நண்பர்கள் அவர் ஆட்டங்களைப் பொது ஜனங்களும் பார்க்கும்படி ஏற்பாடு செய்தார்கள். வின்த்ராப் ஆமீஸ் என்ற ஒரு தியேட்டர் மானேஜரின் உதவியால் இந்த ஆட்டங்கள் சிறப்பாக நடைபெற்றன. 'டில்லியில் ஓர் இரவு' என்ற ஒரு நாடகத்தைச் சில பாட்டுக்களுடன் ஸார்க் பொம்மலாட்டத்தில் காட்டினார். 'ரோஜாவும் மோதிரமும்' என்ற மற்றொரு நாடகமும் மக்களின் மனத்தைக் கவர்ந்தது. நடிக்கும் பொம்மைகள், திரைகள், விளக்குகள், நிகழ்ச்சி விவரங்களை அச்சிட்ட தாள்கள் உட்பட யாவும் ஸார்கின் கலைத்திறமைக்குச் சான்றாக விளங்கின. சில வருஷங்களுக்குப் பிறகு ஸார்க் ஊரில் நடக்கும் பொம்மலாட்டங்களை மேற்பார்வைமட்டும் பார்த்து வந்தார். அதனால் யாருடைய ஆட்டமாயிருந்தாலும் அதில் ஸார்கின் கலைத் திறமை சேர்ந்து விளங்கிற்று. அவரைக் காப்பியடித்தும் அவருக்குப் போட்டியாகவும் அநேகம் பேர் இந்தத் துறையில் கிளம்பினார்கள். ஆயினும் ஸார்கை ஒருவரும் மிஞ்ச முடியவில்லை. அவர் காட்டும் ஆட்டங்களில் ஜனங்களுக்கு ஒரு தனி மோகம் ஏற்பட்டிருந்தது. மேலும் மேலும் இந்த மாதிரி ஆட்டங்கள் காட்டவேண்டும் என்றும், தாமே அந்தப் பொம்மைகளைச் செய்யவேண்டும் என்றும் ஜனங்களுக்கு அடங்காத ஆவல் உண்டாயிற்று. ஸார்குடன் வேலை செய்தவர்கள் தனித்தனியே தொழில் நடத்தத் தொடங்கினார்கள். அவருக்குப் போட்டியாகக் கிளம்பியவர்கள் கூட அவருடைய சொல்லைக் கேட்டு அதன்படி நடந்தார்கள். பொம்மலாட்டக் கலையை அமெரிக்காவில் நன்றாய் நிலைக்கும்படி

செய்துவிட்டு 1940-ஆம் வருஷம் ஸார்க் மரணமடைந்தார்.

எதிலும் ஏதாவது ஒரு விசேஷத்தைக் கண்டுபிடித்து அதைப் பயன் படுத்தும் மனப்பான்மையுள்ள அமெரிக்கர்கள் வெறும் பொழுது போக்குக்காக அமைந்த இந்தப் பொம்மலாட்டத்தையும் மேன்மையாக வளர்த்துவிட்டார்கள். சரித்திரம், இலக்கியம் சம்பந்தமான அம்சங்களையுடைய பொம்மலாட்டங்கள் சிறுவர்களுக்குக் கல்வி அறிவைப் புகட்டுவதுமட்டும் அல்ல; இந்த ஆட்டங்களுக்கு வேண்டிய சாதனங்களைத் தயாரிப்பதால் சிறுவர்களின் கைத்திறமையும் விருத்தியாகிறது. கை கால்களை அசைத்து அபிநயம் செய்யவும் பேசவும் சிறுவர்கள் கற்றுக்கொள்வதற்குப் பொம்மலாட்டங்கள் பேருதவியாயின. 1926-ஆம் வருஷத்திலிருந்தே மாடிஸன் மாணவர்கள் கிளப்பில் பொம்மலாட்டம் மிகவும் முக்கியமாய் விளங்கத் தொடங்கிவிட்டது.

இதற்குப் பிறகு 35 கல்வி ஸ்தாபனங்களில் பொம்மலாட்டக் கலையைக் கல்வியில் ஓர் அம்சமாக வைத்துக்கொண்டார்கள். கற்பனையையும் கலைத்திறமையையும் அளிக்கும் இந்தக் கலையில் மாணவர்களும் மிக்க ஆர்வத்துடன் ஈடுபட்டார்கள். படிப்பாகவும் பொழுது போக்காகவும் பொம்மலாட்டக் கலையில் பயிற்சி அளிப்பதில் சிக்காகோ ஆர்ட் இன்ஸ்டிட்யூட், கொலம்பியா யூனிவர்ஸிட்டி டீச்சர்ஸ் காலேஜ், நியூ யார்க் நகரில் உள்ள ஹண்டர் காலேஜ், நியூ யார்க் யூனிவர்ஸிடி ஸ்கூல் அவ் எடுகேஷன், வாஷிங்டன் யூனிவர்ஸிட்டி, ஓஹியோ ஸ்டேட் யூனிவர்ஸிட்டி காலேஜ், வேன் யூனிவர்ஸிட்டி காலேஜ் ஆகியவை பிரதானமாக விளங்குகின்றன.

ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் தாளத்துடனும் அபிநயத்துடனும் சங்கீதத்தைக் கற்றுக்கொடுப்பதற்குப் பொம்மலாட்டங்கள் உபயோகமாயிருக்கின்றன. ஜூனியர் ஸீனியர் வகுப்பு மாணவர்களுக்கு வகுப்பில் நடக்கும் பாடங்களை நாடக பாணியில் அமைத்துப் பொம்மலாட்டத்தின் மூலம் கற்றுக்கொடுக்கிறார்கள். கலாசாலைகளிலோ கலை சம்பந்தமான விஷயங்களைத் தெரிந்துகொள்வதில் பொம்மலாட்டம் அபாரமான உதவி புரிகிறது.

பள்ளிக்கூடப் பாடங்களில் பொம்மலாட்டத்தையும் ஒரு பாடமாக வைத்திருப்பது கல்வித்துறையில் அது எவ்வளவு ஸ்திரமான ஸ்தானத்தை வகிக்கிறது என்பதைக் காட்டுகிறது. குழந்தைகளின் இயல்பும், அவர்களைச் சரியானபடி நடக்கும்படி பழக்குவதும் பெரிய பிரச்னை. மிகச் சிறுவயதில் தங்களுக்கு என்ன வேண்டும் என்பதைச் சொல்லுவதற்கு அவர்களால் எப்படி முடியும்? 'பொம்மலாட்டக் காட்சி ஒன்றை நடித்துக் காண்பித்தால் அவர்களுக்கு என்ன வேண்டும் என்பதை அறிந்து கொள்ளலாம்' என்னும் விஷயம் தெரிந்தது. அந்தக் காட்சியைப் பார்க்கும்போது குழந்தைக்கு ஏற்படும் முக பாவத்திலிருந்து அதன் மனத்தை நன்கு அறிய முடிந்தது. நியூ யார்க் நகரிலுள்ள பெல்லெவ்யூ ஆஸ்பத்திரியில் குழந்தைகளின் மனத்தத்துவ ஆராய்ச்சியின் பொருட்டுப் பொம்மலாட்டங்களையே முக்கிய சாதனமாக வைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆஸ்பத்திரியின் பெரிய டாக்டர் லாரெட்டா பெண்டர் என்பவர்தான் 1935-ஆம்

வருஷம் இந்தமாதிரி நூதனமான வழியில் குழந்தைகளின் மனத்தத்துவ ஆராய்ச்சியைத் தொடங்கினர். அமெரிக்காவிலுள்ள அநேகம் ஆஸ்பத்திரிகள் இந்த வழியைப் பின்பற்றி நல்ல பயனை அடைந்திருக்கின்றன.

அமெரிக்காவிலுள்ள பார்க்குகள், மைதானங்கள் போன்ற எல்லாப் பொது இடங்களிலும் பொம்மலாட்டத்தை ஒரு விநோதமான பொழுது போக்காகக் காட்டி வருகிறார்கள். ஒரு டிரக் வண்டியில் பொம்மலாட்டச் சாதனங்களை ஏற்றிக்கொண்டு, மைதானம் மைதானமாய்ச் சென்று ஆடிக்காட்டும்போது குழந்தைகள், பெரியவர்கள் எல்லாரும் கண்டு களிப்பார்கள்.

விளம்பரத் துறையிலும் பொம்மலாட்டம் பெரிதும் சாதகமாயிருக்கிறது. யுத்தகாலத்தில் மக்களின் தேசபக்தியைத் தூண்டவும், விரோதியைச் சிறுமைப்படுத்தவும் பொம்மலாட்ட மூலம் ஜனங்களுக்குப் பிரசாரம் செய்தார்கள். சைன்யங்களுக்கு உற்சாகமூட்டுவதற்கும் அவை பயன்பட்டன. காயமடைந்த வீரர்களுக்கு ஆஸ்பத்திரிகளில் இந்தப் பொம்மலாட்டங்களை ஏற்பாடு செய்து உற்சாகமூட்டினர்கள்.

இந்தியாவிலும் பொம்மலாட்டம் எல்லாரும் கண்டு களிக்கும் கலையாக விளங்குகிறது. சாதாரண மக்கள் கூட இதில் மிகவும் தேர்ச்சி பெற்றிருக்கிறார்கள். ஆனால் அமெரிக்காவைப் போல் ஆஸ்பத்திரியிலும் பள்ளிக்கூடத்திலுங்கூட அதைக் கொண்டு வந்து பயன்படுத்தவில்லை. சங்கீதம், அபிநயம், கதை முதலிய எல்லா அம்சங்களும் பொருந்தியிருப்பதால் வர்தா கல்வித்திட்டத்தில் கண்டிருப்பது போல் கல்வி புகட்டும் விஷயத்தில் இந்தப் பொம்மலாட்டங்கள் மிகச் சிறந்த சாதனமாக இருக்கும்.

ராணுவ சேவை

பிரபல ரேடியோ நாடக ஆசிரியர் ஒருவரை, ராணுவ சேவைக்கு வந்து சேரும்படி உத்தரவு போட்டார்கள். ராணுவத்துக்கு ஆள் சேர்க்கும் ஸார்ஜெண்டை அவர் போய்ப்பேட்டி கண்டார். அவரைப்பற்றிய விவரங்களை ஒரு நமூனாவில் குறித்துக்கொள்வதற்காக, "நீர் ஏதாவது பள்ளிக்கூடம் போயிருக்கிறீரா?" என்று கேட்டார் ஸார்ஜெண்ட்.

"ஏதாவது பள்ளிக்கூடமா? நான் கொலம்பியா சர்வகலாசாலையில் ஸயின்ஸ் பட்டதாரி; கார்னெல் சர்வகலாசாலையில் உயர்தரப் பட்டதாரி; மறுபடியும் கொலம்பியாவில் பத்திரிகைத் தொழில் படிப்பில் பட்டம் பெற்றவன்; மெக்ஸிகோ சர்வகலாசாலையில் ஒரு பட்டம் வாங்கியவன்; அப்புறம்......"

சலித்துப் போனர் ஸார்ஜெண்ட். அலட்சியமாக ஒரு ரப்பர் ஸ்டாம்பை எடுத்தார். மையில் தோய்த்தார். அச்சடித்த நமூனாவில் ஒரு கேள்விக்கு முன்னே 'பட்'டென்று ஒரு குத்தப் போட்டார். அந்த முத்திரையிலே ஸ்பஷ்டமாக விழுந்து துலங்கியது இந்த வாசகம்: 'எழுதப் படிக்கத் தெரிந்தவன்.'

—லியனர்டு லயான்ஸ்

குழந்தைகள் குறும்பு

இவை போன்ற துணுக்குகளை, தாங்கள் கண்டு கேட்ட அநுபவங்களிலிருந்து யாரும் நமக்கு அனுப்பலாம். பிரசுரிக்க அங்கீகரித்த ஒவ்வொரு துணுக்குக்கும் 2 ரூபாய் சம்மானம் அளிக்கப்படும். பிரசுரிக்காதவற்றைத் திருப்பி அனுப்ப முடியாது. பதிலும் எழுத முடியாது. —ஆசிரியர்.

என் தங்கைக்கு நாலு வயது பூர்த்தியாகிவிட்டது. ஐந்தாவது பிறந்த நாளை உத்தேசித்து ஏதாவது வாங்கிக்கொடுக்கலாம் என்று அவளைக் கடைவீதிக்கு அழைத்துப் போனேன். செலுலாய்டு பொம்மைக் குழந்தை ஒன்றை வாங்கிக்கொடுத்தேன். பிறகு பஸ்ஸில் ஏறினோம். ஞாபக மறதியாக, நான் போக வேண்டிய இடத்துக்கு ஒரு டிக்கட் மட்டும் கேட்டேன். என் தங்கையைக் கவனித்த கண்டக்டர், "ஸார், குழந்தைக்கு டிக்கட் வாங்கலையா? வயசு அஞ்சு இருக்கும்போல் இருக்கிறதே" என்று ஒரு டிக்கட்டைக் கிழித்துக்கொண்டே கேட்டான். உடனே மற்றொரு டிக்கட்டும் கேட்டு வாங்கிக்கொண்டேன். அப்போது என் தங்கை, "அண்ணா! கண்டக்டர் எனக்குக் கொடுத்த டிக்கட்டை என்கிட்டவே கொடுத்துடு" என்று ஒரு டிக்கட்டை வாங்கி வைத்துக்கொண்டு தன் பொம்மைக் குழந்தையுடன் கொஞ்சி விளையாட ஆரம்பித்தாள். கண்டக்டர் குழந்தை சூடிகையாக இருப்பதைப் பார்த்துத் தமாஷாக அவளிடம், "எம்மா! உன் குழந்தைக்கு ஒரு டிக்கட் வாங்கிக்கலையோ?" என்று பொம்மையைச் சுட்டிக் காட்டிக் கேட்டான்.

அவள் அதற்கு, "என் குழந்தைக்கு இன்னும் வயசு அஞ்சாகலையே! இப்பத்தானே வாங்கிண்டு வரேன்" என்று பளிச்சென்று பதில் அளித்தாள்.

—ச. சி. கங்காதரன், 29, தானப்ப முதலி அக்கிரகாரம், மதுரை.

மணி என் தம்பி. அவன் ஒரு நாள் விஞ்ஞான பாடத்தை மும்முரமாகப் படித்துக்கொண்டிருந்தான்:



"ஒரு கல்லை உயர எறிந்தால் அது திரும்பிப் பூமியிலேயே விழுகிறதல்லவா? மரத்திலிருந்து பழம், காய் முதலியவை தாமாகவே பூமியில் விழுகின்றனவே; அவை ஏன் மேலே போகக்கூடாது? அல்லது அந்தரத்திலேயே ஏன் நிற்கக்கூடாது? பூமியை நோக்கி ஏன் விழவேண்டும்—இந்த விஷயத்தைப்பற்றி நியூட்டன் என்ற விஞ்ஞானி பல ஆராய்ச்சிகள் நடத்தினார். முடிவில், எல்லாப் பொருள்களையும் தன்னிடம் ஆகர்ஷிக்கும் சக்தி பூமிக்கு உண்டு என்று அவர் கண்டுபிடித்தார்."

இந்த விஷயத்தைத் திரும்பத் திரும்ப உரத்துப் படித்துக்கொண்டிருந்த அவனுக்குத் திடீரென்று ஏதோ சந்தேகம் வந்துவிட்டது. எழுந்து அவசரம் அவசரமாக என்னிடம் வந்தான். "ஏன், அண்ணா, ஆகர்ஷணசக்தி உண்டு என்று நியூட்டன் கண்டுபிடிப்பதற்கு முன்னால் உயர எறிந்த கல் கீழே விழுந்திராதோ இல்லையோ?" என்று கேட்டான்.

—டி. ஆர். வி. ரமணன், 205, அடையவளைந்தான் தெரு, ஸ்ரீரங்கம்.

என் உறவினர் ஒருவரின் வீட்டுக்கு ஒரு நாள் போயிருந்தேன். அவருக்கு 2 வயது மகன் ஒருவன் இருந்தான். அவர்கள் வீட்டில் எங்கே பார்த்தாலும் பல போட்டோப் படங்களை மாட்டியிருந்தார்கள். பையனைக் கூப்பிட்டு, "இது யார்? இது யார்?" என்று ஒவ்வொரு போட்டோவாகச் சுட்டிக்காட்டிக் கேட்டு வந்தேன்.

அவன், "இது எங்க அப்பா. இது எங்க அம்மா. இது அக்கா" என்று பதில் சொல்லிக்கொண்டே வந்தான். அவன் போட்டோ மட்டும் அங்கே இல்லை. "உன் போட்டோ எங்கேடா?" என்று கேட்டேன்.

"இதோ கொண்டுவரேன்" என்று பையன் உள்ளே ஓடினான். சற்றுநேரம் கழித்து ஒரு சிறிய நிலைக் கண்ணாடியைக் கொண்டு வந்தான். அதைத் தன் முகத்துக்கு எதிரே ஜம்மென்று பிடித்துக்கொண்டு, "இதோ, பார் என் போட்டோ" என்றான்!

—கு. அங்குசாமி, 30, பண்டாரத் தெரு, நாமக்கல்.

இவருடைய ராஜதந்திரம் இன்று பிடிக்கா திருக்கலாம். ஆனால், இவர் ஒரு மேதை என்பதை யாரும் மறுக்க முடியாது.

மக்கியவெல்லியின் அறிவுச்சுடர்

என். ஜி. எல். மாரஸிங்கே

"யுத்தத்தை நிறுத்தும் யுக்தியாகத் தவறு செய்வது சுத்தப் பிசகு. ஏனென்றால், அப்படித் தடுத்த யுத்தம் தள்ளிப் போகுமேயொழிய அடியோடு ஒழிந்து போகாது" என்று மக்கியவெல்லி தாம் எழுதிய பிரபல நூல் ஒன்றில் குறிப்பிட்டிருக்கிறார். லொரென்ஸோ டி மெடிஸி என்ற இளவரசருக்கு ராஜதந்திர முறைகளைப் போதிப்பதற்காக 'அரசகுமாரன்' என்ற இந்த நூலை அவர் எழுதினார். இதிலுள்ள கடுமையான உபதேசம் அநேகம் பேருக்குப் பிடிக்காது. ஆனால் யதேச்சாதிகாரம் செலுத்துவோர் இதைத் தங்கள் வேதமாகவே மதித்து வருகிறார்கள்.

"பிழை செய்தவனைப் போனால் போகட்டும் என்று விட்டு விடக் கூடாது. அப்படி விட்டால் அது நமக்கு நாமே நாசத்தைத் தேடிக்கொண்டமாதிரிதான். தன்னைச் சுற்றித் தீமையே நிறைந்திருக்கும்போது ஒருவன் நன்மையைக் கடைப்பிடித்தால் அவன் அதில் சிக்கி மடியவேண்டியதுதான்" என்கிறார் மக்கியவெல்லி.

அவருடைய இன்னும் சில கருத்துக்கள் இவை: "பிறர் நம்மிடம் அன்பு செலுத்துவதைவிட நம்மைக் கண்டு அஞ்சுவதே மேல். பொதுவாக மனிதனே நன்றி கெட்டவன்; நேர்மையில்லாதவன்; கோழை; நம் கை ஓங்கியிருக்கிற வரையில் நமக்கு அடிமையாகவே இருப்பான்; தன் ரத்தம், சொத்து, வாழ்வு, மக்கள் எல்லாவற்றையுங் கூடக் கொடுக்க முன் வருவான். ஆனால் நமக்குக் கஷ்டதசை வந்துவிட்டது என்று தெரிந்ததும் நமக்கு எதிராகத் திரும்பிவிடுவான்."

"கடுமையாக நடந்துகொள்ள வேண்டும்; மற்றவர்கள் பேச்சை நம்பவே கூடாது; நம்பினால் நம் பாடு அதோகதிதான்."

"பிரித்தாளும் முறை அரசருக்கு ஏற்றதல்ல. பலம் பொருந்திய அரசாங்கத்தில் கட்சிப் பிரதி கட்சிகளுக்கு இடமே இல்லை. சமாதான காலத்தில் இந்த முறை பயன்படலாமே தவிர யுத்தகாலத்தில் இது செல்லாது."

"அறியும் திறனில் மூன்று வகை உண்டு: தானே யோசித்து உணர்வது ஒரு வகை. மற்றவர்கள் யோசித்து உணர்ந்ததை அறிந்து மெச்சுவது இன்னொரு வகை. தனக்காகவும் தெரியாது; பிறத்தியார் சொன்னாலும் தெரிந்துகொள்ள முடியாது. இது மூன்றும் வகை. இவைகளில் முதல் வகை உத்தமம்; இரண்டாவது மத்திமம்; மூன்றாவது அதமம்."

காப்பிரைட்: இண்டியன் ரெவ்யூ (ஆங்கிலம்: ஏப்ரல் '51), சென்னை.

மக்கியவெல்லி பல நாடுகளைச் சுற்றிப் பார்த்தவர். லத்தீன் மொழியும் பழைய இத்தாலிய நூல்களும் நன்றாகப் பயின்றவர். ஐரோப்பாவில் பல ராஜ சபைகளுக்குப் போய் அநுபவப்பட்டவர். அந்த அநுபவங்களைத்தான் 'அரசகுமாரன்' என்ற நூலில் திரட்டியிருக்கிறார். ஓர் இடத்தில், "அதிருஷ்டத்தைப் பொறுத்தமட்டில் நிதானம் பாராமல் துணிச்சலாகவே நடந்துகொள்ள வேண்டும். அது ஒரு பெண்ணுக்குச் சமானம்; நம்மிடமே அவள் நிலையாக இருக்கவேண்டுமானால் அவளை அடித்துத் துன்புறுத்த வேண்டும். இப்படிப்பட்டவர்களிடத்தில்தான் அவள் அடங்கியிருக்க விரும்புவாள். அதிருஷ்டமும் அதே மாதிரிதான். அடித்து மிரட்டும் வாலிபர்களிடத்தில்தான் அதற்குப் பிடிப்பு அதிகம்" என்று சொல்லியிருக்கிறார்.

"ஒருவன் சொந்த நாட்டைச் சேர்ந்த படைவீரர்களை வைத்துக் கொண்டு யுத்தத்தில் தோற்றாலும் பரவாயில்லை; கூலிப் படையைக் கொண்டு வெல்லுவது சரியல்ல" என்பது மக்கியவெல்லியின் சித்தாந்தம். ஆனால் தற்கால யுத்த முறையில் இது சாத்தியமில்லை. "மக்கியவெல்லியின் இந்தத் 'தேசியப்படை' பிற்காலத்தில் கட்டாய ராணுவத் திட்டம் ஏற்படும் என்பதற்கு ஓர் அறிகுறி" என்கிறார் ஓர் ஆசிரியர்.

நிகோலோ மக்கியவெல்லி 1469 மே மாதம் 3-ஆம் தேதி பிளாரென்ஸில் பிறந்தார். அவருடைய தந்தை பெர்னாடோ சட்டநிபுணர். தாயின் பெயர் பார்த்தலோமியா. 1494-இல் பிளாரென்ஸ் குடியரசாயிற்று. அதுவரையில் ஆண்டுவந்த மெடிஸி வம்சத்தாரைப் பதவியிலிருந்து குடியரசு சர்க்கார் நீக்கிவிட்டது. அப்போது நிகோலோ நீதிஸ்தலத்தில் ஆட்ரியானி என்ற பிரபலஸ்தரின் கீழ்ப் பதவி ஏற்றார். நிகோலோ முன்னேயே அவரிடம் வேலை பார்த்தவர்தான். 1498-இல் ஆட்ரியானி குடியரசின் தலைவரானார். நிகோலோ உதவித் தலைவர் பதவியில் அவருக்குக் காரியதரிசியாக நியமனம் ஆனார்; 1512-வரை இந்தப் பதவியில் இருந்து வந்தார். இந்தப் பதினாலு வருஷகாலம் ஐரோப்பாவில் அரசாங்க அலுவலாகப் பல இடங்களுக்குப் போய் அந்த அந்த நாட்டு அரசர்களையும் ஆட்சி முறைகளையும் பற்றிக் கவனித்து வந்தார். 1502-இல் மேரியெட்டா கார்ஸினி என்பவளை மணந்தார். அதே வருஷம் சீசர் போர்ஜியா என்ற ராஜதந்திரியின் சபைக்குத் தூது சென்றார். போர்ஜியா அந்தக் காலத்தில் கொடுமைக்குப் பெயர் போனவன். ரபேல் சபாடினி என்ற பிரபல இத்தாலிய அறிஞர், "மக்கியவெல்லி போர்ஜியாவை நேரில் கண்டறிந்தவர். 'அரசனுக்கு வேண்டிய எல்லாக் குணங்களும் அமைந்தவன்' என்று மக்கியவெல்லி அவனைப் போற்றினார். அவனுடைய செயல் முறைகளையே அவர் தம் நூலில் அரசியல் விதிகளாக வகுத்திருக்கிறார்" என்று எழுதியிருக்கிறார்.

மக்கியவெல்லி இப்படிப் பல இடங்களுக்குப் போய் வந்ததால் பிளாரென்ஸ் பாதுகாப்புப் படையைப் புதுவிதமாக அமைத்தார்கள். அதே சமயம் மெடிஸி வம்சம் வலுவடைந்து 1512-இல் அவர்கள் மறுபடியும் ஆதிக்கம் செலுத்த ஆரம்பித்தார்கள். மக்கியவெல்லி எவ்வளவோ முயன்றுங்கூட அவர்கள் அவரை வேலையில் வைத்துக்

கொள்ள மறுத்து நாடு கடத்தி விட்டார்கள். அதற்கு அடுத்த வருஷம் சதியாலோசனையில் ஈடு பட்டதாகக் குற்றஞ்சாட்டி அவரைத் துன்புறுத்திச் சிறையில் தள்ளிவிட்டார்கள். 1513 மே மாதம் மெடிஷி வம்சத்தைச்சேர்ந்த ஜியோவன்னி என்பவன் போப்பாகப் பதவி ஏற்றதும் அவரை விடுதலை செய்தான். கடைசிக் காலத்தில் அவர் சான் காஷியானோ என்ற ஊரில் ஒரு பண்ணையில் வசித்து வந்தார். அங்கேதான் 'அரசகுமாரன்' என்ற பிரபல நூலை அவர் எழுதினார்.

இந்த நூலைப் பலபேர் கண்டித்திருக்கிறார்கள். "இருந்தாலும் சென்ற 300 ஆண்டுகளாக இதிலுள்ள விதிகளை அநுசரித்தே பொதுவாக ராஜதந்திரிகள் எல்லாரும் நடந்து வந்திருக்கிறார்கள்" என்று ஓர் அறிஞர் இதைப்பற்றிச் சென்ற நூற்றாண்டில் எழுதியிருக்கிறார் மக்கியவெல்லி இன்னும் பல நூல்களும் எழுதினார். அவைகளில் 'போர்க் கலை' 'காஸ்ட்ருஷியோவின் சரிதம்' என்ற இரண்டும் மிகவும் ரசமான நூல்கள். கதாநாயகனை காஸ்ட்ருஷியோ ஓர் இடத்தில், "மண் பாண்டமோ, கண்ணாடிச் சாமானோ வாங்கும்போது மனிதர்கள் அதைத் தட்டிப் பார்த்து வாங்குகிறார்களே; ஆனால் பெண்டாட்டியைத் தேர்ந்தெடுக்கும் போதுமட்டும் சும்மா பார்த்துவிட்டுத் திருப்தியடைந்து விடுகிறார்களே; அது என்?" என்று ஆச்சரியப்படுகிறான்.

"செத்தபின் உன்னை எப்படிப் புதைப்பது?" என்று அவனை யாரோ கேட்டதற்கு, "முகம் கவிழ்ந்தபடி புதையுங்கள்; ஏனென்றால், நான் போன பிற்பாடு இந்த நாடே தலைகீழாக மாறப் போகிறதே; எனக்குத் தெரியாதா?" என்கிறான்.

மக்கியவெல்லி 'பிளாரன்ஸின் வரலாறு' என்று ஒரு பெரிய நூலை 1520-இல் எழுதத் தொடங்குகிறார். 1527-ஜூன் மாதம் 20-ஆம் தேதி அவர் காலமாகிவிடவே அந்த நூல் அரைகுறையாகவே நின்றுவிட்டது.

உலக இலக்கியத்தில் இன்றும் மக்கியவெல்லி எழுதிய நூல்கள் சிறந்து விளங்குகின்றன. "அவருடைய வசன நடையே அலாதியானது" என்று அறிஞர் ஒருவர் எழுதியிருக்கிறார். அந்தக் காலத்து இத்தாலிய வாலிபர்களுக்கு மக்கியவெல்லி செய்த அறிவுரை இதுதான்:—

"முன் காலத்தில் மோஸஸின் திறமை வெளியாவதற்கு முன் இஸ்ரேல் மக்களும், சைரஸ் என்னும் பாரசீகச் சக்கரவர்த்தி தோன்றுவதற்கு முன் பாரசீக மக்களும், தீஸூஸ் ஆளுவதற்கு முன் எதீனிய மக்களும் பல இன்னல்கள் அநுபவிக்க வேண்டியிருந்தது. அதே மாதிரி இத்தாலியும் இப்போது இருப்பது போல் மோசமான நிலைக்கு வந்தால்தான்—பிறநாட்டார் அதை வென்று துண்டு துண்டாக்கி அடிமைப்படுத்தினால்தான்—இத்தாலியரிடம் புதைந்து கிடக்கும் உத்தம குணம் வெளிப்படும்."

இன்றைய நிலையில் இந்த அறிவுரை இத்தாலிக்கு மட்டுமல்ல; எல்லா நாடுகளுக்குமே பொருந்தும்.

வானவில்லைப் பிடித்தவர்

★

****

மூவர்ணப் போட்டோ எடுப்பதில் எத்தனையோ சிக்கல்கள் இருக்கின்றன. அதை எல்லாரும் சுலபமாக எடுக்கக் கூடியபடி 'கோடக்ரோம்' பிலிமைச் செய்து முடித்தவர்கள் இரண்டு சங்கீத வித்துவான்கள். இந்த வரலாறு ஒரு விசித்திரம். 'கிறிஸ்தியன் ஸயின்ஸ் மானிடர்' பத்திரிகையில் மாக்ஸ் ஈஸ்ட்மன் எழுதியுள்ள ஒரு கட்டுரையை ஆதாரமாகக் கொண்டது இது.

****

அமெரிக்காவிலே 1916-இல் ரிவர்டேல் என்ற ஊர்ப் பள்ளிக்கூடத்தில் லியோபால்டு என்று ஒரே பெயருள்ள இரண்டு சிறுவர்கள் படித்து வந்தார்கள். இருவருக்கும் வயது 15. அங்கே கால் பந்து விளையாட்டுத்தான் முக்கியம். ஆனால் இந்த நண்பர்கள் இருவருக்கும் அதுதான் பிடிக்காத விளையாட்டு. "சரி, அது பிடிக்கா விட்டால் சற்று உலாவி விட்டா வது வாருங்கள்" என்று சொல்லி விட்டார் பள்ளிக்கூடத்துப் பிரின்ஸிபால். அப்படியே இருவரும் வெளியே சற்றுப் புறப்பட்டுவிடு வார்கள். இருவரும் பிரபல சங்கீத வித்துவான்களின் பிள்ளைகள். இதில் வேடிக்கை என்னவென்றால் பியானோக்காரரின் மகன் வயலி னும் வயலின்காரரின் மகன் பியா னோவும் வாசிக்கப் பழகிக்கொண் டார்கள். எப்படியும் பிற்காலத்தில் நாமும் அதே மாதிரிதானே ஆகப் போகிறோம் என்று அவர்களுக்குத் தெரியும்; ஆகவே, சங்கீதத்தைப் பற்றிப் பேசிக்கொண்டிருப்பதை விடப் போட்டோ விஷயமாக ஏதாவது பேசலாமே என்று அவர் களுக்குத் தோன்றிற்று. பத்து வயதிலிருந்தே அவர்கள் இருவருக் கும் போட்டோ பிடிப்பதென்றால் ஒரு பித்து. ஆனால் வான வில்லைப் போல் அதில் பல வர்ணமும் விழ வில்லையே என்று அவர்களுக்கு மிகவும் குறை.

"எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது" என்றான் ஒரு லியோபால்டு.

"எனக்குந்தான்" என்றான் மறு லியோபால்டு. இரண்டு பேரும் அவரவருக்குத் தோன்றினதைக் குறித்துக்கொண்டு மறு நாள் ஒப்பிட்டுப் பார்ப்பது என்று தீர்மா னித்தார்கள். அப்படியே அடுத்த நாள் பார்த்தபோது இரண்டு பேருடைய யோசனையும் ஒன்றாகவே இருந்தது. பள்ளிக்கூட நேரம் கழிந்ததும் அங்கே லேபரெ டரிக்குள் (Laboratory) போய் இதைப்பற்றி ஆராய்ச்சி செய்ய வேண்டுமென்று அவர்களுக்கு ஆவல். ஆகவே, அதன் சாவியைத் திருடி எடுத்துக்கொண்டார்கள். ஏதோ ஒரு விதமாக வர்ணப் படம்

எடுத்துவிட்டார்கள். அதுமுதல் 25 வருஷ காலம் இந்த ஆராய்ச்சியில் ஈடுபட்டு வந்தார்கள். இது வரையில் தாங்கள் கண்டுபிடித்த பல முறைகளுக்கு 40 பேடெண்டுகள் வாங்கியிருக்கிறார்கள்.

முக்கியமான மூன்று நிறங்களைத் தனித்தனியே கிரகிக்கும் மூன்று பிளேட்டு(தகடு)களில் படம் எடுக்க வேண்டும் என்றுதான் முதலில் தீர்மானித்தார்கள். முதலில் எடுத்த வர்ணப் போட்டோ மகா கோரமாக இருந்தது. இப்படி ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு நிறம் விழுந்துவிட்டால் மூன்று புரொஜெக்டர் மூலம் திரையில் காட்டும்போது மூன்று நிறத்தையும் இணையவைக்கலாம்; அப்போது வானவில்லில் அமைந்த எல்லா நிறமும் அதில் காணலாம். ஆனால் இப்படித் தனித் தனிப் பிளேட்டுகளில் நிறம் எடுத்து இணைய வைக்கும் முறையை முன்னாலேயே யாரோ கண்டு பிடித்துவிட்டார்கள் என்று தெரிந்ததும் அவர்களுக்கு இருந்த ஊக்கம் சற்றுக் குன்றியது.

மேல்படிப்புக்காக லியோபால்டு மானெஸ் ஹார்வர்டுக்கும், லியோ பால்டு கோட-வ்ஸ்கி கலிபோர்னியாவுக்கும் போனார்கள். ஆனாலும் விடுமுறையின்போது இருவரும் சேர்ந்து இது சம்பந்தமாக ஆராய்ச்சி செய்துதான் வந்தார்கள். இதற்காகச் சங்கீதம், பழைய இலக்கியம் இவைகளோடு ரசாயன சாஸ்திரமும் கற்று வந்தார்கள். 1922-இல் நியூ யார்க்கில் வந்து சங்கீதம் கற்றுக்கொடுக்க ஆரம்பித்தார்கள். அப்போது மறுபடியும் இருவரும் சேர்ந்து பலவித 'எமல்ஷன்' (ரசாயனக் குழம்பு) கலந்து பிளேட்டுகளில் அவைகளைப் பூசிப் பரிசோதித்துப் பார்த்தார்கள். 1923-இல் மறுபடியும் வர்ணப் போட்டோ ஒன்று எடுத்தார்கள். இதுவும் கோரமாகத்தான் இருந்தது; ஆனால் இதில் ஒரு விசேஷம்: மூன்று முக்கிய நிறமும் ஒரே பிளேட்டில் பொருந்தும்படி படம் எடுத்துவிட்டார்கள். 1900-இலிருந்து பல விஞ்ஞானிகள் இப்படி எடுக்கவேண்டுமென்றுதான் படாத பாடுபட்டு வந்தார்கள்; அவர்கள் கனவு பலித்துவிட்டது!

அப்புறம் அந்த இரண்டு நண்பர்களின் உற்சாகத்துக்குக் கேட்பானேன்? சங்கீதத் துறையில் அவர்களுக்குச் சுமாரான வரும்படிதான் கிடைத்தது; அதைக் கொண்டு ரசாயனப் பொருள்களை வாங்கிவிட்டால் பிறகு சோற்றுக்கு என்ன செய்வது? பெற்றோர் வைத்துவிட்டுப்போன ஆஸ்தியும் தாங்களாகச் சேர்த்து வைத்திருந்த கொஞ்ச நஞ்சம் தொகையுங்கூடச் செலவாகிவிட்டன.

ஒரு நாள் லூயிஸ் ஸ்ட்ராஸ் என்ற பாங்கிக்காரரை இவர்கள் தற்செயலாகப் பார்த்துப் பேசினார்கள். அப்போது இதைப்பற்றிப் பிரஸ்தாபம் வந்தது. அவரை வீட்டுக்கு அழைத்துவந்தார்கள்; தங்கள் பரிசோதனையை நேரில் கண்டுவிட்டுப் போகும்படி கேட்டுக் கொண்டார்கள். ஆராய்ச்சிக் கூடமாகப் பயன்பட்ட தங்கள் சமையலறைக்குள் வந்து பார்க்க அவருக்குச் சிரமமாக இருந்தால் வெளியறையிலாவது உட்கார்ந்திருக்கும்படி சொன்னார்கள். வெகு நேரம் ஆன பின் ஒரு மாதிரியாக வர்ணப்படம் ஒன்று தயார் ஆயிற்று. அதைப் பார்த்ததும் அவர்களுக்கு ஒத்தாசை செய்ய வேண்டுமென்று ஸ்ட்ராஸுக்குத் தோன்றிற்று. தம் நண்பரும் பிரபல பணக்காரருமான

ஸர் வில்லியம் வொயிஸ்மன் என்பவரைப் போய்ப் பார்த்து அவர்களுக்கு வேண்டிய பணவுதவி, இட வசதி முதலிய சௌகரிய மெல்லாம் செய்துகொடுத்தார்.

அவர்கள் இந்தத் துறையில் அதிக ஊக்கம் செலுத்துவதைப் பார்த்து அநேகம் பேர், "உங்களுக்கு என் இந்த வீண் வம்பெல்லாம்? சங்கீதத்தில் மட்டும் கவனம் செலுத்துங்கள்" என்றூர்கள். சங்கீதத்தையும் அவர்கள் கைவிட்டுவிடவில்லை; அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் கோடவ்ஸ்கி தம் வயலின் திறமையையெல்லாம் காட்டிப் பிரபல சங்கீத வித்துவான் என்று பெயர் எடுத்தார். மானெஸ் கட்டின சாகித்தியங்களுக்குப் புலிட்ஸர் பரிசு கிடைத்தது; அதோடு ரோம் நகரில் சங்கீதத் துறையில் ஆராய்ச்சி செய்யவும் அவருக்கு அழைப்பு வந்தது. ரோமிலும் நண்பர்கள் இருவரும் இந்த வர்ணப் போட்டோ ஆராய்ச்சியில் ஈடுபட்டு வந்தார்கள்; வீட்டுச் சமையலறைதான் அவர்களுடைய ஆராய்ச்சிக் கூடம்.

அவர்களுடைய முயற்சிக்கு இன்னும் ஓர் அறிஞரும் ஊக்கம் அளித்தார். ஈஸ்ட்மன் கோடக் கம்பெனி ஆராய்ச்சிப் பகுதியின் தலைவரான டாக்டர் மீஸ் என்பவர்தான் அந்த அறிஞர். அவர் போட்டோக் கலையில் சிறந்த பயிற்சியும் அநுபவமும் உள்ளவர். அவர்கள் சொன்னதுபோல் பிளேட்டுகளில் 'எமல்ஷன்' (ரசாயனக் குழம்பு) பூசி ஆராய்ச்சிக்காக அனுப்பிவந்தார்.

கடைசியில் ராசெஸ்டரிலுள்ள கோடக் கம்பெனியில் சேரும்படி அவர்களுக்கு அழைப்பு வந்தது. அதில் சேருவதென்றால் கொஞ்ச காலம் சங்கீத வித்தையை மூட்டை கட்டி வைக்க வேண்டியதுதான். அதோடு, பின்னல் ஏதாவது கண்டு பிடித்தால் அது தங்களுக்குச் சொந்தம் என்று அவர்கள் பேடெண்ட் வாங்க முடியாது; அது கம்பெனியையே சேர்ந்துவிடும். ஆயினும் இந்த மாதிரி வேலைகளில் ஓரளவுக்குமேல் ஆராய்ச்சிக்கூட வசதியும் தக்க நிபுணர்களின் உதவியும் தேவை. இதுவரை எவ்வளவு தூரம் சொந்தமாகச் செய்ய முடியுமோ அவ்வளவு முயற்சியும் அவர்கள் செய்தாயிற்று. அதோடு, கோடக் கம்பெனியார் நல்ல சம்பளமும் பேடெண்டுக்குரிய நியாயமான ராயல்டி தொகையும் கொடுக்க முன்வந்தார்கள்.

இதற்கு இசைந்து அந்த நண்பர்கள் இருவரும் கோடக்கம்பெனியில் சேர்ந்தார்கள். விஞ்ஞானிகளின் கூட்டத்தில் இப்படிச் சங்கீதவித்துவான்கள் புகுந்ததைப் பார்த்துப் பலர் கேலியாகப் பேசிக்கொண்டார்கள். படத்தை உருவாக்கும் (டெவலபர்) திராவகத்தில் பிளேட்டைப் போட்டு விடுவார்கள்; கும்மிருட்டில்தான் இப்படிச் செய்ய வேண்டும். அப்போது நேரக் கணக்கை அறிய அவர்கள் ஷூபர்ட்டின் 'ராணுவகீத'த்தையும் சைகோவ்ஸ்கியின் 'சோககீத'த்தையும் பாடுவது தமாஷாக இருக்கும். இன்றும் அவர்கள் இந்த வழக்கத்தை விடவில்லை.

அப்போது வியாபார நெருக்கடி காரணமாக சில ஆடம்பரச் செலவுகளை நிறுத்தி வைக்க வேண்டுமென்று கம்பெனி தீர்மானித்தது. அவர்கள் செய்யும் பரிசோதனையில் அநேகம் பேருக்கு நம்பிக்கையில்லை.

ஆனால் டாக்டர் மீஸ் மட்டும் விடாப் பிடியாக அவர்களை ஆதரித்து வந்தார். கடைசியில் 1932-இல் அவர்கள் தாங்கள் கண்டுபிடித்த விஷயங்களைத் தொகுத்து அங்கிருந்த விஞ்ஞானிகளின் கூட்டத்தில் விளக்கினார்கள். கோடக்ரோம் பிலிம் தோன்றின வரலாறு இதுதான். போட்டோக் கலையிலேயே இந்த ஆராய்ச்சி பெரிய மாறுதலை உண்டு பண்ணிவிட்டது.

இதிலுள்ள விசேஷம் என்னவென்றால், சகஜமாகப் போட்டோ பிடிப்பது போலவே ஒரு பிலிமில் இந்த மாதிரி வர்ணப் படம் எடுத்துவிடலாம். ஆனால் இதன் அமைப்பு முறைதான் கடினமானது. தக்க பாதுகாப்பு முதலியவற்றோடு மூன்று நிறங்களைத் தனித் தனியே கிரகிக்கும் 'எமல்ஷன்' ஏடுகளை ஒன்றன் மேல் ஒன்றாகப் பதித்தது இந்தப் பிலிம். ஒவ்வொன்றுக்குமிடையே இரண்டு 'கெலாடின்' ஏடுகள் உண்டு. இந்த ஏடுகள் 1/10,000 அங்குல கனந்தான் என்றால் எவ்வளவு மெல்லிசாக இருக்கும், பாருங்கள்!

அடி எமல்ஷன் ஏடு சிவப்பு நிறத்தையும், நடு எமல்ஷன் ஏடு பச்சை நிறத்தையும், மேல் எமல்ஷன் ஏடு நீல நிறத்தையும் கிரகிக்கும். இந்த நிறங்கள் பளிச்சென்றும் ஒன்றோடொன்று இணைந்தும் இயல்பாய் அமையவேண்டுமே; இப்படி உருவாவதற்கு ஆரம்பத்தில் 28 தடவை அதைப் பல ரசாயனப் பொருள்களில் முழுக்கி எடுக்க வேண்டியிருந்தது. இப்போதும் 15 தடவைக்குக் குறையாமல் இப்படிச் செய்யவேண்டியிருக்கிறது. ஒவ்வோர் ஏடும் 'நெகடிவ்' (எதிர் உருவம்) ஆகத்தான் இருக்கும். அதைப் 'பாஸிடிவ்' (நேர் உருவம்) ஆக்க வேண்டும். இப்படிப் படம் உருவாகும்போது உபயோகிக்கும் ரசாயனப் பொருள் ஒவ்வொன்றும் கூடவே தனித் தனி நிறத்தை அதற்கு ஊட்டி வரும். இந்த வர்ணக் கலவையின் மூலம் இயற்கையில் அமைந்த நிறவேறுபாட்டை அப்படியே கொண்டு வர வேண்டும். இதை விளக்கிச் சொல்வதே இவ்வளவு கடினமாக இருக்கும்போது, 5/10,000 அங்குல கனத்தில் இப்படி ஓர் அற்புதத்தைச் செய்து காட்டினார்கள் என்றால் அவர்களைப் பாராட்டத்தானே வேண்டும்!

கலையும் விஞ்ஞானமும் இழைந்து தோன்றிய சிருஷ்டி கோடக்ரோம். இந்த ஆராய்ச்சி முடிந்ததும் அவர்கள் இருவரும் அதைக் கொண்டாட வயலினும் பியானோவும் வாசித்து, கூடவே வர்ண ஸினிமாப் படமும் காட்டி எல்லாரையும் மகிழ்வித்தார்கள். பின்னும் 5 வருஷ காலம் கோடக் கம்பெனியிலேயே இருந்து பல விதத்தில் ஒத்துழைத்தார்கள். இப்போதும் கோடவ்ஸ்கி, நியூ யார்க் நகரில் ஒரு சிறிய ஆராய்ச்சிக்கூடம் அமைத்து வர்ணப் போட்டோ சம்பந்தமாக மேலும் மேலும் ஆராய்ச்சி செய்து வருகிறார். அவ்வப்போது வயலின் கச்சேரியும் செய்கிறார். மானெஸ்ஸும் தம் பியானோ வித்தையை வீணாக்காமலே கம்பெனிக்கும் அவ்வப்போது துணை புரிந்து வருகிறார்.

நீடித்த நட்பும் பல துறையிலும் ஊக்கமும் உறுதியும் இருந்தால் எதுவும் கைகூடும் என்பதற்கு இவர்களுடைய ஆராய்ச்சியே ஓர் அத்தாட்சியாகும்.

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸரின் ஞானச்சுடரை உலகெலாம் ஒளி வீசச் செய்த இந்த மகா புருஷரின் வாழ்வு தூய்மை மிக்கது; வாக்கு வன்மை பொதிந்தது.

விவேகானந்தர்

நோய் தீர்ந்தது: கல்கத்தாவுக்கு அருகிலே விவேகானந்தர் பேலூட் என்ற ஊரில் ராமகிருஷ்ண மடம் ஒன்று ஸ்தாபித்தார். அங்கே வரும் இளஞ் சந்நியாசிகளுக்குக் கீதை, வேதாந்தம் எல்லாம் போதித்து வந்தார்; அதோடு சமூக நன்மைக்கான பல தொண்டுகளிலும் ஈடுபட்டுவந்தார். தன்னலம் பாராமல் இப்படி உழைத்ததால் அவருடைய உடல்நிலை வரவர மோசமாகிவிட்டது. கடைசியில் நண்பர்களின் வற்புறுத்தலின்மேல் கொஞ்சநாள் தார்ஜீலிங்போய் வசிப்பது என்று முடிவு செய்தார். அப்படியே புறப்பட்டுப் போனார். ஆனால் அதேசமயம் கல்கத்தாவில் பிளேக் நோய் கண்டு மக்கள் தினந்தோறும் நூற்றுக்கணக்கில் மடிய ஆரம்பித்தார்கள். விவேகானந்தர் தார்ஜீலிங் வந்து ஒரு வாரங்கூட ஆகவில்லை. இந்தச் செய்தி தெரிந்ததும் அவருக்கு அங்கே இருக்கப் பிடிக்கவில்லை. உடனே கல்கத்தாவுக்குத் திரும்பினார். ஏற்கனவே பேலூட் மடத்தைச் சேர்ந்த சந்நியாசிகள் தங்களால் ஆன மட்டும் மக்களுக்கு வைத்திய உதவியும் தொண்டும் செய்து வந்தார்கள். தொத்து நோயாயிற்றே; அதனால் உற்றார் உறவினர் என்றுகூடப் பாராமல் நோயுற்றவர்களை அப்படி அப்படியே விட்டுவிட்டு ஓடிவிட்டார்கள் அநேகம் பேர். ஆனால் விவேகானந்தர் ஒவ்வொரு பேட்டையிலும் வீடு வீடாகப் போய்ப் பிளேக் கண்ட நோயாளிகளுக்குத் தாமே சிகிச்சை செய்வதைப் பார்த்த பிறகு மக்களிடையே உற்சாகம் ஏற்பட்டது. இத்தனை நாள் துணிவில்லாமல் கிடந்த அநேக வாலிபர்கள் ஏதோ மந்திர சக்தி தூண்டியது போல் அவரோடு இந்தத் தொண்டில் ஈடுபடலானார்கள். விவேகானந்தருடைய ஸ்பரிசம் பட்ட மாத்திரம் நோயாளிகளுக்கு, 'நாம் பிழைப்போம்' என்ற நம்பிக்கை ஏற்பட்டது. விரைவில்



வாழ்வும் வாக்கும்

கல்கத்தாவில் பிளேக் அடங்கி நிலைமை பழையபடி சீர்ப்பட்டது. அதோடு விவேகானந்தருடைய உடம்பும் குணமாகிவிட்டது.

—(வாழ்வு)

ஓர் அரிய பிரசங்கம்: சர்வ மத மகாநாடு அடுத்த முறையாகப் பிரான்ஸின் தலைநகரமான பாரிஸில் கூடியது. விவேகானந்தருடைய பெயர் இதற்குள் மேல் நாடு முழுதும் பிரபலமாகிவிட்டது. இந்தத் தடவை அவருக்கு விசேஷ அழைப்பு வந்தது. அவரும் அதற்கு இசைந்து பாரிஸுக்கு வந்தார். வேதாந்த சம்பந்தமாக ஒரு கட்டுரை எழுதிப் படிப்பதாக ஏற்பாடு. ஆனால் உடல்நிலை சரியாக இராததால் விஷயத்தை முன்னதாகத் தயாரித்துக்கொள்ள முடியவில்லை. அப்போது பிரபல ஐரோப்பியப் பிரமுகர் ஒருவர் விவரம் தெரிந்துகொள்ளாமல் இந்து தேவதைகளைப் பற்றித் தவறாகச் சில அபிப்பிராயங்களை வெளியிட்டிருந்தார். இதைப் பல பேர் விவேகானந்தரிடம் வந்து தெரிவித்தார்கள். இந்தச் சமயத்தில் வேதாந்தப் பிரசங்கம் செய்தால் யாருக்குமே புரியாது என்று கண்டுகொண்டு விவேகானந்தர் அந்தப் பிரமுகரின் தவறுகளைத் தக்க ஆதாரம் காட்டி மறுத்து ஓர் அரிய பிரசங்கம் செய்தார். திரிமூர்த்திகளையும் அவர்களின் முத்தொழில்களையும்பற்றி அவர் விளக்கிச் சொன்னபோது சபையில் இருந்தவர்கள் மிகவும் கவனமாகக் கேட்டுக்கொண்டிருந்தார்கள். பிறகு, சாதனையில் பக்குவம் அடையாத நிலையில் கடவுளை ஏதாவது ஓர் உருவில் வழிபடுவது அவசியந்தான் என்றும் போகப் போகத்தான் உருவமின்றி வழிபட முடியும் என்றும் தெளிவுபடுத்தினார். அதற்கு உதாரணமாகப் புராணங்களிலிருந்து முதலில் அத்தாட்சிகள் காட்டி, முடிவில் சங்கரருடைய அத்துவைதக் கருத்துக்களை எடுத்



துச் சொன்னார். இதனால் அது வரை இந்து மதத்தைப்பற்றி ஒன்றுமே தெரியாதிருந்த அநேகம் பேருக்கு அதன் உயர்ந்த கொள்கைகளில் பற்று ஏற்பட்டது. சபை கலையும்போது தவறாக எழுதிய அந்த ஐரோப்பியப் பிரமுகர் தாமே விவேகானந்தரிடம் வந்து மன்னிப்புக் கேட்டுக்கொண்டார். அது முதல் அவர் விவேகானந்தரின் பக்தராகவும் மாறிவிட்டார்.

—(வாழ்வு)

கீதாசாரியரின் உருவம்: "போர்க்களத்தில் கண்ணனுடைய படத்தைச் சித்திரிக்கும்போது கீதையின் மேலான கருத்து அவனுடைய வடிவில் தோன்றும்படி வரைய வேண்டும். இதோ பார். குதிரையின் கடிவாளங்களை அவன் இப்படிப் பிடிக்க வேண்டும். வலிந்திழுத்துப் பிடித்திருப்பதால் குதிரைகள் பின்னங்காலில் மட்டும் நிற்கின்றன. முன்னங்கால் காற்றோடு போரிடுவது போல் அசைய, வாய்கள் திறந்தபடி இருக்க வேண்டும். கண்ணனுடைய உருவத்தில், எடுத்த காரியத்தைச் சாதிக்கும் வன்மை தெரியவேண்டும். மகாவீரனான அர்ஜுனன் அம்பறாத் தூணியையும் வில்லையும் எறிந்து விட்டு இரு சேனைகளுக்கும் நடுவில் நிற்கும் தேரில் கோழைபோல் சாய்ந்திருக்கிறான். ஒரு கையிலே சாட்டையும் மறு கையிலே கடிவாளமும் பிடித்தபடி பேரன்போடும் இரக்கத்தோடும் கண்ணன் அர்ஜுனனின் பக்கம் திரும்புகிறான்; இந்த நிலையில் கீதோபதேசம் புரிவது போல் படம் அமைய வேண்டும்."

—(வாக்கு)

ஆசிரியர் யுக்தி

மிகவும் பிரசித்தி பெற்ற ஆங்கில ஆசிரியரான ஜி. கே. செஸ்டர்ட்டன் என்பவருக்கு எப்போதும் ஞாபக மறதி. அவர் சில காலம் சொந்த முதல் போட்டு ஒரு பத்திரிகை நடத்தி வந்தார்.

ஒவ்வொரு நாள் காலையிலும் அந்தப் பத்திரிகை ஆபீஸுக்குப் போகும்போது, அது எந்த இடத்தில் இருக்கிறது என்பது அவருக்கு மறந்து போய்விடும். இடத்தைக் கண்டு பிடிக்க உடனே ஒரு யுக்தியைக் கடைப்பிடிப்பது அவர் வழக்கம். பக்கத்தில் உள்ள பத்திரிகைக் கடை ஏதாவது ஒன்றுக்குக் கிடு கிடு என்று போவார். அங்கே தம் பத்திரிகையின் பிரதி ஒன்றை விலை கொடுத்து வாங்குவார். அதில் தம் பத்திரிகை ஆபீஸின் விலாசம் அச்சிட்டிருப்பதைப் பார்த்து அடையாளம் கண்டுபிடித்து, சரியான சமயத்தில் ஆபீஸ் போய்ச் சேர்ந்து விடுவார்.

—'மில்வாகி ஜர்னல்'

இலக்கியம் என்பது இதுதான் என்று விளக்கிக் காட்டிய சம்ஸ்கிருத பண்டிதர் இவர்.

அபிநவ குப்தர்

எஸ். வி. ராமேசுவர பட்டர்

அபிநவ குப்தர் காஷ்மீரத்தில் உயர்ந்த குடும்பத்தில் பிறந்தார். பிறந்த வருஷம் கி.பி. 1013. இவர் தாய் விமலகலா தேவி இவர் குழந்தையாக இருக்கும்போதே இறந்துவிட்டாள். இவருடைய தந்தையான நரசிம்ம குப்தரே இவரை வளர்த்து முன்னுக்குக் கொண்டுவந்தார். அபிநவர் பல குருமார்களை அண்டிப் பாடங் கேட்டார். தந்தையிடம் வியாகரணம் கற்றார். வாமநாதரிடம் துவைதம், அத்துவைதம், தந்திர சாஸ்திரம் இவைகளைக் கற்றுக்கொண்டார். பூதிராஜ குமாரரிடம் பேதாபேத சைவ தத்துவங்களைக் கற்றார். பூதராஜரிடம் பிரம்ம வித்தையை அறிந்தார். லட்சுமண குப்தரிடம் கிரமம், த்ரிக தரிசனங்கள் இவை முழுவதும் கற்றார். 'காவ்ய கௌதுகம்' என்ற நூலின் ஆசிரியரான பட்ட தாதர் என்பவர் 'நாட்டிய சாஸ்திர'த்தை இவருக்குப் போதித்தார். துவனி தத்தவத்தை இந்துராஜர் கற்றுக் கொடுத்தார். இவர்களைத் தவிர ஸ்ரீசுந்திரர், யோகானந்தர், சிவா, உத்படர், பாஸ்கரர் முதலிய பண்டிதர்களும் அபிநவருடைய அறிவு வளர்ச்சிக்குப் பெரிதும் உதவினர்கள்.

பிறகு காஷ்மீரத்தின் அழகுக் களஞ்சியமாகிய கணவாய்களில் இயற்கைக் காட்சிகளை கண்டு ரசித்து மெய்மறந்திருந்தார். இவர் பிரம்மசாரியாகவே வாழ்நாளைக் கழித்தார். காவிய ஆராய்ச்சி, தத்துவ ஆராய்ச்சி, சௌந்தரிய உபாசனை இவைகளையே தம் தினசரி வேலைகளாக மேற்கொண்டார். முதலில் தந்திர சம்பந்தமான நூல்களை எழுதினர். பிறகு இவருக்கு இலக்கியத்தின்மேல் நாட்டம் சென்றது. ஓயாத காவிய ஆராய்ச்சியால் இவருக்குப் பரந்த நோக்கம் ஏற்பட்டது. ஆத்ம விசாரணையில் ஈடுபட்டார்.

'அபிநவ பாரதி', 'த்வன்யாலோக லோசனம்' என்னும் நூல்களை எழுதிப் பிரசித்திபெற்றார். துரதிருஷ்டவசமாக இவர் எழுதிய இன்னும் சில நூல்கள் இப்போது கிடைக்கவில்லை. இவர் எழுதியவை வழிநூல்களாயினும் முதல் நூல்களுக்கு எந்த விதத்திலும் குறைந்துவிடவில்லை. நாட்டியம், ரூபகம், கீதம், வாத்தியம், அபிநயம் இவைகளுக்கு உலகத்துக்கே ஒரு களஞ்சியம்போல் விளங்குவது பரதருடைய நாட்டிய சாஸ்திரம். அதிலிருந்தும் அலங்கார சாஸ்திரத்தில் பெரும் புரட்சி செய்த ஆனந்தவர்த்தனருடைய த்வன்யாலோகத்திலிருந்தும் பல மேற்கோள் காட்டியிருக்கிறார். காஷ்மீர்ச் சைவ மதத்தைச் சேர்ந்த உத்பலாசாரியரின் ஈசுவர பிரத்யபிக்ஞான

காப்பிரைட்: கர்மவீர் (கன்னடம்), ஹுப்ளி.

சூத்ரம், பகவத்கீதை இவை களிலிருந்தும் இப்படிப் பல பகுதி களை எடுத்துக் காட்டியிருக்கிறார். இலக்கியத்தோடு இன்னும் பல துறைகளிலும் தேர்ந்து விளங்கினார். ஆனந்தவர்த்தனருடைய 'த்வனி ப்ரஸ்தானம்' என்ற நூலிலுள்ள பல சிக்கல்களை விடுவித்திருக்கிறார்.

ஆனந்தவர்த்தனர் 'த்வனி'க் கூட்டங்களை முறைப்படி ஸ்தாபித் தவர். ஆனாலும் அவர் "த்வனி என்பது அலங்காரம், வஸ்து, ரசம் இந்த மூன்றிலும் இருக்கலாம்" என்று சொல்லியிருக்கிறார்; "ரச மும் த்வனியும் காவியத்தின் ஆத்மா" என்று சொல்லும் அளவுக்கு முன்னேறவில்லை. ரசத்துக்கு உயர்ந்த ஸ்தானத்தைக் கொடுத் தார்; ஆனால் 'த்வனி'யின் பீடம் ஆட்டம் கொடுத்துவிட்டது. அதை ஆடாமல் அமர்த்தியவர் அபிநவ குப்தரே. அதனால் காஷ்மீரிகள் இவரை 'ரசரிஷி' என்கிறார்கள்.

அபிநவர் வஸ்து த்வனி, அலங் கார த்வனி இந்த இரண்டையும் ஒதுக்கி ரச த்வனி ஒன்றுதான் காவியத்தின் ஆத்மா என்று நிலைநாட்டினார். "வாக்கியம் ரசாத்மகம் காவியம்" என்கிறார். மகிமபட்டர் ஒருவரைத் தவிர மம்மடர், ஹேமசந்திரர், விசுவ நாதர், சாரதாதநயர், அப்பைய தீக்ஷிதர், ஜகந்நாத பண்டிதர் இவர்களெல்லாம் அபிநவரின் கொள்கையை ஒப்புக்கொண்டு அவருக்கு ஆசாரிய பதவியைக் கொடுத்துக் கௌரவித்தார்கள்.

"குணம் என்றால் என்ன? தோஷம் என்றால் என்ன? அலங் காரம் என்றால் என்ன? பொருத் தம் என்றால் என்ன? ஒலியும் பொருளும் பயன் பெறுவது எப்போது? லட்சணம் என்றால் என்ன? விருத்தி, ப்ரவிருத்தி என்றால் என்ன?" - இவை போன்ற பல பிரச்னைகள் சுமார் 800 வரு ஷங்கள் வரைக்கும் இந்திய இலக் கணக்காரர்களை ஆட்டி வைத்தன. இவைகளின் இயற்கையைத் தெளி வாகச் சொல்ல யாருக்கும் திறமை இருக்கவில்லை. அபிநவர் இது போன்ற சிக்கல்களையெல்லாம் சுவைக் கண் கொண்டு ஆராய்ந் தார்.

"குணமும் தோஷமும் நிலை யானவை அல்ல; சந்தர்ப்பத்தை ஒட்டிக் குணம் தோஷமாகவும், தோஷம் குணமாகவும் மாறிவிட லாம். இவற்றை ரசம், பொருத் தம் என்ற கண்களைக் கொண்டு பார்க்கவேண்டும். 'த்வனிப் பிரஸ் தார'க்காரர்கள் மாதுர்யம், ஓஜஸ், பிரசாதம் இந்த மூன்று குணங் களைமட்டும் ஒப்புக்கொள்கிறார்கள். ரசத்தினுடைய ஓர் அம்சம் குணம். வீரம் முதலியவை மனித னுடைய ஆத்மாவோடு சம்பந் தப்பட்டிருப்பதுபோல் மாதுரியம் முதலியவை காவியத்தின் ஆத் மாவை அநுசரித்திருக்கின்றன. இப்படியே ஒலிக்கும் பொருளுக் கும் ஸ்தானம் இருக்கிறது." - இது போன்ற பல முடிவுகளை அபிநவர் எழுதியிருக்கிறார்.

'லோசன'த்தைப் பார்த்த பிறகு 'அபிநவ பாரதி'யையும் சற்றுப் புரட்டிப் பார்க்க வேண்டும். நாட் டியவேதத்தின் கருத்தாகவே இது அமைந்திருக்கிறது. இந்தப் பாஷ்யம் எழுதினதன் உத்தேசம் இவையே; நாட்டிய சாஸ்திரத்தில் பல இடங் களில் காணும் சந்தேகத்தைத் தெளிவிப்பது; அவ்வளவு முக்கிய மில்லாத பாகங்களில் கடின பதங் களுக்குமட்டும் பொருள் சொல்வது; பாடபேதங்களைக் கூடிய மட்டும்

சோதித்துக் கொடுப்பது; சர்ச்சைக்கு இடம் கொடுக்கும் சங்கதிகளைத் தெளிவாக விவரிப்பது; அவசியம் நேர்ந்தால் தம் காலத்துக்கு முற்பட்ட கவிஞர்கள், சம காலத்தவர்கள் ஆகிய இரு சாராருடைய அபிப்பிராயங்களையும் தொகுத்துச் சொல்வது.

இவருக்குப் பிற்காலத்தில் பலர் நாட்டியத்தைப்பற்றிப் பல நூல்கள் எழுதினாலும் 'அபிநவ பாரதி' தான் இவைகளுக்குள்ளே மாணிக்கம் போல் ஒளி வீசிப் பிறருக்கு வழிகாட்டியாக இருக்கிறது. அபிநவர் 'லோசன' வியாக்கியானத்தில், "ரசத்வனியே காவியத்தின் ஆத்மா" என்று விவரித்ததுபோல், 'அபிநவ பாரதி'யில் 'ரசப்ரதீதி' என்பதை விவரித்து, நாட்டிய சாஸ்திரத்துக்குப் பேருதவி புரிந்திருக்கிறார்.

லோசனம், அபிநவபாரதி இந்த இரண்டையும் மேலாகப் பார்த்தாலே இவருடைய பாண்டித்தியத்தையும் ரசிகத்தன்மையையும் திறமையையும் அறிந்துகொள்ளலாம். இவர் தம்முடைய நூல்களில், எதிர்க்கட்சியாரின் குறைபாடுகளைச் சாதுரியமாகக் கண்டித்திருப்பதையும் தம் குருமார், எதிர்க்கட்சியார், சமகாலத்தவர் இவர்களுடைய விஷயங்களையெல்லாம் தொகுத்து எழுதியிருப்பதையும் காணலாம்.

வண்ண வண்ணப் பூக்களும் பசேலென்ற மரங்களும் செடிகொடிகளும் கொண்ட சூழ்நிலையில் இவருடைய பர்ணசாலை அமைந்திருந்தது. பர்ணசாலைக்கு முன்பாகத்தில் கலகலவென்று ஒலித்தபடி ஜீவநதியான விதஸ்தை பெருகி ஓடியது. ஒப்பற்ற இந்தக் காட்சியைக் கண்டு அநுபவித்த அபிநவர் இலக்கணமோ, தத்துவமோ எதை எடுத்துக்கொண்டாலும் நன்றாக விளக்கி ரசிகராய் விளங்கியதில் ஆச்சரியம் என்ன? இவருக்குப் பல குருமார் இருந்தது போலவே பல சிறந்த சிஷ்யர்களும் இருந்தார்கள்.

நேர்ந்த தவறு

மூன்று பிரெஞ்சுக்காரர்கள், மார்ஸேல்ஸ் நகரத்தின் ஒரு ரெயில்வே ஸ்டேஷன் பிளாட்பாரத்துக்குள் புகுந்தார்கள். லயான் நகரத்துக்குச் செல்லும் ஒரு ரெயில் வண்டி மெல்ல நகரத் தொடங்கியது.

மூன்று பேரில் இரண்டு பேர்மட்டும் புலிபோல் தாவி அந்த வண்டியில் தொற்றிக்கொண்டார்கள்.

மூன்றாவது ஆசாமி ஸ்டேஷனில் நின்றபடி தேம்பித் தேம்பி அழத் தொடங்கினான்.

அந்தப் பக்கம் வந்த ஸ்டேஷன் மாஸ்டர் இவனைப் பார்த்து, "அழாதே, தம்பி. பிரிவு என்றாலே கஷ்டந்தான். இருந்தாலும் என்ன செய்வது? போகவேண்டிய அவர்கள் போய்த்தானே தீர்வார்கள்" என்று ஆறுதல் சொன்னார்.

"நீங்கள் நினைப்பதைவிடக் கஷ்டமானது ஸார், என் விஷயம். போகவேண்டியது அவர்கள் அல்ல; நான்" என்றான் ஆசாமி.

—'மகஸீன் டைஜெஸ்ட்'

பாகிஸ்தான் பிரிந்ததால் வந்த சணல் பஞ்சம்
தீர நாட்டிலே நடக்கும் முயற்சி இது.

புதிய சணல் விளைச்சல்

சந்திரா

நம் இந்தியா இரண்டாகப் பிரிந்ததில் எத்தனையோ தொழில்களும் பிரிய வேண்டி வந்துவிட்டது. அவைகளில் முக்கியமானது சணல் தொழில். சணல் விளையும் பிரதேசம் அநேகமாய்ப் பாகிஸ்தானைச் சேர்ந்துவிட்டது. ஆனால் வேலை செய்துவந்த 112 தொழிற்சாலைகள் மட்டும் நம்மிடம் இருக்கின்றன. நாளடைவில் பாகிஸ்தானுக்கும் நமக்கும் ஏற்பட்ட சச்சரவினால் சணல் அங்கிருந்து வருவதே சிரமமாகிவிட்டது. தொழிற்சாலைகளை வைத்துக் கொண்டு என்ன செய்வது? சணலை எங்கெல்லாம் பயிரிடலாம் என்று யோசித்தார்கள். தென் வங்காளம், பிஹார், உத்தரப் பிரதேசம், பம்பாய் முதலிய இடங்களில் தொடங்கலாம் என்று முடிவு செய்தார்கள். 1950-இல் மழைக் காலத்தில் அங்கெல்லாம் சணல் பயிரிட்டார்கள்.

வட கன்னடம், பெல்காம், கோலாப்பூர், டாணு, கொலாபா, ரத்தினகிரி முதலிய இடங்களில் உள்ள குடியானவருக்கும் சர்க்கார் நல்ல சணல் விதைகளைக் கொடுத்து உதவியது. சுமார் 800 ஏக்கர் பூமியில் சணல் விதைத்தார்கள். அதில் உள்நாட்டில் கிடைக்கும் ஜாதிச் சணலுடன் வங்காளத்திலிருந்து வரவழைத்த 'கொரகோரஸ் அலிடோரியஸ்', 'கொரகோரஸ் காப்ஸுலாரிஸ்' என்ற வகைகளைச் சேர்ந்த விதைகளை விதைத்தார்கள். இது குடியானவர்களுக்குப் புதிய பயிர்; பழக்கமில்லை. அதனால் பலன் அதிகம் கிடைத்ததாகத் தெரியவில்லை. அதற்கு வேண்டிய நல்ல எருவும் கிடைக்கவில்லை. வளமுள்ள பூமியில் விளைந்த செடிகள் மட்டும் 6 முதல் 8 அடி உயரம் ஓங்கித் தழைத்தன. இதைக் கண்ட பிறகுதான் அங்கே சற்று உற்சாகம் பிறந்தது. இப்பொழுது முக்கியமாக வட கன்னடம், பெல்காம், தாரவாடா, ரத்தினகிரி, கொலாபா, சாதாரா இந்த இடங்களில் இதைப் பயிரிட்டு வருகிறார்கள்.

சணல் நல்ல லாபம் தரும் பயிர். சிறிது சிரத்தை எடுத்துக்கொள்ள வேண்டும்; அவ்வளவுதான். ஜூன் மாதமோ அல்லது அதற்குக் கொஞ்சம் முன்பாகவோ விதைக்க வேண்டும். பயிர் முளைத்துச் சுமார் ஒன்றரை இரண்டு மாதங்கள் வரையில் மழை பெய்தால் நலம். நன்றாக வேரூன்றித் தழைக்கும். அதிகத் தண்ணீர் தேங்கினால் அழுகிவிடும். சுமார் 8 அடி உயரம் வளர்ந்த பயிரில் ஏக்கர் ஒன்றுக்குச் சுமார் 9 வங்காள மணங்கு சணல் எடுக்கலாம். சுமார் 200 ரூபாய் லாபம் கிடைக்கும். வங்காளத்தில் மணங்கு

மூலம்: ஸர்வோதய (கன்னடம்), மங்களூர்.

33 ரூபாயிலிருந்து 45 ரூபாய் வரையில் விலை போகிறது. மற்ற இடங்களிலும் இதே விலைக்குக் கிடைத்தாலும் தொழிற்சாலை வரையில் கொண்டு சேர்ப்பதற்குச் செலவு அதிகமாகி விடுகிறது.

சணலுக்கு எடுத்தது வங்காளந்தான். இது 12, 15 அடி உயரங்கூட வளருகிறது. பயிரின் அடிக் காம்பிலிருந்து சணல் வளர்கிறது. இது நான்கு மாதப் பயிர். விதைகளை விதைத்த மூன்றும் மாதம் பூ விட ஆரம்பிக்கும். பூ கொத்துக் கொத்தாக மஞ்சள் நிறமாய் இருக்கும். இரண்டு வாரங்களில் பூவெல்லாம் உதிர்ந்து காய்கள் வரும்.

'அலிடோரியஸ்' என்னும் வகையைச் சேர்ந்த சணலின் காய் நீளமாக இருக்கும். 'காப்ஸுலாரிஸ்' என்ற வகையின் காய் உருண்டையாக இருக்கும். முற்றியதும் காய்கள் வெடித்து விதைகள் சிதறும். விதையிலும் வேறுபாடு உண்டு. 'அலிடோ' விதை கறுப்பாகவும் 'காப்ஸு' விதை தாமிரவர்ணமாகவும் இருக்கும். விதைகளைச் சேகரிக்க அதுதான் சமயம். நார் எடுக்க அதுவரையில் காக்க வேண்டாம். மூன்று மாதங்களில் செடிகளை நறுக்க வேண்டும். ஐந்தாறு மாதத்தில் நார் மிகவும் உறுதியாக இருந்தாலும் 3 மாதத்தில் எடுக்கும் நாரைப் போல வழுவழுப்பாகவும் மிருதுவாகவும் இராது. செடிகளை அடியில் சுமார் மூன்று அங்குலம் வளர விட்டுவிட்டு அறுக்க வேண்டும். சுமார் 60 முதல் 100 வரையில் ஒரு கட்டாகக் கட்ட வேண்டும். இப்படிக் கட்டி இரண்டு மூன்று நாட்கள் வயலிலேயே போட்டு வைக்க வேண்டும். இலைகள் எல்லாம் உதிர்ந்த பிறகு எடுக்க வேண்டும். அவைகளை ஓடும் தண்ணீரிலாவது குளம் குட்டைகளிலாவது போட்டு ஊற வைக்கவேண்டும். அடி மண்ணில் புதைந்து சணலின் நிறம் மாறிவிடும். ஆகவே, அதன் மேல் அதிக கனம் போடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். இப்படியே கட்டுகள் சுமார் இருபது நாட்கள் இருக்க வேண்டும். இப்படி ஊறிய தண்டுகளுக்கு மேலுள்ள நாரையெல்லாம் கவனமாக உரித்தெடுத்துச் சுத்தமான நீரில் அலம்ப வேண்டும். பிறகு தொங்கவிட்டு உலர வைக்கவேண்டும்.

நன்ருக ஊறி எடுத்த 'அலிடோரியஸ்' வகையைச் சேர்ந்த சணல் மஞ்சளாகவும், 'காப்ஸுலாரிஸ்' வகையைச் சேர்ந்தது சுத்த வெள்ளையாகவும் இருக்கும்.

பம்பாயில் சணலுடன் மற்ருெரு நாரும் பயிராகிறது. அதன் பெயர் 'அம்பாடி.' சென்ற வருஷம் அது 21 ஜில்லாக்களில் சுமார் 6,000 ஏக்கர் பயிராயிற்று. அம்பாடி நார் சணலைப் போல் அவ்வளவு உயர்ந்தது என்று சொல்ல முடியாது; இருந்தாலும் முக்கால் பங்கு சணல் நாருடன் இந்த நாரைக் கால்பங்கு சேர்த்து உபயோகிக்க வசதியாக இருக்கிறது. இதை மொத்தமாக வங்காளச் சணல் தொழிற்சாலையில் வாங்கிக்கொள்கிருர்கள்.

சணலுக்கு இன்று 'டாலர்' மதிப்பு உண்டு. நெல்லைவிடச் சணலில் லாபம் குறைவு என்ருலும் உலகெங்கும் சணலுக்குக் கிராக்கி உண்டு. விவசாயமே முக்கியத் தொழிலாக உள்ள நம் நாட்டில் வேண்டிய சணல் பயிர் செய்தால் தொழிற்சாலைகளும் அபிவிருத்தியாகும். நெல் பயிராகும் பூமிகளில் சணல் நன்ருகப் பயிராகும்.

காந்திஜீயின் ராமராஜ்ய தத்துவத்தை உள்ளூற
உணர்ந்து உறுதி பிறழாமல் இருந்தவர் இந்த—

வரி கொடாத வீரர்

எழுதியவர்:
தில்குஷ் திவான்ஜீ

பார்டோலி சத்தியாக்கிரகத்தில் பிரபலமடைந்த காரடி கிராமவாசியான சத்தியாக்கிரக வீரர் பாஞ்சா படேல் 15—2—'51 அன்று தம் குடிசையில் உயிர் நீத்தார். அப்பொழுது அவருக்கு 85 வயது இருக்கும். பாஞ்சா குடியானவர். 1922-இல் காந்திஜீ பார்டோலியில் பொதுஜன சத்தியாக்கிரகம் தொடங்க இருந்த சமயத்தில், பாஞ்சா பூர்ண சுயராஜ்யம் கிட்டும் வரையில் அரசாங்கத்துக்கு நிலவரி செலுத்துவதில்லையென்று உறுதி கொண்டார். செளரி செளரா கலகத்தினால் காந்திஜீ சத்தியாக்கிரகம் தொடங்குவதை ஒத்திப் போட்டுவிட்டபோதிலும் பாஞ்சா வரி செலுத்துவதில்லை யென்ற தம் உறுதியிலிருந்து சிறிதும் வழுவவேயில்லை. அவர் காந்திஜீயைக் கண்டு பேசினார். கிழவருடைய உறுதியைக் காந்திஜீ புரிந்துகொண்டு அதற்கு மதிப்பளித்தார். வரி செலுத்தாமைக்காக அரசாங்கம் பாஞ்சாவின் நிலத்தை ஜப்தி செய்துவிட்டது. இதற்கு 17 வருஷங்களுக்குப் பிறகு முதல் முதலாக மாகாணங்களில் காங்கிரஸ் ஆட்சி ஏற்பட்டபொழுது சத்தியாக்கிரகத்தில் ஜப்தியான நிலங்களை அவைகளின் சொந்தக்காரர்களுக்குத் திருப்பிக் கொடுத்தார்கள். ஆனால் பாஞ்சா பூர்ண சுயராஜ்யம் பெறுவதென உறுதி கொண்டவராகையால் 1937-39-ஆம் வருஷத்தில் காங்கிரஸ் மந்திரி சபை நீடிக்காது என்று தெரிந்துகொண்டார். தம் நிலத்தைத் திரும்பப் பெற்றுக் கொண்டபோதிலும் வரி செலுத்துவதில்லை யென்ற தீர்மானத்தை அவர் மாற்றவேயில்லை. அப்போது அவர் காந்திஜியை மறுபடியும் போய்த் தரிசித்தார். அவருடைய தளரா உறுதி காந்திஜிக்கு மகிழ்ச்சி தந்தது; "பூர்ண சுயராஜ்யம் கிட்டும் வரையில் உங்கள் நிலத்தைக் காரடியில் நடக்கும் கதர் வேலைகளுக்குக் கொடுங்கள்" என்று ஆலோசனை சொன்னார். பாஞ்சாவும் அதை ஏற்றுக்கொண்டார். அன்று முதல் பூர்ண சுயராஜ்யம் கிட்டிய வரையில் அவருடைய நிலம் காரடியில் உள்ள பாரத வித்தியாலயம், காந்தி குடீரம் என்ற ஸ்தாபனங்களுக்குப் பயன்பட்டு வந்தது.

1946-இல் முதல் இடைக்காலச் சர்க்கார் ஏற்பட்டுப் பண்டித ஜவாஹர்லால் நேருவும் ஸர்தார் படேலும் மத்திய மந்திரி சபையில் சேர்ந்தபொழுது நிலத்தைத் திரும்பப் பெற்றுக்கொள்ளும்படி பாஞ்சாவிடம் கேட்டுக்கொண்டார்கள். அதற்கு அவர், "பூர்ண சுயராஜ்யம் எங்கே வந்திருக்கிறது?"

காப்பிரைட்: கதர் மலர் (தமிழ்: ஜூன் '51), திருப்பூர்.

என்று கேட்டுவிட்டு அந்த நிலத்தை உழமறுத்துவிட்டார். 1947 ஆகஸ்ட் 15-ஆம் தேதி இந்தியா பரிபூர்ண சுதந்தரம் அடைந்தபோது அதைக் கொண்டாடக் காரடியிலும் ஒரு கூட்டம் விமரிசையாக நடந்தது. வீரக் குடியானவரான பாஞ்சாவே அன்று கொடியேற்றி வைத்தார். "இனிமேலாவது நிலத்தைக் கவனித்துக்கொள்வீர்களோ இல்லையோ?" என்று அவரிடம் எல்லாரும் கேட்டார்கள். அவர் தலையை அசைத்துவிட்டு, "குடிகளுக்குப் போலீஸ், சேனை இவர்கள் உதவியை அண்டாமலே வாழ எப்போது தெரிகிறதோ அப்போதுதான் நான் கோரிய சுயராஜ்யம் கிடைத்தது என்பேன். பாபு (காந்திஜீ) ஏன் இன்னும் சாபர்மதிக்குத் திரும்பிவரவில்லை? அவர் சாபர்மதிக்குத் திரும்பும்போதுதான் நான் நிலத்தை உழுவேன்; வரி செலுத்துவேன்" என்ருர். ராமராஜ்யம் கைக்கு வரும்போதுதான் வரி செலுத்துவதென்பது அவருடைய உறுதியாகும். காந்திஜீ இதைக் குறிப்பிட்டு 28-12-'47-இல் 'ஹரிஜனபந்து'வில், "பாஞ்சா காகாவின் உறுதி ஒப்பற்றது. உண்மையான சுயராஜ்யம் கிடைக்கத்தானில்லை. அதற்கு இன்னும் எவ்வளவு காலம் செல்லவேண்டுமோ?" என்று எழுதினுர். காந்திஜீயும் மறைந்தார். பாஞ்சாவோ தம் உறுதியைக் கடைசி வரை விடவேயில்லை.

இந்தியா முழுதும் தேடினுலும் பாஞ்சாவைப் போன்ற சத்தியாக்கிரகி எங்கே கிடைப்பார்? காந்திஜீயின் பரமபக்தர் பாஞ்சா. அவர்தான் காரடியில் கதர் வேலையை ஆரம்பித்தவர். அவருடைய சகோதரர் மகனை வால்ஜீபாய் நெசவு வேலை செய்து வந்தார். 1934-இல் அங்கே கதர் உற்பத்தி ஸ்தாபனம் ஆரம்பித்தபோது கிராமம் கிராமமாகச் சுற்றி அலைந்து பாஞ்சா தாமே நூல் சேகரித்து வந்தார். உடலில் தென்பு இருந்த வரையில் அவர் தம் கையாலேயே பஞ்சு கொட்டிப் பட்டை போட்டு நூற்று வந்தார். 1922-இலிருந்து இறுதி வரையில் தமக்கு வேண்டிய ஆடை முழுவதையும் தாமே தயாரித்து வந்தார். அவர் கபீர்தாசரின் பக்தர். அவர் வீட்டு வாசலில் அடிக்கடி பஜனை நடக்கும். 1949-இல் ஆசாரிய விநோபா காரடிக்கு வந்திருந்தபோது பாஞ்சாவின் பஜனையைக் கேட்டு மகிழ்ந்தார். கடைசிக் காலத்தில் தம் சகோதரர் மகன் இறந்த பிறகு பாஞ்சா போதிய வருமானம் இல்லாமல் மிகவும் சிரமத்துடன் காலங் கழித்து வந்தார்.

அவர் நாகபுரிக் கொடிச் சத்தியாகிரகத்தில் கலந்துகொண்டு சிறை சென்றவர். அவருடைய வாழ்க்கை பக்தி ரசத்தில் தோய்ந்திருந்தது. அந்தப் பக்தியின் பலத்தைக் கொண்டே பூர்ண சுயராஜ்யத்துக்காகத் தாம் ஏற்ற விரதத்தை முடிவுவரையில் சிறிதும் வழுவாமல் கடைப்பிடித்தார்.

இயல்புக்கேற்ற மதிப்பு

ஒரு பெண்ணின் உடலைப் பிணமென்று மதிக்கிருன் துறவி; காமினி என்று கருதுகிருன் காமுகன்; மாமிசம் என்று நினைக்கிறது நாய்.

—பஞ்சதந்திரம்

கார்ட்டூன் கதம்பம்

சென்னை சர்க்காரின் ஒரே தொல்லை.

—'சங்கர்ஸ் வீக்லி'



காங்கிரஸைச் சீறி விலகி விதூஷக வீரர்கள்.

—'அமிருத பஜார்'



ஈரான் எண்ணெய்க் குழாய் படும் பாடு.

—'ஓரியெண்ட்'

தெய்வத் திருநாடு

—கிறிஸ்து சுட்டிக் காட்டியது—

இந்த மண்ணிலேயே சொர்க்க இன்பங்களை மனிதன் அடைய வேண்டுமென்ற ஆசை, வெறும் இலக்கியங்களில் மட்டும் அல்ல; மத நூல்களிலும் தென்படுகிறது. 'மஞ்சரி'யின் முந்திய இதழ்களில் மோரின் 'யுடோப்பியா' முதலியவற்றை விளக்கிய ஸ்ரீமான் ரா. ஸ்ரீ. தேசிகன் இங்கே ஏசுகிறிஸ்துவின் உபதேசத்தை விவரிக்கிறார்.

ஹோமர் தம் இலியத் மகா காவியத்தில், "அக்கிலீசின் அழற் சீற்றத்தைப் பாட அருளுக, அம்மே" என்று கவியாழை மீட்டுகிறார். அந்தச் சீற்றந்தான் ஐரோப்பியர் மனப் பண்பின் ஆதார சுருதியோ என்று சொல்லும்படி அந்தக் கண்டத்தில் சந்தாப்பங்கள் நிகழ்கின்றன. அந்தச் சீற்றத்தின் ஒலி இன்னும் நீண்ட காலக் கூடத்தில் ஒலிக்கிறது. ஏசுநாதர் கண்ட அருள் நெறியை நிறுவுவதற்காகவே கடும் போர்கள் தலை விரித்தாடின. இது விந்தையிலும் விந்தைதானே? 'அமைதி வேந்த'னாக விளங்கும் ஏசுநாதர் ஐரோப்பாவில் மீண்டும் நடமாடுவாரானால், அவரை நிச்சயம் சிலுவையில் ஏற்றிவிடுவார்கள். அவருடைய மலை உபதேசம் உலகத்தில் வேரூன்றியபாடில்லை.

ஒருவரிடத்தில் அறிவு செறிந்திருக்கும்; ஆனால் அன்போ ஒரு பனித்திவலை அளவுகூட இருப்பதில்லை. அன்பு இருக்கும்; அறிவு ஒளியை அங்கே காண முடியாது. அன்பும் அறிவும் சேர்ந்து ஓர் உருவாய் ஏசுநாதரிடம் காண்கிறோம்.

இத்தகைய மகானின் சரித்திரம் நமக்குக் கிடைக்கவில்லை. இவரைச் சுற்றிப் பற்பல கதைகள் எழுந்துவிட்டன. அவைகளைச் சலித்துத் தான் பார்க்க வேண்டும். ஜோசப் என்ற தச்சனுக்கும் மேரிக்கும் நாசரத் என்ற கிராமத்தில் இவர் பிறந்தார். பிறந்து முப்பது ஆண்டுகள் வரை இவரைப்பற்றிய செய்தி ஒன்றுமே கிடைக்கவில்லை. முப்பது வருஷ காலமாய்த் தம்மைப் பண்படுத்திக்கொண்டாரோ என்னவோ? ஜான் என்ற தீர்க்கதரிசியிடம் இவர் ஞானஸ்நானம் பெற்றார். "பாபிகள் அனைவரும் வருவீர்களாக; நரகத்தில் ஆழ்ந்துவிடாதீர்கள். உங்களைப் புனிதமாக்குகிறேன். விரைவீர்களாக" என்ற குரல் எழுகிறது. பற்பல பாபிகள் வருகிறார்கள். "உங்களை இந்த நீரைக் கொண்டு தூய்மையுள்ளவர்களாக்குகிறேன். என்னைக் காட்டிலும் ஒரு பெரியவர் தோன்றுவார்; அவர் உங்கள் மன மாசுகளை ஞானத் தீயைக்கொண்டு பொசுக்கி எரித்துவிடுவார்" என்கிறார் ஜான். அந்தப் பெரியவர் தான் ஏசுநாதர். அவரும் முப்பதாம் ஆண்டில் ஜானிடம் வருகிறார்.

அப்படி வருவதாயிருந்தால் அவரும் ஏதோ தீச்செயல் புரிந்திருக்க வேண்டும். ஞானிகள் உணர்கிற தீச்செயல்கள் நமக்குத் தீச்செயலாகத் தோன்றுவதில்லை. ஒரு பெரிய லட்சியக் குன்றின்மீது நின்றே தம் வாழ்க்கையை நோக்குகிறபொழுது அது மிக மாசு படிந்ததாய்த் தோன்றும். மாசற்ற வெண்சுவரில் ஒரு சிறிய கரிக்கோடும் பெரியதாய்க் காட்சி அளிக்கும்.

ஏசுநாதருக்கும் சோதனை ஏற்பட்டது. அவருக்கோ நாற்பதுநாள் போராட்டம். அந்தப் போராட்டத்தில் அவர் வெற்றியும் பெற்றார். இந்தப் போராட்டத்தைப் பார்க்கிறபோது உபநிஷத்தில் காணும் நசிகேதனின் நினைவு நமக்கு வருகிறது. ஒரு குன்றின்மீது சாத்தன் ஏசுவை அழைத்துச் செல்லுகிறான். பல ராஜ்யங்களின் கணக்கில்லாத செல்வங்கள் அவர் முன் விரிகின்றன.

"ஆண்டவன் அருட் குழந்தை நான். அந்தப் பேரின்பத்தைக் கண்ட நான் இவைகளுக்கு வசமாவேனோ?" என்கிறார் ஏசு. "ஆண்டவன் குழந்தையாய் நீ விளங்குவது உண்மைதானா?" என்ற குரல் அடிக்கடி அவரைத் தொடர்கிறது. இரவு பகல் அது அவர் செவியில் ரீங்காரம் செய்கிறது. "ஆம், ஆம்" என்றே அவர் பதிலுரைக்கிறார். கடும் பசியிலும் ஆண்டவனை மறக்கவில்லை. இறுதியில் தாம் பெற்ற பேறு எல்லாரும் பெற முடியும் என்று உலகம் கேட்கச் சாற்றினார்.

தாம் கண்ட உண்மை ஒளியை எங்கும் பரப்ப முயன்றார். "நான் மட்டும் ஆண்டவன் அருட்குழந்தை அல்ல. உலக மக்கள் அனைவரும் அவன் குழந்தைகளே" என்ற உண்மை அவர் உள்ளத்தில் உதயமாயிற்று. இந்த நற்செய்தியை உலகத்துக்கு வழங்கினார். இதை நிலைநாட்டுவதற்குத் தம் உயிரையும் இழந்தார்.

"அதோ தெரிகிறது, ஆண்டவன் அருள் நாடு. அதில் புகுவதற்கு அவனுடைய குழந்தையாய் ஆக வேண்டும். ஆண்டவனிடத்தில் அசையாத நம்பிக்கை வேண்டும். எல்லாரையும் சகோதரர்களாய்ப் பாவித்தல் நலம். பணிவுள்ள உள்ளம் கொண்டவர்களுக்கே அவன் நாடு கிட்டும். ஆடி ஆடி அகம் கரைவோர்க்கே ஆறுதல் உண்டாகும். உள்ளத் தூய்மை உள்ளவர்களே உத்தமனைக் காண்பார்கள். அறம், பசி, தாகம் உள்ளவர்களே பாக்கியம் புரிந்தவர்கள். எத்தனை இன்னல்கள் நேர்ந்தாலும் அறத்தையே வளர்த்து வாருங்கள். முன் மொழிந்த அறத்தை நான் அழிக்கத் தோன்றவில்லை; அதை நிறைவேற்றவே உங்களிடையே வந்திருக்கிறேன். கொலை செய்யாதீர்கள் என்று முன்னோர் கூறினார்கள். கொலைக்குக் காரணமான சீற்றத்தை அகற்றுங்கள். என் கோயிலுக்குள் நுழைவதற்கு முன் உங்களிடையே நிகழும் சச்சரவுகளைத் தீர்த்துக் கொண்டு வாருங்கள். பிறர் மனைவிமாரின் தோள் தோயாதீர்கள் என்று பெரியோர்கள் கூறினார்கள். மனத்தாலும் அவர்களை விரும்பாதீர்கள் என்று நான் சொல்லுகிறேன். மனத்தில் புரிகிற பாவம் மிகக் கொடியது. கண்ணுக்குக் கண்ணைப் பிடுங்குகிற வழக்கம் முன்பு இருந்தது. ஆனால் இனி ஒரு கன்னத்தில் அறைந்தால் மற்றொரு கன்னத்தைக் காட்டுங்கள்.

"அன்பர்களுக்கு அன்பைக் காட்டுங்கள்; பகைவர்களை வெறுத்துத் தள்ளுங்கள் என்றெல்லாம் முன்பு மொழிந்தார்கள். ஆனால் நான் கூறுவது இதுதான்: 'உங்களை நிந்தித்தவர்களுக்கு ஆசி கூறுங்கள்; உங்களை வெறுத்தவர்களை அன்புறத் தழுவுங்கள். மழையும் வெயிலும் எல்லோர் மீதும் சமமாக விழவில்லையா? விண்ணிலுள்ள ஆண்டவன் போல நீங்களும் பூர்ண நிலையை அடையுங்கள்." - இந்தச் சுருதியில் அவருடைய உபதேச மொழிகள் அமைந்திருக்கின்றன. ஆண்டவனைப்போல் திகழ வேண்டும் என்பதே ஏசுநாதரின் கொள்கை. "இந்த உலகமும் விண்ணுலகம் போல் ஆகவேண்டும்" என்று இடையறாமல் உபதேசித்து வந்தார்.

ஏசுநாதர் வழங்கிய உவமைகள் யாவும் அவர் வாழ்க்கையில் கண்டவையே. பட்டியிலிருந்து ஓர் ஆடு தவறி வெளியே சென்றாலும் அதைத் தேடிச் செல்லுகிறான் இடையன். இதை நிதம் கண்டிருப்பார் ஏசுநாதர். இதிலிருந்து ஒரு பேருண்மையை விளக்கிக் காட்டுகிறார். ஆண்டவன் ஓர் இடையன். நாமெல்லாம் பசுக்கள். அந்தக் காரணம்பற்றியே பகவானுக்கும் பசுபதியென்று ஒரு பெயர் வழங்குகிறது. தம்முடைய அருட்பட்டியில் நம்மைக் கொண்டு வந்து சேர்க்க அவன் அவதாரம் செய்கிறான். நம்முடைய இன்னல்களை நீக்க அவன் மானிட ஜாதியில் பிறந்து கணக்கில்லாத துன்பங்களை அநுபவிக்கிறான். உலகத்துயரின் பாரத்தைத் தாங்கியே ஏசுநாதர் சிலுவையில் தம் உயிரை நீத்தார். நம்மாழ்வாரும் அவதார ரகசியத்தை நமக்கு வெளியிட்டிருக்கிறார். நாம் கடைத்தேற ஆண்டவன் அவதாரம் செய்கிறான் என்று கூறுகிறார்.

"பொய்ந்நின்ற ஞானமும் பொல்லா
   வொழுக்கும் அழுக்குடம்பும்
இந்நின்ற நீர்மை யினியாம்
   உறாமை உயிரளிப்பான்
எந்நின்ற யோனியுமாய்ப்
   பிறந்தாய் இமையோர் தலைவா
மெய்ந்நின்று கேட்டருளாய்
   அடியேன் செய்யும்
      விண்ணப்பமே."

உலகமுய்ய ஆலத்தை உண்டார் சிவபிரான்; சிபி பறவைக்காகத் தன் தசையை அரிந்து ஈந்தான். பிராமத்தியூஸ் உலகத்தாரின் நலத்துக்காக அநுபவித்த இன்னல்களுக்குக் கணக்கே இல்லை.

"உயர்ந்த தியாகந்தான் ஆத்மாவின் நலத்துக்குக் காரணமாயிருக்கிறது" என்று ஏசுநாதர் சொல்லுகிறார். "எல்லாவற்றையும் விட்டுவிட்டு என்னையே தஞ்சமாய்ப் புகுவாய்" என்று அவர் கூறிய உபதேசத்துக்கும் கண்ணன் காட்டிய வழிக்கும் எத்தனை ஒற்றுமை இருக்கிறது பாருங்கள். உலகத்தையெல்லாம் அடைந்து ஆத்மாவை இழப்பதில் லாபமுண்டோ என்று ஏசுநாதர் மொழிகிறார். "பகவானுடைய பற்றும் தனக்குப் போய் விட்டது என்ற நிலையில்தான் அவர் அருள் கிட்டும்" என்று கீர்க்கிகரோ சொல்கிறார். ஆத்மாவை அறியாதவர்கள், ஆத்மாவைக் கொன்றவர்கள் என்று உபநிஷத்துக்கள் முறையிடுகின்றன. "ஆத்ம லாபத்தைக் காண்பதற்கு ஆத்மாவைச் சமர்ப்பணம் செய்துவிடவேண்டும். தியாகத்தின் மூலம் நீ இன்பம் அடைவாயாக. தன்னை இழந்தவன் தன்னைக் காண்கிறான்" என்று ஏசுநாதர் கூறுகிறார். அவ

ருடைய வாக்குகள் எல்லாம் உப நிஷத்தின் சுருதியில் செல்லுகின்றன. "தன்னைத் தியாகம் செய்வதில் ஒருவன் தன்னிலே நாட்டுகிறான்" என்று ஆண்டிரே ஜீட் தம் குறிப்புகளில் எழுதியிருக்கிறார். குற்றமற்றவர்கள் உலகில் இல்லை. குற்றங்களை நீக்க ஒரே வழி உண்டு. குற்றங்களைப் புரிந்ததற்காக மனம் நைந்து உருகினால் அவன் அருள் வாயில் திறக்கும். ஆண்டவன் ஒருவன்தான் நமக்கு நியாயம் தர முடியும். உதாரணமாக, ஒரு பெண் நேர்மையிலிருந்து வழுவிவிடுகிறாள். அந்தக் காலத்தின் சட்டத்துக்கேற்ப அவளைச் சந்தியில் நிறுத்தி அவள்மேல் கல்லை எறிய வேண்டும். "குற்றமற்றவர்கள் அவள் மேல் கல்லை எறியலாம்" என்று ஏசுநாதர் கூறினார். ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் ஆத்மாவின் ஆழத்தை நோக்குகிறார்கள். அதில் மாசு மண்டிக் கிடப்பதைக் கண்டு அகன்றுவிடுகிறார்கள். ஏசுநாதரும் அந்தப் பெண்ணும் மட்டுமே நிற்கிறார்கள். "தீய பழக்கத்தை விட்டுச் சரியாக நட" என்று அவர் சொல்கிறார். டால்ஸ்டாய் 'புத்துயிர்' என்ற தம் நூலில் (Resurrection) ஓர் அழகிய சந்தர்ப்பத்தைச் சுட்டுகிறார்: நீதி மன்றத்துத் தலைவர் விரைவாய் விபசாரக் குற்றத்தை விசாரணை செய்கிறாராம். அதன் காரணம் தெரியுமா? ஒரு சுவிஸ் மகளைச் சேரவே இத்தனை பரபரப்பு என்று நகைச்சுவை ததும்பக் கூறுகிறார் டால்ஸ்டாய். ஏசுநாதர் நிறுவும் தெய்வ அரசியலில் நீதிமன்றங்களுக்கு இடம் இல்லை.

"அவன் அரசியல் உன் உள்ளத்தில்தான் திகழ்கிறது. உள்ளத் தூய்மையில்தான் எல்லாம் நிலை பெற்றிருக்கின்றன. உள்ளத் தூய்மை இல்லாமல் வெளி அரசியல் திட்டங்களை வகுத்து என்ன? ஒன்றும் பயனில்லை. கந்தலுக்குப் பூப் போடுவதைப் போலத்தான்" என்று ஆண்டிரே ஜீட் கூறுகிறார். "தியாகம் செய்வதை ஆடம்பரமாய்ச் செய்யாதே. ஒரு கைம்பெண்ணின் சிறு காசையே ஆண்டவன் பெருங் காணிக்கையாய்க் கருதினான். அன்பு இன்றி எத்தனை பெரிய காணிக்கைகளை உண்டியில் போட்டும் பயனில்லை. ஒரு கை செய்கிற தியாகம் மற்றொரு கை அறியாமல் இருப்பது நலம். பட்டினி கிடப்பதைப் பறையடிக்காதே. பட்டினியை மறைக்க மார்பில் சந்தனம் கமழட்டும். ஆண்டவன் உவக்க அறம் செய்யுங்கள். பிறர் தீங்கைக் களைய அவர்களுக்கு நலமே புரிய வேண்டும்." - விக்டர் ஹ்யூகோ பாதிரி மிரியல் மூலம் இந்தத் தத்துவத்தை வெளியிட்டுள்ளார். "மறத்திற்கும் அஃதே துணை" என்கிறார் வள்ளுவரும். தீங்கிழைத்தோருக்கு 'அவர் நாண நன்னலம் செய்வது' தானே சான்றோருக்கு அழகு? தனி மனிதனுடைய நெறியை வகுக்கும்போது வள்ளுவர் சிறந்தோங்குகிறார். ஆனால் பொருட்பாலில் அவர் லட்சியம் குறைந்து போகிறது. அருள் நெறியை அரசியலிலும் புகுத்தவில்லை. கம்பனோ வள்ளுவரின் ஞானக் குழந்தை. ஆனால் பிள்ளை தந்தையை வென்றுவிடுகிறான். அரசியலும் அன்பு நெறியில் செல்லவேண்டும்; "யாரொடும் பகை கொள்ளாதிருப்பின் போர் ஒடுங்கும்" என்கிறான்.

எவர் நம் சகோதரர் என்ற கேள்வியை ஏசுநாதர் கேட்டுக் கொண்டு அதற்கு விடையும் தரு

கிருர். "எவன் என் அன்பு நெறியைப் பின்பற்றுகிருனே அவன் தான் என் சகோதரன்" என்று மொழிகிருர். யூதர்கள் தங்கள் இனத்தாருக்குத்தான் விடுதலை என்ருர்கள். மற்றவர்கள் அழிவார்கள் என்று கருதினுர்கள். ஏசுநாதரோ ஒரு புதிய சகாப்தத்தை நிறுவினுர். "அன்பு நெறியை நிறைவேற்றுங்கள். அகிலப் பிரபஞ்சத்துக்கும் வழியுண்டு" என்று முரசடித்தார். கம்பனும் சகோதரத்தன்மையை வலியுறுத்திக் கொண்டே போனுன். "ஐவரானேம், அறுவரானேம்" என்று சகோதரர்களைப் பெருக்கிக் கொண்டே போகிருன்.

"ஆண்டவனுக்குச் சேவை செய்வது சமூகத் தொண்டேயாகும். மக்களை வெறுத்து ஆண்டவனை அடைய முடியாது" என்பதை ஏசுநாதர் வலியுறுத்தினுர். உலகத்துத் தலைவனுக வர ஒருவன் விரும்பினுல் அவன் ஒரு பணியாளனுய்த் திகழவேண்டும். கைங்கரியத்தின் மூலந்தான் மக்கள் கடைத்தேற முடியும். அன்புமயமாய் நிற்பதில் ஏசுநாதர் ஒரு சைவர். பிறருடைய துயரத்தைக் கண்டு இரங்குவதில் ஒரு பௌத்தர். துன்பம் களைவதற்காகக் கைங்கரியம் செய்வதில் அவர் ஒருவைணவர். இந்த மூன்று உருவங்களும் ஓர் உருவமாய் அவரிடத்தில் திகழ்ந்தன. அனைவரும் ஆண்டவன் குழந்தைகள் என்ற காரணத்தால், சகோதரர்களாய்ப் பழகவேண்டும். எல்லாரும் சமமானவர்கள். சமமென்ருல் அறிவில் இல்லை; ஆற்றலில் இல்லை. அவரவர் சக்திக்குத் தகுந்த முறையில் ஆண்டவனுக்குத் தொண்டு செய்வதில்தான் சமத்துவம் ஏற்படுகிறது. குற்றங் குறைகளைப் பொருட்படுத்தாமல் மன்னித்து அன்பு காட்டுவதையே விரதமாகக் கொள்ளவேண்டும். அறம், தியாகம், அன்பு, பொறுமை, தொண்டு இவைகளை அஸ்திவாரமாகக் கொண்டது அவர் எழுப்பும் அருள் நாடு. இப்போது அறிவு விரிந்திருக்கிறது. அருள் உண்டோ? அதுதான் இல்லை. அன்பும் அறிவும் சேர்ந்து உறவாடுகிற நிலையில்தான் ஏசுநாதர் உருவம் தோன்றும். அவர் கண்ட கனவு உருவாவதற்குத் தொண்டர்கள் தோன்றவேண்டும். உலகம் அவர் கண்ட கனவைத் தனக்கு ஒரு லட்சியமாய்க் கொள்வதன் மூலந்தான் அமைதி அடையமுடியும்.

லாபமடையும் வழி

அடக்க விலைக்கும் குறைவாகச் சில கடிகாரங்களைத் தாங்கள் விற்பதாகப் பத்திரிகைகளில் ஒரு கம்பெனியார் விளம்பரம் செய்திருந்தார்கள்.

அந்தக் கம்பெனிக்குள் புகுந்தார் ஒரு கனவான். "நீங்கள் இந்தக் கடிகாரங்களை அடக்க விலைக்கும் குறைவாக விற்ருல், லாபம் எப்படிச் சம்பாதிக்கிறீர்கள்?" என்று கேட்டார்.

"அதுவா? இந்தக் கடிகாரங்களை ரிபேர் பார்ப்பதன் மூலமே சம்பாதிக்கிருேம்" என்ருர் கம்பெனி மானேஜர்.

—இ. ஏ. சாமி, 'கரோனெட்.'

இந்தியாவில் இன்று எத்தனையோ பத்திரிகைகள் உலவுகின்றன. இதற்கெல்லாம் ஆதிகர்த்தா யார் தெரியுமா?

இந்தியாவின் முதல் பத்திரிகை

★

இந்தியாவில் முதல் முதலாக வெளியான தினசரிப் பத்திரிகை 'பெங்கால் கெஜட்' என்பது தான். கல்கத்தாவில் 1780-ஆம் வருஷம் ஜனவரி 29-ஆம் தேதி சனிக்கிழமையன்று இந்தப் பத்திரிகை வெளிவந்தது. "எல்லாக் கட்சிக்கும் சொந்தமானது; எவருடைய செல்வாக்குக்கும் கட்டுப்பட்டது அல்ல; வாரந்தோறும் அரசியல், வர்த்தகச் செய்திகளைப் பிரசுரிக்கும்" என்று தன்னைப் பற்றி இது வர்ணித்துக் கொண்டது. இரண்டே தாள் கொண்டது இந்தப் பத்திரிகை. இதன் நீளம் 12 அங்குலம்; அகலம் 8 அங்குலம். ஒவ்வொரு பக்கமும் மூன்று பத்திகள் கொண்டது. உள்ளூரிலிருந்தும் அயலூரிலிருந்தும் நிருபர்கள் அனுப்பும் செய்தி, ஐரோப்பாவிலிருந்து புதிதாக வந்த பத்திரிகைச் செய்திகளின் விளம்பரம் ஆகியவையே இதில் அடங்கிய விஷயங்கள்.

ஜேம்ஸ் அகஸ்டஸ் ஹிக்கி என்பவர் இதன் சொந்தக்காரர். இவரே இதற்கு ஆசிரியர். 'இந்தியா ஹவுஸ்' மூலமாக இவர் இங்கிலாந்திலிருந்து இந்தியாவுக்கு வந்தவர். இவர் ஒரு வேளை அச்சுத் தொழிலில் ஈடுபட்டவராக இருந்திருக்கலாம். இவருடைய பத்திரிகை 1782 - ஆம் ஆண்டு நின்றுவிட்டது. 1780 மார்ச்சிலிருந்து 1782 மார்ச் முடிய வெளிவந்த இந்தப் பத்திரிகையின் மாதிரிப் பிரதி ஒன்று பிரிட்டிஷ் பொருட்காட்சிச் சாலையில் இருக்கிறது. இதன் சில பிரதிகள் கல்கத்தா பொருட்காட்சிச் சாலையிலும் இருக்கின்றன.

இது வெளிவருவதற்கு முன்பு செய்திகளை அறிந்துகொள்ள மக்களுக்கு வேறு ஒரு சாதனம் இருந்தது. ஒரு சமயம் போல்ட்ஸ் என்பவர் கும்பெனியில் வேலை பார்த்து வந்தார். ஜனங்கள் பொதுவாகத் தெரிந்துகொள்ள வேண்டிய விஷயங்கள் என்று அவர் சில விஷயங்களைத் தாமே தேர்ந்தெடுப்பார். அவைகளை எழுதித் தம் வீட்டின் முன் வைத்துவிடுவார். காலையில் 10 மணியிலிருந்து 12 மணிக்குள் யார் வேண்டுமானாலும் அவர் வீட்டுக்கு வந்து செய்திகளைப் படித்துக் கொள்ளலாம்; அல்லது நகல் செய்துகொண்டு செல்லலாம்.

'பெங்கால் கெஜட்'டின் ஆரம்பத்தில் பொதுவாக அதற்கு நல்ல வரவேற்பு இருந்தது. கல்கத்தாவிலும் வெளி இடங்களிலும் பலர் பத்திரிகையை ஆதரித்தார்கள். விளம்பரம், ஆசிரியர் பக்கம் இவைகளைத் தவிரக் கவிதைப் பகுதி ஒன்றும் இந்தப் பத்திரிகையில் இருந்தது. மிகவும் பழைய முறையில் கல்யாண விளம்பரங்களும் அதில் வருவதுண்டு.

மூலம்; ஓரியெண்ட் (ஆங்கிலம்; 27-5-'51), கல்கத்தா.

ஆரம்பத்தில் இருந்தது போலவே இந்தப் பத்திரிகை ஒரே மாதிரியாகவும் மோசமாகாமலும் இருந்திருந்தால் மிக நல்ல நிலைமையை அடைந்திருக்கும். ஆனால் கீழ்த்தர மக்களின் விருப்பங்களைப் பூர்த்தி செய்வதில் இது இறங்கி விட்டது. வாலிபப் போக்கிரி ஒருவனின் அருவருக்கத்தக்க நடத்தையும் சம்பவங்களும் தொடர்ந்து இதில் பிரசுரமாயின. இதில் வந்த இலக்கிய விஷயமும் வெறுப்பைக் கொடுக்கக்கூடியதாகவே இருந்தது.

பிரபுக்களையும் அவர்களுடைய நடவடிக்கைகளையும்பற்றிச் சதா வம்பு பேசுவதில் சிலருக்கு மிகவும் பிரியம். இப்படிப்பட்டவர்களுக்கு வேண்டிய விஷயங்களும் இதில் வெளிவந்தன. ஒரு வருஷத்துக்குப் பிறகு இதற்குப் போட்டியாக 'இந்தியா கெஜட்' என்று மற்றொரு பத்திரிகை வெளியாயிற்று. தபால் ஆபீஸில் அந்தப் புதிய பத்திரிகைக்குச் சில சலுகைகள் கிடைத்தன. இதனால் ஆத்திரமடைந்த ஹிக்கி, அந்தப் போட்டிப் பத்திரிகை கவர்னர் ஜெனரல் வாரன் ஹேஸ்டிங்ஸின் மனைவியிடம் இச்சகம் பாடி உதவி பெற்றதாகவெளிப்படையாக அதைப் பழித்தார். தம் மனைவியைச் சம்பந்தப்படுத்திப் பல முறை இந்த மாதிரி கடுமையாகப் பழிக்கவே கோபம் கொண்ட கவர்னர்ஜெனரல், கீழ்க்கண்ட உத்தரவைப் பிறப்பித்தார்: ''வில்லியம் கோட்டை. 14உ நவம்பர், 1780. 'பெங்கால் கெஜட் அல்லது கல்கத்தா ஜெனரல் அட்வர்ட்டைசர்' என்னும் பெயரில் ஜே. ஏ. ஹிக்கி என்பவர் வெளியிடும் வாரப்பத்திரிகை தனி மனிதர்களின் சொந்த வாழ்க்கையைப் பற்றி அவதூறான விஷயங்களைப் பிரசுரிக்கிறது. அதனால் ஸெட்டில்மெண்டின் அமைதி குலைகிறது. எனவே, இனிமேல் அந்தப் பத்திரிகையை ஜெனரல் தபால் ஆபீஸின் மூலமாக விநியோகிக்க அநுமதி யில்லை.''

இந்த உத்தரவினால் பத்திரிகையின் வெளியூர்ச் சந்தாதாரர்களுக்குப் பத்திரிகை போவது நின்றது. இதனால் ஹிக்கிக்குக் கோபம் அதிகரித்தது. ஆண், பெண் வித்தியாசம் இல்லாமல் தனிப்பட்டவர்களைப்பற்றி முன்னைவிட அதிக ஆபாசமாக எழுத ஆரம்பித்தார்.

ஜூன் மாதத்தில் ஒரு நாள் ஹிக்கியைக் கைது செய்தார்கள். 40,000 ரூபாய்க்கு ஜாமீன் கட்டச் சொன்னார்கள். அது முடியாமல் அவர் சிறைக்குச் சென்றார். விசாரணையின்மேல் அவருக்கு ஒரு வருஷச் சிறைத் தண்டனையும் 7,000 ரூபாய் அபராதமும் விதித்தார்கள். இதனால் எல்லாம் ஹிக்கியின் பத்திரிகை நின்று விடும் என்று எதிர்பார்த்தார்கள். ஆனால் சிறையில் இருந்து கொண்டே ஹிக்கி தம் பத்திரிகையில் விரோதிகளைத் தாக்கினார். கடைசியில் அச்சுக்கூடத்தைக் கும்பெனி சர்க்கார் பறிமுதல் செய்தது. பத்திரிகையும் நின்றது. ஹிக்கியின் பத்திரிகைக்குப் போட்டியாகத் தோன்றிய பத்திரிகை எதிரியற்று ஜோராய் வெளிவரத் தொடங்கியது. முதல் முதல் இந்தியாவில் பத்திரிகை தொடங்கிய ஹிக்கியின் தண்டனை குறைந்ததா, சிறைவாசம் நீங்கியதும் ஹிக்கி தம் தாய் நாடு சென்றாரா என்பதைப்பற்றியெல்லாம் ஒரு விவரமும் கிடைக்கவில்லை.

உடற்பயிற்சி வேண்டாம்

★

தேகப்பயிற்சி மோகம் வலுத்திருக்கும் இந்த நாளில், அதற்கு எதிர்க் கட்சி பேசும் இது, வெறும் வேடிக்கைக் கட்டுரை அல்ல; ஆராய்ச்சி செய்த நிபுணர்களின் அபிப்பிராயத்தைத் தாங்கியது. ஹண்ட் என்பவர் எழுதியதை ஆதாரமாகக் கொண்டது.

"எல்லாரும் உடற் பயிற்சி செய்யவேண்டும். அப்போதுதான் உடல் உறுதி ஏற்படும்" என்று பெரிய பெரிய பயில்வான்களும் உடற்பயிற்சியில் அக்கறை கொண்டவர்களும் பிரசாரம் செய்கிறார்களே, அதெல்லாம் சுத்த அபத்தம் என்று 'டாரண்டோ மகஸீன்' என்ற பத்திரிகையில் மார்ட்டன் ஹண்ட் என்பவர் எழுதியிருக்கிறார்.

உடற்பயிற்சிபற்றி விஞ்ஞானிகள் பலர் ஆராய்ந்ததில் ஓர் உண்மை தெரிந்தது:

உடற்பயிற்சி செய்தால்மட்டும் நோய் நொடி அணுகாது, நீண்ட நாள் வாழ முடியும் என்று சொல்லி விடுவதற்கில்லை; அப்படிச் செய்து கொண்டேயிருந்தால் மேலும் மேலும் சிரமமான பயிற்சிகளைச் செய்வதற்குச் சௌகரியமாக இருக்கும்; அவ்வளவுதான்!

சில சமயம் உடற்பயிற்சியால் நன்மை ஏற்படலாமோ என்னவோ? பெரும்பாலும் அதனால் உடம்புக்கு அதிகக் கெடுதல்தான் நேர்கிறது. வீண் பணச் செலவும் சரீர சிரமமும் அதிக உணவும் உடம்பில் தண்டச் சதையுந்தான் நாம் காணும் பலன். காரணம் இல்லாமல் காரை வேகமாக ஓட்டி என்ன லாபம்? மெஷின் கெட்டுப் போகும்; அவ்வளவுதான். அதேமாதிரிதான் நம்முடைய உடம்பும். சிரமமான உடற்பயிற்சி செய்யும்போது நம் இருதயத்திலிருந்து வழக்கத்தை விட நாலைந்து மடங்கு ரத்தம் உடல் முழுதும் பாயவேண்டியிருக்கிறது. இதனால் தசை அணுக் (Cells)களில் பெருத்த அளவில் மாறுதல் ஏற்படுகிறது; ரத்த அழுத்தமும் உடல் உஷ்ணமும் ஏறுகின்றன; ரத்தக் குழாய்களையும் இருதயத்தையும் ரத்த அணுக்களையும் இது பாதிக்கிறது.

பயில்வான்களுக்கு இது பழக்கப் பட்டுப் போய்ச் சகஜமாக இருக்க



லாம். நம்மைப்போல் சாதாரணப் பேர்வழிகளுக்கு இதெல்லாம் எதற்கு?

"வயது 40க்கு மேற்பட்டால் சிரமமான உடற்பயிற்சி செய்யக் கூடாது; அது தற்கொலை செய்துகொள்வதற்குச் சமானம்" என்று சட்டம் விதித்துவிட வேண்டும். என்னதான் ஆரோக்கியமுள்ளவனுக இருந்தாலும் 40 வயதுக்கு மேல் ஒரு மனிதனுக்கு இருதயம், ரத்தக் குழாய், அவயவங்கள் எல்லாமே சற்றுத் தளர்ந்துவிடுகின்றன; சிரமம் தாங்காது. எப்போதும் அதிகப் பரபரப்புடனேயே வேலை செய்துகொண்டிருந்தால் விரைவில் உடல் குன்றிவிடும்.

உடற்பயிற்சியில் நமக்கு இவ்வளவு மோகம் இருப்பதிலிருந்து ஒன்று நிச்சயமாகத் தெரிகிறது; நாம் இன்னும் பக்குவம் அடையவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். வெகுகாலமாக நாகரிகத்தில் சிறந்து விளங்கும் சில ஜாதியார் இதைப்பற்றியெல்லாம் அக்கறைப்பட்டுக்கொண்டிருக்கவில்லை. ஹிந்து யோகிகளைப் பார்த்திருக்கிறீர்களா? அவர்கள் கட்டுமஸ்தாகவா இருக்கிறார்கள்? இயற்கை முறையை அநுசரித்து அவர்கள் யோகாப்பியாசம் செய்து அமைதி பெறுகிறார்கள்; சும்மாத் தசையை வளர்த்துக்கொண்டிருக்கவில்லை.

ஓர் அமெரிக்க ஆசிரியர் எழுதிய நாவலில் வரும் விவரம் இது: கோடையில் ஒருநாள் இரண்டு ஆங்கிலேயர்கள் வேர்க்க விறுவிறுக்க மும்முரமாக டென்னிஸ் ஆடிக்கொண்டிருந்தார்களாம். இதை ஒரு சீனத் தத்துவ ஞானி கவனித்தார். அவருக்கு ஒன்றும் புரியவில்லை; "ஏன் ஐயா, இந்தச் சிரமமெல்லாம்? யாராவது கூலியாட்களைக் கூப்பிடக்கூடாதா? இந்தக்காரியத்தைச் செய்துவிட்டுப் போவார்களே!" என்றாராம்.

மார்க் ட்வெயின் என்ற அறிஞர், "நான் உடற்பயிற்சி செய்தே வழக்கமில்லை. ஆனால் அப்படிச் செய்து பழகிய பயில்வான்கள் பல பேருடைய பிணத்தைத் தூக்கித் தூக்கி என் உடம்பு கட்டைபாய்ந்துவிட்டது" என்று எழுதியிருக்கிறார். அவர் 75 வயதில் காலமானார்.

ஒரு காலத்தில் ஆயுதம் எதுவும் இராத சமயத்தில் கொடிய விலங்குகளிடமிருந்து தன்னைக் காத்துக்கொள்ள மனிதன் கட்டுமஸ்தாக இருந்திருக்க வேண்டியதுதான். இப்போது அது அவசியமேயில்லை.

"என் மார்பின் அகலத்தைப் பார்த்தீர்களா? 47 அங்குலம்!" என்றெல்லாம் உடற்பயிற்சி நிபுணர்கள் பெருமை யடித்துக்கொள்ளலாம். அவர்கள் சொல்கிற முறைகளைக் கடைப்பிடித்தால் நாமும் அப்படி ஆகலாம். ஆனல் குமாஸ்தா வேலை, டைப் அடிப்பது, தட்டுமுட்டு வியாபாரம் செய்வது, சித்திரம் வரைவது இந்தமாதிரி

காரியங்களுக்கு அதனால் ஏதாவது நன்மை உண்டா? ஒன்றும் இல்லை.

"நெடுநேரம் மூச்சை இழுத்துப் பிடிக்கவேண்டும்; மார்பு பரந்து விரியும்" என்று அநேகம் பேர் சொல்கிறார்கள். ஆனால் குறுகிய மார்பும் தோளும் இருந்தால்தான் நல்லது என்று தெரிகிறது. இன்னும் கேட்டால் நெடுநேரம் மூச்சை இழுத்துப் பிடித்துப் பழகியவர்கள் சாதாரண ஆசாமிகளை விடச் சுமார் கால் பங்கு குறைவாகவே சுவாசிக்கிறார்கள் என்று சொல்லவேண்டும்.

ஓர் அமெரிக்க இன்ஷ்யூரன்ஸ் கம்பெனியார் இளவயதில் உடற்பயிற்சியில் தேர்ந்து விளங்கிய 5,000 பேரைப்பற்றி ஆராய்ந்தார்கள். சாதாரண ஆசாமிகளைவிட அப்படி நீடித்து அவர்கள் வாழ்ந்ததாகவோ சீக்கிரமே இறந்துவிட்டதாகவோ தெரியவில்லை. ஆனால் 45 வயதான பிறகு அவர்களில் பாதிக்கு மேற்பட்டவர்கள் இருதயத்தில் நோய் கண்டு இறந்துவிட்டார்கள் என்று தெரிந்தது. இதற்கு உடற்பயிற்சியில் அக்கறையுள்ளவர்கள் சொல்லும் சமாதானம் என்ன தெரியுமா? "ஏற்கனவே அப்பேர்ப்பட்டவர்களுக்கு இருதயம் ஒரு மாதிரியாகத்தான் இருந்திருக்கும்" என்று சொல்லுகிறார்கள்.

வீண் பெருமைக்காக இப்படியெல்லாம் உடம்பை வருத்திக்கொள்வது அப்புறம் ஆபத்தாகத்தான் முடியும். ஆனால் உண்மை உணர்ச்சியோடு ஒரு வேலையில் ஈடுபடும்போது உடலை வருத்திக்கொண்டால் இப்படி நேராது. அப்போது அட்ரனலின் போன்ற திரவங்கள் உடலிலிருந்து தோன்றும்; ரத்தக் குழாய்கள் இறுகிக்கொண்டு ரத்த அழுத்தம் ஏற்படும். இதனால் இருதயத் துடிப்புக்கு வேண்டிய அளவு ரத்தம் கிடைக்கும். பிராண வாயுவை விசேஷமாக உட்கொள்வதால் சுவாசப் பை ஒழுங்காகவும் வேகமாகவும் வேலை செய்யும். அந்தச் சமயத்தில் பல அற்புதங்களைச் சாதித்துவிடலாம்.

1808 - இல் ஜான் கூல்டர் என்பவர் அமெரிக்காவிலுள்ள மாண்டானா பிரதேசத்தில் காட்டுமிராண்டிகளிடம் சிக்கிக்கொண்டார். இப்படிச் சிக்கிய பேர்வழியைச் சற்றுத் தூரம் ஓடிப் பிடித்துக் கொல்லுவதென்றால் அவர்களுக்கு ஒரு திருப்தி. கூல்டரின் ஆடைகளைக் கழற்றிவிட்டு அவரை முன்னால் ஓடச் சொன்னார்கள். கையில் ஈட்டிகளுடன் சிவப்பிந்திய வாலிபர்கள் பலர் அவரைத் துரத்தத் தயாராகக் காத்திருந்தார்கள். சிவப்பிந்தியர்கள் வெகு வேகமாக ஓடுவார்கள் என்று சொல்வது வழக்கம். ஆனால் கூல்டருக்கு இருந்த திகிலில், முன்னால் ஓடிப் பழக்கம் இராவிட்டாலும் அவர் தலை தெறிக்க ஓட ஆரம்பித்தார். மூன்று மைல் தூரம் இப்படி ஓடினதும் திரும்பிப் பார்த்தார். ஒரே ஓர் ஆசாமியைத் தவிர மற்ற எல்லாரும் வெகுதூரம் பின் தங்கிவிட்டார்கள். அருகில் இருந்த அந்த ஆசாமியும் களைத்து ஓய்ந்துபோய்க் கீழே சாய்ந்தான். இதுதான் சமயம் என்று கூல்டர் அவன் கையிலிருந்த ஈட்டியைப் பிடுங்கிக்கொண்டு அவனை ஒரே குத்தில் தீர்த்துவிட்டார். அப்புறம் அம்மணமாகவே அந்த இடத்தை விட்டு நடையைக் கட்டினார். இவ்வளவு தூரம் ஓடியும் அவருக்குத் துளிகூடச் சோர்வே ஏற்படவில்லை. உடம்பு காற்று மாதிரி லேசாக இருந்ததாம்.

"உடற்பயிற்சி செய்யாததோ சுரப்பி(கிளாண்டு)களால் ஏற்படும் ஏதாவது கோளாருே தான் உடல் பருத்துப்போவதற்குக் காரணம் என்பது சுத்தத் தவறு. அளவுக்கு மிஞ்சிய தீனி போட்டு வயிற்றை நிரப்புவதே அதற்குக் காரணம்" என்று சமீபத்தில் பல பிரபல வைத்தியர்கள் தெரிவித்திருக்கிருர்கள்.

ஆனுல் ஒன்று: ஓரளவு உடற்பயிற்சி வேண்டியதுதான். சும்மா இருக்க இஷ்டமில்லாவிட்டால் ஏதாவது வேடிக்கை விளையாட்டுக்களில் கலந்துகொள்ளலாம். அப்போது தசை நாரும் மூட்டுக்களும் விறைப்பாக இராமல் நம் இஷ்டம் போல் அசைக்கக் கூடிய நிலையில் இருக்கும்.

ஆபரேஷன் ஆனபிறகும் நோயிலிருந்து தேர்ந்த பிறகும் லேசான உடற்பயிற்சி அவசியந்தான் என்று சென்ற பத்து வருஷமாக அநுபவத்திலிருந்து கண்டறிந்திருக்கிருர்கள். வயிறு சம்பந்தமான ஆபரேஷன் செய்தவுடனே கூட இப்படி லேசாக உடம்பை அசைத்துக் கொடுத்து மூட்டுக்களை ஆட்டி, நீண்ட மூச்சு விடும்படி நோயாளிகளுக்குச் சொல்கிருர்கள்.

பிரசவத்துக்குப் பிறகு ரணங் கண்ட அவயவங்கள் மரத்துப் போகாமல் இருக்க வைத்தியர்கள் இந்த மாதிரி சில முறைகளை அநுஷ்டித்து வருகிருர்கள். இளம் பிள்ளை வாதத்தில் உடம்பு தேர்ந்து வரும்போதும் இதே மாதிரி செய்கிருர்கள்.

ஆனுல் ஆரோக்கியம் கெடாமல் சகஜமாக இருப்போருக்கு இதெல்லாம் அநாவசியமே. நீந்துதல், உல்லாசப் பிரயாணம் இப்படி ஏதாவது செய்தால் உடம்புக்குக் கெடுதல் இல்லை. அநாவசியமான தசைக்கட்டும் உடம்பில் ஏற்படாது. உடல் அதிகக் கட்டுமஸ்தாக இருந்தால் இன்னும் சாப்பாடுதான் அதிகமாகக் கேட்கும். ஆனுல் ஏதாவது அசந்தர்ப்பம் காரணமாக உடம்பைப்பற்றி அக்கறைப்படாமல் இருந்தாலும் சரி, வயதாகி விட்டாலும் சரி, தண்டச் சதை தள்ள ஆரம்பித்துவிடும்.

"உடற்பயிற்சி செய்து பழகியவர்கள் அதை நிறுத்தினுல் சங்கடந்தான் நேரும்" என்பது உடல் தத்துவ நிபுணர்களின் கருத்து. இந்த மாதிரி சங்கடத்தில் நீங்களே போய் வலிய மாட்டிக்கொள்வீர்களோ? மாட்டீர்கள். ஆகவே, சும்மா இருந்து சுகம் பெறுவதே உத்தமம். இனிமேல், 'உடம்பு என்னவோ மாதிரி இருக்கிறதே; ஏதாவது உடற்பயிற்சி செய்யலாமா?' என்று மனம் சஞ்சலப்பட்டால், பேசாமல் ஒரு மூலையில் போய்ப் படுத்துக்கொள்ளுங்கள். கொஞ்ச நேரத்தில் எல்லாம் சரியாகிவிடும்.

சரி நிகர் சமானம்

தங்கள் தலையிலே விழுந்த பெரிய வழுக்கையைத் தொட்டுத் தடவிப் பெருமையோடு பேசிக்கொள்ளக்கூடிய துணிச்சல் எப்போது பெண்களுக்கு உண்டாகிறதோ அப்போதுதான் அவர்கள் ஆண்களுக்குச் சரி நிகர் சமானம் ஆக முடியும்.

—'காலெண்ட்ஸ்'

சிறு கதை

பாங்கி அநுபவம்

ஸ்டீபன் லீகாக்

****

ஆங்கிலம் அறிந்தவரிடமெல்லாம் கீர்த்திபெற்ற நகைச்சுவை எழுத்தாளர் இந்த ஆசிரியர். 1869 முதல் 1944 வரை வாழ்ந்தவர். கானடாவைச் சேர்ந்த மாண்ட்ரீல் நகரத்து மிக்கில் யூனிவர்ஸிடியில் பொருளாதார புரொபஸராயிருந்தார். அந்தச் சாஸ்திரத்திலும் சிறந்த நிபுணர். ஆனால், அதைவிடக் கதை, கட்டுரை எழுதுவதுதான் மகா கடினம் என்று சொல்வார். இவருடைய நகைச்சுவையும் பாணியும் அலாதியானவை.

****

பாங்கி என்றாலே, எனக்குக் கிலி உண்டாகிவிடுகிறது. குமாஸ்தாக்களைக் கண்டால் கிலி; ஜன்னல் கம்பிகளைக் கண்டால் கிலி; பணத்தைக் கண்டால் கிலி; அங்குள்ள எதைக் கண்டாலுமே கிலிதான்.

பாங்கிக்குள்ளே ஏதாவது விஷயமாக நுழைந்தவுடனே, பொறுப்பே தெரியாத முட்டாளாகிவிடுகிறேன்.

இது எனக்கு முந்தியே தெரியும். என்றாலும், என் சம்பளம் மாதம் ஒன்றுக்கு ஐம்பது டாலராக உயர்ந்தவிட்டது. அதற்கு ஏற்ற இடம் பாங்கிதான் என்று எனக்குத் தோன்றியது.

ஆகவே, பதுங்கிப் பதுங்கி ஒரு பாங்கிக்குள் ஒரு விதமாய் நுழைந்தேன். குமாஸ்தாக்களைக் கம்பீரமாக ஒரு கண்ணோட்டம் விட்டேன். பாங்கியில் கணக்கு வைத்துக்கொள்ளத் தொடங்குகிறவன் முதலில் மானேஜரைக் கலந்து ஆலோசித்தாக வேண்டும் என்று எனக்கு எப்படியோ ஓர் அபிப்பிராயம் ஏற்பட்டிருந்தது.

'அக்கவுண்டண்ட்' என்று பலகை போட்டிருந்த ஒரு ஜன்னல் பக்கம் போனேன். அந்த ஆசாமி நெட்டையாய், அமத்தலாய் இருந்தார். அவரைப் பார்த்ததுமே எனக்குப் பெருங் கிலியாய்ப் போயிற்று. சமாதிக்குள்ளிருந்து பேசும் சவத்தின் குரல் போல் இருந்தது அவர் வார்த்தை.

"நான் மானேஜரைப் பார்க்கலாமா?" என்றேன். அதோடு விட்டிருக்கப்படாதா? "தனித்து" என்று மேலும் ஒரு வார்த்தையைச் சொல்லிவிட்டேன். அதை



எதற்காகச் சொன்னேனோ, எனக்கே தெரியாது.

"ஆட்சேபமில்லாமல்" என்றார் அக்கவுண்டண்ட். மானேஜரையும் வரவழைத்தார்.

மானேஜர் முகம் 'உம்' என்றிருந்தது. அவரும் வெகு அமத்தலாகவே இருந்தார். என் ஐம்பத்தாறு டாலர் பண முடிச்சு என் சட்டை ஜேபிக்குள்ளே சுருட்டிக் கட்டியபடி கிடந்தது.

"நீங்கள் தானே மானேஜர்?" என்று கேட்டேன். அதில் ஏன் எனக்குச் சந்தேகம் வந்ததோ, ஆண்டவனே அறிவார்!

"ஆமாம்."

"உங்களை நான் பார்க்கலாமா, தனித்து?" மறுபடியும் 'தனித்து' என்ற வார்த்தையைச் சொல்லக்கூடாது என்றுதான் நான் தீர்மானித்திருந்தேன். அது என்னை மீறி வந்துவிட்டது.

மானேஜர் கலவரமடைந்தார். நான் ஏதோ ஒரு பரம ரகசியத்தைச் சொல்லப்போகிறேன் என்று எண்ணிவிட்டார்.

"இப்படி வாருங்கள்" என்று சொல்லி, ஏகாந்தமான ஓர் அறைக்குள் என்னை அழைத்துச் சென்றார். தாழ்ப்பாளில் சாவியை நுழைத்து ஒரு திருப்புத் திருப்பி உட்புறம் பூட்டினார்.

"இங்கே யாரும் வரமாட்டார்கள். உட்காருங்கள்" என்றார்.

இரண்டுபேரும் உட்கார்ந்து, ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக்கொண்டோம். நான் பேச முயன்றேன். என் குரல் எழும்பவில்லை.

"நீங்கள் பிங்கர்ட்டனின் ஆட்களில் ஒருவர்தானே?" என்று மானேஜர் ஆரம்பித்தார்.

என்னுடைய மர்மமான பேச்சையும் பாவனையையும் கவனித்த அவருக்கு நான் ஒரு துப்பறியும் நிபுணன் என்று தோன்றியிருக்கிறது. அதை நான் புரிந்துகொண்டேன். அதனால் என் அசட்டுத்தனம் அதிகரித்தது.

"இல்லை; நான் பிங்கர்ட்டனின் ஆள் அல்ல" என்றேன். வேறு யாரோ போட்டி ஏஜெண்டுகளிடமிருந்து வந்திருக்கிறேனோ என்று அவர் சந்தேகப்பட்டார்.

உடனே நான் சட்டென்று, "உண்மையைச் சொல்லப்போனால், நான் துப்பாளியே அல்ல. உங்களிடம் கணக்கு வைத்துக்கொள்ளவே வந்திருக்கிறேன். என் பணத்தையெல்லாம் உங்கள் பாங்கியில் போட எண்ணியிருக்கிறேன்" என்று விஷயத்தை விளக்கினேன்.

"அப்பாடா!" என்று மானேஜர் பெருமூச்சு விட்டார். அவர் முகம் மாத்திரம் இன்னும் 'உம்' என்றுதான் இருந்தது. நான் யாரோ ஒரு கோடீசுவரன் வீட்டுப்பிள்ளையாயிருக்கவேண்டும் என்று இப்போது அவர் ஊகித்துக்கொண்டார்.

"பெருந்தொகையோ?" என்று கேட்டார்.

"சுமாராகப் பெருந்தொகைதான். விடாமல் மாதம் ஒன்றுக்கு ஐம்பது டாலர் கொண்டுவந்து டெபாஸிட் செய்யப்போகிறேன். இந்தத் தடவை மட்டும் ஐம்பத்தாறு

டாலர் போடுகிறேன்" என்று மெல்லிய குரலில் சொன்னேன்.

மானேஜர் விறுக்கென்று எழுந்தார். கதவைத் திறந்தார். அக்கவுண்டண்டைக் கூப்பிட்டார்.

"இதோ பாரும்; இந்தக் கனவான் கணக்கு வைத்துக்கொள்ளப் போகிறார். வந்தனம்; போய்வாருங்கள்" என்று துளிகூட மட்டு மரியாதை இல்லாமல் உரத்த குரலில் கத்தினார்.

நான் எழுந்தேன்.

அறையில் ஒரு பக்கத்தில் பெரிய இரும்புக்கதவு ஒன்று திறந்திருந்தது. மிகவும் பந்தோபஸ்தான சாமான்களை வைப்பதற்காக உள்ள அந்த 'ஸேப்' அறைக்குள் பிரவேசித்தபடி, "வந்தனம்; போய்வருகிறேன்" என்றேன்.

மானேஜர் வெகு கோபமாக, "இப்படி வாரும்" என்று கர்ஜித்து, வேறொரு வாசற்படி வழியாக என்னை வெளியேற்றினார்.

அக்கவுண்டண்டின் ஜன்னல் பக்கம் மீண்டும் போனேன். ஜால வேடிக்கை செய்யும் செப்பிடு வித்தைக்காரனைப்போல் என் பண முடிச்சைச் சடக்கென்று லாகவமாய் அவருக்கெதிரே நீட்டினேன்.

என் முகம் சவம்போல் வெளுத்துப் போயிற்று.

"இதோ, இதை டெபாஸிட்டில் வையுங்கள்" என்றேன். "நம் வலிப்புத் தீருமுன்பே இந்தப் பரம வேதனையான காரியத்தைச் செய்து முடியுங்கள்" என்று கூறுவதுபோல் இருந்தது என் குரல்.

அவர் அந்தப் பணத்தை வாங்கி ஒரு குமாஸ்தாவிடம் கொடுத்தார்.

தொகையை ஒரு துண்டுக் காகிதத்தில் குறிக்கும்படியும், ஒரு புஸ்தகத்தில் என் கையெழுத்தைப் போடும்படியும் சொன்னார், அந்தக் குமாஸ்தா. அவர் சொன்னபடி செய்யும்போது எனக்கு என் ஸ்மரணையே இல்லை. பாங்கி ஏதோ ஒரு புகைப்படலம்போல் என் கண் முன்னே மிதந்துகொண்டிருந்தது.

"அதை டெபாஸிட்டில் வைத்தாயிற்றா?" என்று நடுங்கிய குரலில் கேட்டேன்.

"ஆயிற்று" என்றார் அக்கவுண்டண்ட்.

"அப்படியானால், நான் ஒரு செக் வெட்டவேண்டும்."

இப்போது கைச்செலவுக்காக, அந்த ஐம்பத்தாறு டாலரில் ஆறு டாலரைத் திரும்ப வாங்கவேண்டும் என்பது என் உத்தேசம்.

யாரோ ஒரு குமாஸ்தா ஒரு ஜன்னல் வழியாக என்னிடம் ஒரு செக்-புஸ்தகத்தைக் கொடுத்தார். இன்னொருவர் அதை எப்படி எழுதுவது என்பதை எனக்குச் சொல்லிக் கொடுத்தார். கிறுக்குப் பிடித்த எவனோ ஒரு கோடீசுவரன் என்றே பாங்கிச் சிப்பந்திகள் எல்லாரும் என்னைப்பற்றி நினைத்திருக்கவேண்டும். செக்கில் என்னவோ எழுதினேன்; ஜன்னலுக்குப் பின்னிருந்த ஒரு குமாஸ்தாவிடம் நீட்டினேன். அவர் அதைப் பார்த்தார்.

"என்னது! முழுத்தொகையையுமா திருப்பி வாங்கிக்கொள்ளப்



போகிறீர்கள்?'' என்று அதிசயத்துடன் கேட்டார்.

'ஆறு' என்பதற்குப் பதிலாக 'ஐம்பத்தாறு' என்று எழுதிவிட்டேன் என்பது அப்போதுதான் எனக்கு விளங்கியது. விஷயம் மிஞ்சிப் போய்விட்டது. எந்த விதமான சமாதானம் சொல்லியும் இனிப் பயன்படாது. குமாஸ்தாக்களெல்லாம் எழுதுவதை நிறுத்திவிட்டு, என்னையே வெறித்துப் பார்க்கத் தொடங்கினுர்கள்.

என்னுல் சகிக்க முடியவில்லை. வந்தது வரட்டும் என்று துணிந்து, "ஆமாம்; முழுத்தொகையையுந்தான்" என்றேன்.

"பாங்கியில் போட்ட டெபாஸிட்டை அப்படியே திருப்பி வாங்கிக்கொள்ளவா விரும்புகிறீர்கள்?"

"ஆமாம்; ஒரு சல்லிகூட மிச்சம் வைக்காமல்."

"இனிமேல் உங்கள் பணத்தை இங்கே டெபாஸிட் செய்யவே மாட்டீர்களோ?"

"கண்டிப்பாய் மாட்டேன்."

முட்டாள்தனமான ஒரு நம்பிக்கை எனக்குப் பிறந்தது. நான் செக்கை எழுதும்போது அவர்கள் சொன்ன வார்த்தை எதுவோ என் மனத்தைப் புண்படுத்திவிட்டதால்தான் இப்படிப் பணத்தை நான் வாபஸ் வாங்கத் தீர்மானித்தேன், மகா முன்கோபி என்று என்னை அவர்கள் மதிக்கும்படி பாசாங்கு செய்தேன்.

குமாஸ்தா பணம் கொடுக்கத் தயாரானுர்.

"எப்படி வாங்கிக்கொள்கிறீர்கள்?" என்று அவர் கேட்டார்.

"என்ன?"

"எப்படி வாங்கிக்கொள்ளுகிறீர்கள்?"

"ஓ—!" இப்போதுதான் அவர் கருத்து எனக்குப் புரிந்தது.

"ஐம்பது டாலர் நோட்டுகளாக."

ஐம்பது டாலர் நோட்டு ஒன்றை அவர் என்னிடம் கொடுத்தார்.

"ஆறு டாலரை?"

"ஆறு டாலர் நோட்டுகளாக" என்றேன்.

ஓர் ஆறு டாலர் நோட்டை என்னிடம் அவர் கொடுத்தார். அதை வாங்கிக்கொண்டு விர்ரென்று வெளியே ஓடினேன்.

பாங்கியின் பெரிய வாயிற்கதவு படீரென்று சாத்திக்கொண்டது. அதற்குப் பின்னே கலீர் என்று அவர்கள் சிரித்த சிரிப்பிலே பாங்கியின் மச்சே கலகலத்து விழும்போல் இருந்தது.

இதற்குப் பின்பு, நான் பாங்கியில் பணம் போடுவதேயில்லை. என் பணத்தை என்னிடமே வைத்துக்கொள்கிறேன்—சில்லறைக் காசுகளை ட்ரவுஸர் பாக்கட்டில் போட்டுக்கொள்ளுகிறேன்; மிச்சம் பிடித்துச் சேமித்த வெள்ளிக் காசுகளை ஒரு மேஜோட்டில் போட்டு வைக்கிறேன்.

பிரளயம்

ஆசிரியர்: ராமானந்த ஸாகர்
தமிழ்ச் சுருக்கம்: கா. ஸ்ரீ. ஸ்ரீ.

மேல்நாட்டில் சில ஆசிரியர்கள் வாழ்க்கையின் பல துறைகளில் அடிபட்டு முன்வந்ததாகச் சொல்வதுண்டு. அதுபோல இந்த நாவலாசிரியரும், கூப்பிட்ட குரலுக்கு ஏனென்று கேட்கும் ஆபீஸ் பையன் முதல் லாரி கிளீனர், டைபிஸ்ட், பத்திரிகாசிரியர், நடிகர், காங்கிரஸ் ஆபீஸ் காரியதரிசி, தேர்தல் பிரசாரகர் முதலிய பல துறைகளில் வேலை செய்திருக்கிறார். அதனால் வாழ்வில் பரந்த அநுபவம் பெற்றவர். வேலை செய்துகொண்டே பல பாஷைகளைக் கற்றவர். பிரிவினைக்கு முன்பு லாகூரில் வாழ்ந்து தாம் நேரில் கண்ட சம்பவங்களை அப்படியே விவரித்து, மனம் பதைத்து இவர் எழுதிய முதல் நாவல் இது. 1947-இல் 'மனிதன் செத்தான்' என்ற பெயருடன் இந்த நாவல் ஹிந்துஸ்தானியில் வெளிவந்தது. இப்போது இவர் சினிமாப் படங்களுக்குக் கதை எழுதுகிறார். சமீபத்தில் வெளிவந்த 'பர்ஸாத்' என்ற பிரசித்தப் படத்தின் கதை இவர் எழுதியதுதான்.

'அவுர் இன்ஸான் மர் கயா' (ஹிந்துஸ்தானிப் புத்தகம்; கிரௌன் 1×8-இல் 250 பக்கங்கள்). விலை ரூ. 4/-. உரிமை ஆசிரியருடையது.

பிரளயம்

★

அவன் வீடு திரும்பியபோது தெருவில் நடமாட்டமே இல்லை. புதிய இரும்பு வாசலுக்குப் பெரிய பித்தளைப் பூட்டுப் போட்டிருந்தது. கையில் இரும்புப்பூண் போட்ட தடியும், தலையில் எஃகுத் தொப்பியுமாக நான்கு இளைஞர்கள் தெருவைக் காத்து வந்தார்கள்.

சேட் கிசோர்லால் சில நாளாகத் தெருவில் எல்லாரோடும் பேச ஆரம்பித்தார். அதிலும் லாகூரில் கலவரம் தொடங்கியதிலிருந்து, இளைஞர்களிடம் மரியாதையாக நடந்துகொண்டார். கறுப்புச் சந்தையில் திரட்டிய மூன்று லட்சம் ரூபாய் அவரிடம் இருப்பதாக வதந்தி. கலவரத்தினால் பாங்கிகள் மூடியிருந்தது அவருக்கு அவஸ்தையாக இருந்தது.

ஆனந்தன் வருவதைக் கண்ட சேட் நகைமுகத்தோடு, "எங்கிருந்து வருகிறீர்கள், கவிராயரே?" என்று கேட்டார்.

"மால் ரோடு வரைக்கும் போயிருந்தேன்."

"அப்படியா!" என்று சேட் வியந்தார். அந்த யமபட்டணத்தில் மால் ரோடு வரைக்கும் போகிறவன் பீமசேனனாகத்தான் இருக்க வேண்டும் என்பது அவர் எண்ணம். "ஊரில் ஏதாவது புதுச் செய்தி?" என்று அவர் கேள்விக்குறியோடு பார்த்தார்.

அப்போது அங்கே வந்த ஓர் இளைஞன், "பயங்கரமான சண்டை!" என்று கூவினான்.

"எங்கே? எங்கே?" என்று பல குரல்கள் எழுந்தன.

"ரங்கமஹாலில். ஒரு சீக்கியன் 'டப்பி பஜாரி'ல் மூன்று முஸ்லிம்களைக் கொன்றுவிட்டானாம். ஐந்து பேருக்குக் காயமாம். எங்கள் தெருவழியேதான் போலீசார் பிணங்களை எடுத்துச் சென்றார்கள். பிறகு முஸ்லிம்கள் தடியும் கோடரியுமாக வந்து ரங்கமஹாலைத் தாக்கினார்கள். ஹிந்துக்கள் வெளியே வந்ததுமே, வீட்டுக்குள் முன்னமே ஒளிந்திருந்த முஸ்லிம்கள் அவர்களைத் துப்பாக்கியால் சுட்டார்கள்."

அதற்குள் காது செவிடுபடும்படியான சத்தம் கேட்டது. "பார்த்தீர்களா! த்ரீ நாட் த்ரீ ரைபிள்கள் முழங்குகின்றன" என்றான் இளைஞன்.

சேட் உரக்கத் தம் வேலைக்காரனைக் கூப்பிட்டு, "அடே ஸந்தா! மேலே இருக்கும் பாலைக் கொண்டுவந்து இங்கே எல்லாருக்கும் கொடடா! அங்கே பத்துப் பவுண்டு ஐஸ் இருக்கிறது, பார்! அதையும் கொண்டு வா. பாவம், விடிகாலை முதல் இவர்கள் ஓயாமல் காவல் காக்கிறார்கள்" என்றார்.

ஹிந்துக்களின் வீரத்தை அந்த இளைஞன் வர்ணித்தான். துப்பாக்கிச் சத்தம் சிறிது நேரத்தில் ஓய்ந்தது. சேட் எதையோ ஞாபகப்படுத்திக்கொண்டவர்போல, "அடே ஸந்தா! பாலில் ஐஸைப் போட்டுவிட்டாயா? ஒரு விஷயம் கேட்டுக்கொள். அதில் நாலு

பவுண்டு ஐஸை எனக்குத் தனியாக வைத்து விடு. குழந்தைகளுக்கென்று பாதிப் பாலாவது வை. உன் எஜமானி இன்று சாப்பிடவே யில்லே. அவளுக்குக் கொஞ்சம் பாலாவது வை" என்ருர்.

"சரி, எஜமான்!" என்று ஸந்தா மாடியிலிருந்தே குரல் கொடுத்தான்.

* * *

காரிருளில் காவல் காத்து நின்ற ஆனந்தன், எதிரே பிணம் போல் கிடந்த லாகூர் நகரைக் கண்டான். 'தன் இனத்துக்காக மனிதன் சில சமயம் கடுமையான தொழில்களேச் செய்ய வேண்டியிருக்கிறது. செய்யத்தகாதவற்றைக் கூட...' என்று அவன் நினேத்த போது எங்கோ வெடிச்சத்தம் கேட்டது. 'அல்லாஹோ அக்பர்', 'ஹர ஹர மகாதேவ' என்ற கோஷங்கள் வானத்து இருளேத் தீண்டிவிட்டுத் திரும்பின. மீண்டும் நகரில் அமைதி பரவியது. ஒவ்வொரு குரலேயும் பீதியால் நடுங்க வைத்த அமைதி அது.

சில வீடுகளில் பச்சை விளக்குகள் எரிந்தன. நகரத்தின் வெவ்வேறு பாகங்களுக்கு அவை சங்கேதமாக விளங்கின. ஏதாவது ஒரு பகுதியில் அபாயம் நேரிட்டால் பச்சை சிவப்பாக மாறும். அபாயக் குரல் நகரின் ஒரு கோடியிலிருந்து இன்னெரு கோடிக்குப் பரவும். சந்து பொந்துகளில் பெரிய கூக்குரல் எழும். தடிகளும் ஈட்டிகளும் வெளிவரும். எஃகுத் தொப்பியோடு பல இளேஞர்கள் மறைவான இடத்திலிருந்து பாய்வார்கள். குழந்தை குட்டிகள் ஓடிப்போய், தாயைக் கட்டிக்கொள்ளும். ஆண்கள் வெளியே போனதும் பெண்கள் இருளேப் பார்த்துக்கொண்டு சிந்தனேயில் மூழ்கிப் போவார்கள். எங்காவது, 'அல்லாஹோ அக்பர்' 'ஹர ஹர மகாதேவ' என்ற முழக்கம் கேட்கும். அல்லா, மகாதேவன் என்ற பெயர்களேக் கேட்டு ஜனங்கள் அஞ்சினுர்கள். முழக்கம் ஓய்ந்ததும் எங்கும் ஒரே நடுக்கம்.

* * *

ஆனந்தன் கடைத்தெருவுக்குப் போய்ப் பார்த்தபோது, ஜனங்கள் நகரை விட்டு வரிசையாகப் போய்க் கொண்டிருந்தார்கள். மக்களின் அந்தப் பெருவெள்ளம் திசை தெரியாத இடத்தை நோக்கிப் பாய்ந்தது. சந்து பொந்துகளிலிருந்து சிறு கூட்டங்கள் வந்து அதில் கலந்து கொண்டன. சில பேரிடம் ரேடியோவும் ஸோபாக்களுங்கூட இருந்தன. தீயில் வெந்த மூளிப் பெட்டிகளும், எரிந்த துணிகளும், கரிய பாத்திரங்களும் சில பேருடைய மூட்டையில் இருந்தன. பெண்களின் கூந்தல் கலேந்திருந்தது; குழந்தைகளின் முகம் அழுக்காக இருந்தது; ஆண்களின் துணி கிழிந்திருந்தது. எப்படியாவது ரெயில்வே ஸ்டேஷனுக்குப் போய் விடவேண்டும் என்பது ஒன்றே அவர்களின் லட்சியம். எந்த வண்டியாவது நம்மை நகரை விட்டுத் தொலேவில் எங்காவது கொண்டு போய்விடும் என்று அவர்கள் நம்பினுர்கள். இத்தனே நாளும் அவர்கள் வளர்ந்து வாழ்ந்த அந்த நகரம் இப்போது அவர்களுக்கு அயல் நாடாகத் தோன்றிற்று.

"இந்த வீரர்கள் ஹிந்துஸ்தானத்தை ஜயிக்கக் கிளம்பியிருக்கிருர்கள்!" என்று சிலர் பேசினுர்கள்.

"இந்தச் சேட், செங்கோட்டையில் கொடியேற்ற டில்லிக்குப்

போகிறாராம்!'' என்று ஒருவன் கிண்டல் செய்தான்.

"சகோதரர்களே, இப்படி ஓடாதீர்கள். இந்தப் பக்கம் உங்கள் வீடுகள் எரிந்துபோகும். நீங்கள் ஸ்டேஷன் போய்ச் சேருவதும் நிச்சயமில்லை'' என்று சில தொண்டர்கள் கூவினார்கள்.

நிலைமை எக்கச்சக்கமாகத்தான் இருந்தது. ஆயிரக்கணக்கான அகதிகள் குழுமியிருந்த ஸ்டேஷனில் இரண்டு வெடிகுண்டுகள் போட்டதாகச் செய்தி வந்தது. ஆனால் ஜனங்களின் காதில் இது விழவில்லை. ஏதோ ஒரு கற்பனையின் ஆதாரத்தில் அவர்கள் மிதந்து சென்றார்கள். கிண்டல் செய்த சிலரும் சிறிது நேரத்துக்கெல்லாம் அந்தப் பிரவாகத்தில் கலந்தார்கள்.

பெட்டிகளும் மூட்டைகளும் நிறைந்த ஜட்கா வண்டி ஒன்று தெருவில் போவதை அந்தக் கூட்டம் கண்டது. யாரோ ஒரு சேட் பண ஆசை காட்டி அந்த ஜட்காவைப் பிடித்திருந்தார்.

சில இளைஞர்கள் கூட்டத்திலிருந்து ஒதுங்கினார்கள். ஜட்காவின் அருகில் மின்னல் வீச்சுப் போலத் தெரிந்தது. அடுத்த கணம் ஜனங்கள் அத்தனை பேரும் சிட்டாகப் பறந்தார்கள். ஓடும்போது தங்கள் சாமான்களைக்கூட அங்கேயே விட்டுச் சென்றார்கள். ஒரு நிமிஷத்தில் தெரு முழுவதும் காலி. இரண்டோர் இளைஞர்களே அங்கே நின்றார்கள். ஒருவன் கையில் ரத்தத்தில் தோய்ந்த கத்தி இருந்தது. முஸ்லிம் ஜட்காக்காரன் ரத்த வெள்ளத்தில் வண்டியிலிருந்து அந்தரத்தில் தொங்கினான்.

"பெட்ரோல் கொண்டு வாருங்கள்!'' என்று ஒருவன் உத்தரவு போட்டான். பெட்ரோலை ஊற்றி எரித்தபோதும் அந்த ஜட்காக்காரனின் கண் சூனியத்தையே நோக்கியது. "முந்தாநாள் ஏழு ஹிந்துக்களை உயிரோடு எரித்தார்களே, சாவான்கள்; அதற்கு நம்மால் பழி வாங்க முடியாதா?'' என்று இன்னொருவன் கெக்கலித்தான்.

கொலை செய்த இளைஞன் தெருக் குழாயில் கத்தியைக் கழுவிவிட்டு உடுப்பை மாற்றிக்கொண்டான். போலீஸ் வருவதாகச் செய்தி வந்ததும், அந்த இளைஞர்கள் ஒரு பங்களாவுக்குள் நுழைந்தார்கள். உடனே இரும்பு வாசல் பலமாகப் பூட்டிக்கொண்டது.

* * *

நெருப்பின் ஜ்வாலைகள் ஆனந்தனை விழுங்க முயன்று நாலு பக்கத்திலிருந்தும் ஓங்கி வந்தன. மூச்சையடைக்கும் புகை முகில்கள் ஒவ்வோர் அடியிலும் அவனைத் தடுத்தன. ஆயினும் அவனுக்கு அப்போது எதைப்பற்றிய நினைவும் இல்லை. ஒரு கதவில் தொங்கிய பருமனான திரை அவனுக்குக் கிடைத்தது. அதனால் நெருப்பைத் தடுக்க முயன்றுகொண்டே அவன் மேல் மாடிக்குப் போய்ச் சேர்ந்தான்.

கீழே தெருவில் ஒரே அல்லோல கல்லோலம். ஆனந்தன் என்ன ஆனானோ என்ற கவலையினால் பெண்களும் கிழவர்களும் கூவினார்கள். இளைஞர்கள் தண்ணீர்க் குடங்களோடு இங்குமங்கும் ஓடினார்கள். ஆயினும் தீ அவர்களுக்கு அடங்குவதாக இல்லை.

மேலே வீசி எழும் ஜ்வாலைக்கு இடையே ஆனந்தன் உஷாவின் அறையைப் பார்த்தான். அங்கே அப்போது யாரும் இல்லை. 'அடடா!

ஒரே ஒரு தடவை உஷாவைப் பார்த்துவிட்டால் போதும்!' என்று அவன் நினைத்தான். ஒருவேளை அவள் இறங்கித் தெருவுக்குப் போயிருப்பாளோ? தெருவை எட்டிப் பார்க்கவும் அவனால் முடிய வில்லை.

பரபரவென்று அவன் மூன்றும் மாடிக்கு ஏறினான். தாராளமாக மூச்சுவிட முடிந்தது. தெருவில் ஜனங்கள் பேசுவது, எங்கோ வெகு தொலைவிலிருந்து பேசுவதுபோலக் கேட்டது. அவனைக் காக்க அவர்கள் நெருப்போடு போராடினார்கள். தான் மிகவும் உயரத்தில், கால எல்லைக்கும் நில எல்லைக்கும் அப் பால் நிற்பதாக அவனுக்குத் தோன் றிற்று. மோகினியான உஷாவை அவன் தன் இன்பக் கனவிலே கண்டுகொண்டு நின்றான். அந்தக் கடுந் தீக்குங்கூட ஆனந்தன் தப்பிப் பிழைத்துவிட்டான்.

* * *

ஆகஸ்ட் இரண்டாவது வாரம். பஞ்சாப் நிலைமை மிகவும் கேவல மாக இருந்தது. அகதிகளை வர வேற்க நிறையத் தொண்டர்கள் அன்று லாகூர் ஸ்டேஷனில் கூடி னார்கள். வேடிக்கை பார்க்கவும் பலர் வந்தார்கள்.

திடீரென்று மணி அடித்தது; சிறிது நேரத்துக்கெல்லாம் வண்டி வந்து பிளாட்பாரத்தில் நின்றது. மூச்சை அடக்கிக்கொண்டு, இன் னது செய்வதென்று தெரியாமல் எல்லாரும் நின்றார்கள். ஒரு தொண்டன், "பாகிஸ்தான்...." என்று கூவினான். உடனே மக்கள் அனைவரும், "ஜிந்தாபாத்" என்று பதிலுக்குக் கூவினார்கள்.

அரைக் கணத்தில் அத்தனை மக் களும் உயிர் பெற்றார்கள். 'அல் லாஹோ அக்பர்', 'பாகிஸ்தான் ஜிந் தாபாத்' என்ற கோஷங்களோடு அவர்கள் வண்டியை நோக்கிப் போனார்கள். ஆனால் அவர்கள் எதிர் பார்த்தபடி வண்டியிலிருந்து எவ னும் பதில் சொல்லவில்லை.

ஊக்கம் மிகுந்த இளைஞர்கள் பல மாகக் கதவைத் திறந்து வண்டிக் குள் புகுந்தார்கள்; அடுத்த கணமே பீதியோடு வெளிவந்தார்கள். கறுப் பும் நீலமுமான ரத்தத்தில் அவர் களின் செருப்புத் தோய்ந்திருப் பதை ஜனங்கள் கண்டார்கள்.

வண்டியெங்கும் ரத்தவெள்ள மாக இருந்தது. யாருக்கும் அசை யும் சக்தி இல்லை. கண்ணால் பார்க்க மட்டுந்தான் முடிந்தது. ஒரு பெட்டியின் வெளிப் பக்கத்தில், "இது ராவல்பிண்டி அக்கிரமத் துக்குப் பழி!' என்று ரத்தத்தால் எழுதியிருந்தது.

பிளாட்பாரம் முழுவதிலும் நாலைந்து தொண்டர்களே இருந் தார்கள். மீதிப் பேர் எங்கே போனார்களோ, தெரியவில்லை. அகதிகளுக்கு ஆறுதலாக ஒருவன் வண்டி அருகில் வந்து, "ஸ்டேஷ னில் எந்த ஹிந்து தலையைக் கண்டாலும் கொலை நடக்கிறது" என்று கத்தினான். அகதிகளுக்கு அதில் ஒரு சுவையும் தென்பட வில்லை. காயமடைந்தவர்களை வெளியே கொண்டுவந்து, பிணங் களை அகற்றக்கூடிய தொண்டர்கள் தான் அப்போது அவர்களுக்குத் தேவை.

அகதிகளில் பலசாலிகளாக இருந் தவர்கள், காயம் பட்டவர்களையும் பிணங்களையும் கடந்து ஏற்கனவே வெளியே வந்திருந்தார்கள். உயிர் கொஞ்சம் மிஞ்சியிருந்த ஒவ்வொரு வனும், காயத்தின் வேதனையிலுங் கூட அந்த ரத்த வெள்ளத்தில்

தவழ்ந்துகொண்டே வந்து பிளாட் பாரத்தில் உருண்டு விழுந்தான். அதற்குள் உருவிய கத்தியோடு ஒரு தொண்டன் அந்த வழியே சென் ருன். கத்தியிலிருந்து ரத்தத் துளிகள் சொட்டின. அகதிகள் உதவிக்காகக் கூவியதும், "இன் னும் கொஞ்சம் வேலை பாக்கி" என்று சொல்லிக்கொண்டே அவன் போய்விட்டான்.

* * *

ஆனந்தனுடைய தெருவையும் ஆகஸ்ட் பதினைந்தாம் தேதி எரித் தார்கள். இருட்டியதும் சுமார் நூறு முஸ்லிம்கள் தெருவுக்குள் படையெடுத்தார்கள். ஆனந்த னுடைய வீட்டையும் பெட்ரோல் ஊற்றி எரித்தார்கள்.

ஜனங்கள் புழைக்கடை வழியே வேறு தெருவில் ஓடினுர்கள். ஆனந் தன் நான்கு புறமும் யாரையோ தேடித்திரிந்தான். அழும் குழந்தை யொன்றை அவன் கையில் வைத் திருந்தான். கூட்டத்தில் அடிபட்டு இன்ன இடத்தில் வந்திருக்கிருேம் என்றே அவனுக்குத் தெரியவில்லை. அதற்குள் வெடிச்சத்தமும், "நில் லுங்கள்!" என்ற அதிகாரக் கூச் சலும் கேட்டன. ஆயுதம் தாங்கிய ஒரு பெரிய முஸ்லிம் சேனை அந்தக் கூட்டத்தை வளைத்துக்கொண் டிருப்பது தெரிந்தது.

அதே சமயத்தில் 'டோக்ரா ரெஜிமெண்டி'ன் ஒருபகுதி அங்கே வந்து கலகக்காரர்களைச் சுட்டது; ஜனங்களை அகதி முகாமுக்குக் கொண்டுபோய்விட்டது. தெருவில் வாழ்ந்த இருநூறு பேர்களில் இரு பது பேர்களே உயிரோடு அந்த முகாமுக்குப் போய்ச் சேர்ந்ததாக ஆனந்தனுக்குத் தகவல் எட்டியது. அவர்களில் மூன்று பெண்களும் ஒரு குழந்தையும் இருந்தார்கள். ஆனந்தன் கொண்டுவந்த குழந்தை யும் அவற்றுள் ஒன்று.

* * *

சேட்டின் பிரம்மாண்டமான கட்டிடம் எரிந்துபோய், வெறும் மண்குவியலாகக் கிடந்தது. அந்த இடத்தில் ஆனந்தன் யாரையோ தேடினுன். வெளியே விக்கி விக்கி அழும் சத்தம் கேட்கவே, அவன் அங்கே வந்து பார்த்தான்.

நீண்ட வெள்ளைத் தாடியுள்ள ஒருவர் ஆகாயத்தை நோக்கி ஏதோ பேசிக்கொண் டிருந்தார். அவருடைய கண்ணிலிருந்து வடிந்த முத்துத்துளிகள் அந்தத் தாடிக் குள் மறைந்தன.

"உங்கள் உறவினர் யாராவது போய்விட்டார்களா, தாத்தா?" என்று ஆனந்தன் கேட்டான்.

கிழவருடைய கண்கள் மெது வாகத் திறந்தன. "அல்லாவைத் தவிர மீதி எல்லாரும் செத்துப் போய்விட்டார்கள் என்று தோன்று கிறது. நான் செத்துப் போனவர் களுக்காக அழவில்லை. ஹிந்துக் களை இப்படிக் கொன்று இஸ்லாம் தர்மத்தை ஆபத்துக்கு உள்ளாக் கினுர்களே, அவர்களுக்காக அழு கிறேன். இந்தத் தீயில் இஸ்லா மிய மதத்தின் ஆத்மா எரிவதை நான் காண்கிறேன்..."

கிழவர் பேசி முடிப்பதற்குள் சற்றுத் தொலைவில் ஒரு கும்பல் வரும் சத்தம் கேட்டது.

"நீ ஹிந்துவா?" என்று கிழவர் ஆனந்தனின் தோளை அசைத்துக் கொண்டே கேட்டார்.

"ஆமாம்."

"அப்படியானுல் உடனே இந்த வீட்டுக்குள் போய்ப் பதுங்கிக் கொள்."

"இந்த வீட்டுக்குள் நான் காண வேண்டிய மிச்சம் ஏதுமில்லை. என் உயிருக்கு மதிப்பு இருக்கலாம். ஆனால் அதை நான் இப்போது சாவுக்கு விற்க முடியும்."

கிழவர் ஆனந்தனைப் பலமாக இழுத்துப் போய் ஒரு மறைவில் பதுக்கிவைத்தார். அவர் திரும்பிப் போகும்போது சட்டையிலிருந்து பளபளக்கும் கத்தியொன்றை வெளியே எடுப்பதை ஆனந்தன் பார்த்தான்.

சிறிது நேரத்துக்கெல்லாம் சுமார் இருபத்தைந்து இளைஞர்கள் அங்கே வந்து சேர்ந்தார்கள். அவர்களில் ஒருவன், "என்ன, மௌலானா! எல்லாம் ஒழுங்காக எரிந்துவிட்டது அல்லவா?" என்று கேட்டான்.

கிழவன் உறுதியாக, "திகுதிகுவென்று எரிந்து எல்லாம் சாம்பலாகப் போயிற்று!" என்றார்.

"எவனாவது காபிர் இங்கே ஒளிந்திருக்கிறானா என்று பார்த்தீர்களா?"

"அதைத்தான் நானும் பார்க்கிறேன். ஆனால், அல்லா! என் கத்தி இன்னமும் வெளுப்பாகவே இருக்கிறதே."

"கிழ மௌலானா - ஜிந்தாபாத்" என்று கூவிக்கொண்டே அவர்கள் புறப்பட்டபோது, "ஒருவேளை எவனாவது காபிர் இருந்தாலுங்கூட இந்த நெருப்பில் என்னால் போக முடியாது. ஆகையால் ஓர் ஈட்டி கொடுங்கள்" என்று கிழவர் கேட்டார்.

உடனே இரண்டு மூன்று இளைஞர்கள் தங்கள் ஈட்டிகளை நீட்டினார்கள். மிகவும் கூர்மையான ஓர் ஈட்டியைக் கிழவர் எடுத்துக்கொண்டதும், அவர்கள் போய்விட்டார்கள்.

ஆனந்தன் வெளியே வந்தபோது, மௌலானா அந்த ஈட்டியை ஒடித்து நெருப்பில் வீசி எறிவதைக் கண்டான். பின்பு அந்தக் கிழவர் கண்ணீர் ததும்ப, ஆகாயத்தை நோக்கி, "அல்லா, நீ அருள் வைத்தால், பாவத்தை விளைக்கும் இந்த ஆயுதங்கள் ஒரே கணத்தில் ஒழிந்துவிடுமே! நீ ஏன், அண்ணலே, சும்மா இருக்கிறாய்?" என்றார்.

ஆனந்தனைக் கண்டதும் அவர் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு, ஏதும் பேசாமல் எதிரே மசூதிக்குள் அழைத்துச் சென்றார். அவனை ஒரு மறைவில் உட்காரவைத்து, தாம் உள்ளே போய் ஒரு மூட்டையை எடுத்து வந்து, "இந்தாப்பா, இந்தப் பெஷாவர் பைஜாமாவைச் சட்டென்று அணிந்துகொள். எவனாவது நமாஜ் படிக்க வந்துவிடுவான்" என்றார்.

ஆனந்தன் பேசாமல் பைஜாமாவை அணிந்துகொண்டதும், மௌலானா அவனை எரிந்து இடிந்துகொண்டிருந்த வீடுகளுக்கிடையே அழைத்துச் சென்றார்.

குகையைப் போலத் தென்பட்ட ஒரு பாழும் வீட்டின் வாசலைத் திறந்துகொண்டு உள்ளே சென்றார். அங்கே ஒரு கம்பத்தில் உஷா கட்டுண்டிருப்பதை ஆனந்தன் கண்டான்! தலையில் ஒரு பெரிய மலை இடிந்து விழுந்தாற்போல இருந்தது அவனுக்கு.

"இந்த மூன்று பெண்களையும் உடனே விடுதலை செய்! ஜல்தி!" என்றார் மௌலானா. அப்பொழுதுதான் இன்னும் இரண்டு பெண்கள் இரண்டு கம்பங்களில் கட்டுண்டிருப்பதை ஆனந்தன் கவனித்தான்.

அவன் உஷாவினிடம் ஓடிச் சென்று, கையாலும் பற்களாலும் தன்னால் முடிந்த விதத்திலெல்

லாம், அவனைச் சுற்றியிருந்த கயிற்றை அறுக்க முயன்றான். அவனுடைய கைகளை அதில் கட்டுண்டனவே தவிர, அவனால் எதும் முடியவில்லை. அந்தக் கம்பத்தையே பெயர்த்துவிட அவன் முயன்றான். அவன் கம்பத்தை ஓங்கி இடித்தும் அது சிறிதும் அசையவில்லை. உஷாவும் மற்ற இரு பெண்களும், கத்திக் குத்தினால் வண்டியில் தொங்கிய ஜட்காக்காரனைப்போல, அவனை அசையாமல் பார்த்துக்கொண்டிருந்தார்கள். ஆனந்தனுக்கு அழுகை வந்துவிட்டது. மௌலானா முன்வந்து தம் கத்தியினால் அந்தக் கட்டுகளை அறுத்தெறிந்த பின்பும் அவன் அழுதுகொண்டே இருந்தான்.

தாம் விடுபட்ட பின்பும் இன்னது செய்யவேண்டுமென்று அந்தப் பெண்களுக்குத் தெரியவில்லை. அழும் ஆனந்தனைப் பார்த்துக்கொண்டு அவர்கள் பேசாது நின்றார்கள். மௌலானாவின் பச்சைத் தலைப்பாகையைக் கண்டதும் அவர்கள் என்ன நினைத்தார்களோ, ஒரேயடியாக வாசலை நோக்கி ஓடினார்கள். "நில்லுங்கள்!" என்று மௌலானா கூவியதும் அவர்கள் முன்போலவே அசையாமல் நின்றுவிட்டார்கள். ஆனந்தன் இதற்குள் எழுந்து அவரருகில் வந்து நின்றான்.

"இதென்ன முட்டாள்தனம்! நிரபராதிகளான இந்தப் பெண்களுக்கு உதவி செய்வது போக, நீ ஒரு பெண்ணைப்போல அழுகிறாயே. இதற்காகவா உன்னை இங்கு அழைத்து வந்தேன்?" என்று கிழவர் சொன்னதுந்தான் அவனுக்குத் தன் நினைவு வந்தது. "என்னை மன்னியுங்கள். நான் எந்த நிலையில் இருக்கிறேன் என்பது.." என்றான்.

மௌலானா அவர்கள் எல்லாரையும் நகரத்துக்கு வெளியே பத்திரமாக அழைத்து வந்து, "போய் வாருங்கள். ஆண்டவன் உங்களைக் காப்பாற்றுவான்" என்றார்.

"அதில் எனக்கு நம்பிக்கை இல்லை" என்று ஆனந்தன் உடனே பதில் சொன்னான்.

"எதில்?" என்று மௌலானா ஆச்சரியத்தோடு கேட்டார்.

"உங்கள் பெருமையை நீங்கள் ஆண்டவன்மேல் ஏற்றிப் பேசுகிறீர்கள். ஆண்டவன் எல்லாரையும் காப்பாற்றுவதாக இருந்தால், வானத்தை எட்டும் இந்தத் தீயும், தரையில் வெள்ளமாக ஓடும் இந்த ரத்தமும் இருக்குமா? ஆண்டவன் இதைத்தான் செய்ய முடியும். நீங்கள் செய்த மகத்தான காரியத்தை அவன் செய்ய முடியாது. மனிதன் தான் அதைச் செய்ய முடியும். ஆகையினால்தான்.."

"அப்படிச் சொல்வது பாவம், அப்பா!"

ஆனந்தன் நகைத்துக்கொண்டே, "பாவத்தைக் கண்டு நீங்கள் அஞ்சுகிறவராக இருந்தால், நமாஜ் படிக்கும் வேளையில் இப்படி எங்களுக்காக ஓடி வந்திருக்கமாட்டீர்கள். உங்கள் மதத்தில்...?" என்றான்.

"என் மதம் உனக்கு விளங்காது, தம்பி. வெறும் நமாஜ் படிப்பது மதம் அல்ல. ஆண்டவன் நம்மை மாந்தருக்குத் தொண்டு செய்யவும், இந்த உலகில் அழகையும் மகிழ்ச்சியையும் அன்பையும் நிரப்பவுமே அனுப்பியிருக்கிறான். இதுதான் உண்மையான மதம்" என்று கூறி, மௌலானா ஒரு சிறு பொட்டலத்தை எடுத்தார். அதை அவனிடம் கொடுத்து, "இடிந்து

விழுந்த ஒரு கோயிலிலிருந்து இதை நான் பத்திரமாக எடுத்து வந்திருக்கிறேன்'' என்று சொல்லி அவர் அவசர அவசரமாக நகரை நோக்கித் திரும்பிவிட்டார்.

ஆனந்தன் வழியில் அந்தப் பொட்டலத்தை அவிழ்த்துப் பார்த்தான். கிருஷ்ணனுடைய ஒரு சிறு கல் விக்கிரகம் அது. எரியும் கோயிலிலிருந்து அந்த மூர்த்தியைக் கொண்டுவந்து, அந்த மூர்த்தியைவிட உன்னதமான இடத்தைப் பெற்ற அந்தக் கிழவருக்கு அவன் தலை வணங்கினன். விக்கிரகத்தை உடைப்பதும் விக்கிரகத்தை வழிபடுவதுமாகிய இரண்டு சமயங்களைவிடப் பெரிதும் உயர்ந்தது அவருடைய சமயம்.

*   *   *

அகதிகள் முகாமுக்குப் போய்ச் சேரும் வரையில் ஆனந்தன் உஷாவோடு ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை. புதல்வியைக் கண்டதும் சேட் ஓடிவந்து அவளை அன்போடு அணைத்துக்கொண்டார். ஆனந்தனை அவர் பார்த்த பார்வையில் துளியும் நன்றி தென்படவில்லை. அவன் வேலிக்கு வெளியே சிறிது நேரம் நின்றுவிட்டு ஒரு பெருமூச்சோடு திரும்பினன்.

இரண்டு மூன்று நாள்வரைக்கும் அவன் மனம் குழம்பிக் கிடந்தது. கடைசியில் மிகவும் துணிச்சலோடு உஷாவுக்கு ஒரு கடிதம் எழுதி ஒரு பையனிடம் கொடுத்து அனுப்பினன். அவனுக்கு ஒன்றுமே ஓடவில்லை. 'சேட் அந்தக் கடிதத்தைப் பார்த்துவிட்டால் என்ன ஆகுமோ? உஷா தன்னை அவமானப்படுத்தியதாக எண்ணிக்கொள்வாளோ?' என்று பல கேள்விகள் அவன் உள்ளத்தில் எழுந்தன.

அவன் மிகவும் அலுத்துப்போய் வெளியே வந்து, மெதுவாக முகாமை நோக்கி நடந்தான். வழியில் சிறிது தூரத்தில் அந்தப் பையன் தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டு திரும்பி வருவதை அவன் பார்த்தான். எதிரில் ஆள் வருவதே பையனுக்குத் தெரியவில்லை.

ஆனந்தன் அவனை நிறுத்தி, ''என்னடா செய்தி?'' என்று கேட்டான்.

அவன் பேசாமல் நின்றான்.

ஆனந்தன் அவன் தோளை அசைத்து, ''என்னடா, என்ன நடந்தது?'' என்றான்.

கடைசியில் அந்தப் பையன் வாயைத் திறந்தான். அவன் குரல் பனிக்கட்டியைப் போல உறைந்திருந்தது.

''உஷா அக்கா செத்துப் போனள்!''

''செத்துப்போனளா? எப்படி?''- ஆனந்தன் தன்னையே கேட்டுக் கொள்வதுபோல இருந்தது.

''அவள் நேற்றிரவு விஷம் குடித்துவிட்டாள்'' என்று பையன் சுருக்கமாகச் சொன்னன்.

*   *   *

வெளியே பெரிய கலவரத்தைக் கேட்டு ஆனந்தன் விழித்துக் கொண்டான். அவன் எழுந்து வராந்தாவுக்கு வந்தபோது, முகாமிலுள்ள அகதிகள் யாவரும் சூழ்ந்துகொண்டிருப்பதையும், எவனே ஒருவனை அடித்து உதைப்பதையும் கண்டான். அங்கே நின்ற ஓர் இளம் பெண்மணி, ''அவரை அடிக்காதீர்கள்; அவர் மிகவும் நல்லவர்'' என்று கூவியும், யாரும் அவள் பேச்சைச் சட்டை செய்யவில்லை.

ஆனந்தன் அங்கே போய் ஜனங்களை விலக்க முயன்றுகொண்டே, "யாரது?" என்று கேட்டான்.

"எவனோ ஒரு முஸ்லிம் கிழவன்; ஒரு ஹிந்துப் பெண்ணை இழுத்துக்கொண்டு போகிறான்!" என்று ஒருவன் சொன்னான்.

இன்னொருவன், "பாகிஸ்தான் இவன் அப்பன் வீட்டுச் சொத்துப் போல இருக்கிறது!" என்றான்.

ஆனந்தன் அருகில் சென்று பார்த்தான். அங்கே கிடந்த முஸ்லிம் கிழவரை, அரைப் பட்டினியான முகாம்காரர்கள் ஒன்றும் செய்துவிட முடியவில்லை. அவருடைய முகத்தில் சிறிதும் கசப்போ வெறுப்போ தோன்றவில்லை. அவர் அமைதியாக ஆனந்தனைப் பார்த்து முறுவல் பூத்தார்.

ஆனந்தன் அந்தக் கிழவரைக் கண்டதுமே கீழே குனிந்து தழுவிக்கொண்டு, "மௌலானா, எங்களை மன்னிக்க வேண்டும்!" என்றான்.

கிழவர் அவனைச் சும்மா இருக்கும்படி சமிக்ஞை செய்தார். அதற்குள் அந்தப் பெண் அருகில் வந்து, "தம்பி, இவர் என்னை முஸ்லிம்களிடமிருந்து காப்பாற்றிய தெய்வம். இவரை வீணுக்கு அடிக்கிறார்கள்" என்றாள்.

"இந்தத் தெய்வ மனிதரை எனக்குத் தெரியும், அம்மா!" என்று சொல்லிக்கொண்டே ஆனந்தன் அந்தக் கிழவரை மெல்லத் தூக்கினான். மற்றும் சிலரும் அந்தப் பெண்ணும் கைகொடுத்தார்கள். கிழவரை அறைக்குள் கொண்டு விட்டு, குடிக்கத் தேநீர் கொடுத்தார்கள். ஆனந்தன் மிகவும் வெட்கத்தோடு அவரிடம் மன்னிப்பு வேண்டினான்.

"இது ஒன்றும் எதிர்பாராத சம்பவமல்ல. இப்படிச் செய்ய இவர்களுக்கு உரிமை உண்டு. முஸ்லிம்கள் இவர்களுக்குச் செய்த அநியாயத்துக்கு இது ஆயிரத்தில் ஒரு பங்கு ஆகாது.." என்று மௌலானா கூறுவதற்குள், கிழிந்த துணியும், எலும்பும் தோலுமான ஒரு சீக்கியன் அங்கே வந்து, "அந்தக் கிழம் இன்னும் உயிரோடு இருக்கிறதாமே!" என்று கத்தினான்.

"இதோ இருக்கிறேனப்பா!" என்று சொல்லிக்கொண்டே மௌலானா அந்தச் சீக்கியனைப் பார்த்தார்.

அவன் கிழவர்மேல் ஆவேசத்தோடு பாய்ந்தான். அதற்குள் ஆனந்தன் அவனைப் பிடித்துக்கொண்டு, "இது என்னப்பா செய்கிறாய்?" என்றான்.

சுற்றும் இருந்தவர்கள் அந்தச் சீக்கியனை அப்புறப்படுத்தினார்கள். அவன் வேடிக்கையாக நகைத்து, "நான் தப்பினேன்; நான் தப்பினேன்!" என்று கூச்சல் போட்டான்.

எல்லாருமாக அவனை வெகு தொலைவில் கொண்டுபோய் விட்டு வந்தார்கள். அவனுடைய சரித்திரத்தைப் பலர் விமரிசனம் செய்தார்கள். அவன் ராவல்பிண்டியில் இருந்தவன். அவனுடைய கிராமத்தை முஸ்லிம் காலிகள் தாக்கினார்கள். அவன் தன் குல வழக்கப்படி மனைவியையும் குழந்தையையும் பிறர் கை படுமுன், குருதேவரின் பெயரால் வெட்டி வீழ்த்தினான். பகைவரில் சிலரைக் கொன்று தீர்த்து அவன் தப்பித்துக்கொண்டான். அன்று முதல் அவனுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது.

லாகூரை விட்டுக் கிளம்பிய பெருங்கும்பலோடு ஆனந்தனும் நூற்றுக்கணக்கான மைல்கள் நடந்தான். சோறும் தண்ணீரும் இல்லாமல் பலர் நடுவழியில் இறந்தார்கள். வழியில் எதிரிகள் தாக்கிய போது, அவர்கள் தாம் கொண்டு வந்த பொருள்களை அங்கங்கே போட்டுவிட்டு உயிருக்குப் பயந்து பறந்து ஓடினார்கள். அகதிகளின் அந்தக் கஷ்டங்களை நேரில் கண்ட ஆனந்தனுக்குப் பைத்தியம் பிடித்தாற்போல ஆகிவிட்டது. லட்சம் லட்சமான மக்கள் சிறிதும் மனிதத் தன்மை இல்லாமல் ஆலாகப் பறந்த அந்தக் காட்சி அவனுக்குப் பார்த்துப் பார்த்துப் பழக்கமாகி விட்டது.

பல நாள் பட்டினி கிடந்து வழியில் பிணம்போல் விழுந்து கிடந்த ஒரு பெண்மணியையும் அவள் குழந்தையையும் அவன் வழியில் கண்டான். கழுகுகளும் நாய்களும் அவர்களைச் சூழ்ந்து வட்டமிட்டு நடமாடின. அந்தப் பெண்ணுக்கும் குழந்தைக்கும் உணவு தந்து, அவன் அவர்களைக் காப்பாற்றினான். அந்தப் பெண்ணின் பெயர் நிர்மலா. நடுவழியில் அவளுடைய குழந்தை காலனுக்கு இரையாயிற்று.

ஆனந்தன் ஒரு தடவை நோய் வாய்ப்பட்டான்; அந்தப் பெண் அவனுக்குப் பணிவிடை செய்தாள். பல மைல் தூரம் அவர்கள் ஓயாமல் நடந்துபோனார்கள். எங்கே செல்ல வேண்டும், என்ன செய்யவேண்டும் என்பது தெரியாமல் அவர்கள் நடந்துகொண்டே இருந்தார்கள்.

* * *

சூலேமான் வாராவதியின் இக்கோடியில் கடைசிப் பாகிஸ்தான் சிப்பாய் முன்னும் பின்னுமாக நடைபோட்டுக்கொண்டிருந்தான். அக்கோடியில் இந்தியச் சைனியம் அணிவகுத்து நின்றது. அவர்களின் மத்தியில் அந்த வாராவதி ஒய்யாரமாகப் பரந்து கிடந்தது. அதன் கீழே ஓடிய ஆற்றின் அலைகள் வேடிக்கையாகக் குதித்து விளையாடின.

அந்த அலைகளைப் போலவே தானும் உல்லாசமாக இருக்க வேண்டுமென்று நிர்மலாவுக்குத் தோன்றிற்று. போராட்டத்தில் ஈடுபட்டிருந்த ஆனந்தனை, இருளும் ஏமாற்றமும் நிரம்பிய ஓர் இடத்திலிருந்து அவள் அழைத்து வந்திருந்தாள். அவனிடம் மிகவும் சோர்வு தென்பட்டது. ஆனால் தோல்வியை ஒப்புக்கொண்டு ஆயுதங்களைக் கீழே வைக்கும் அடையாளம் மட்டும் அவன் முகத்தில் தென்படவில்லை. போராட்டத்தின் இடையிலேயே அவள் அவனை ஒளியும் நம்பிக்கையும் நிரம்பிய அழகிய சோலைக்கு அழைத்துச் சென்றாள். இன்னும் சிறிது தூரந்தான்; அதற்குப் பிறகு—

"ஆனந்தா, ஆனந்தா!" என்று பின்னாலிருந்து யாரோ கூப்பிட்டார்கள். ஏமாற்றமே அவனைக் கூப்பிடுவதுபோல இருந்தது.

அவன் திரும்பிப் பார்க்கக்கூடாது என்று அவள் நினைத்தாள். துன்பத்தின் மிதமிஞ்சிய பாரத்தினால் அவன் முதுகு வளைந்து போயிருந்தது. ஒரு சிறு துரும்பை வைத்தால்கூட இனி அது ஒடிந்துவிடும். ஆகையால் அவள் ஆனந்தனின் கையை அழுத்திப் பிடித்துக்கொண்டு தரதரவென்று முன்னால் சென்றாள்.

"ஆனந்தா!" - அந்தக் குரல் பரிதாபமாக இருந்தது. ஆனந்தன்

அதைக் கேட்டுத் திரும்பிப் பார்த்தான்.

மௌலானா வாராவதியின் அக்கோடியில் நின்று அவனைக் கூப்பிட்டார். பாகிஸ்தானிச் சிப்பாய் அவரை மேலே போகவொட்டாமல் தடுத்ததனால் அவர் அங்கிருந்தே கூக்குரலிட்டார்.

அவரைக் கண்டதும் நிர்மலாவுக்கு அமைதி உண்டாயிற்று. அவள் நெஞ்சில் இருந்த பயம் நீங்கியது. ஒருவித விடுதலை எண்ணமும் பிறந்தது. சோர்ந்துபோன இந்த மனிதனுக்கு அவர் புதிய திறமையும் ஊக்கமும் தருவார் என்று அவள் நினைத்தாள்.

ஆனந்தன் வெறித்த பார்வையோடு அவரைச் சும்மா பார்த்துக்கொண்டு நின்றான். அவரிடம் போகவில்லை. அவனுடைய தயக்கத்துக்குக் காரணத்தை அறியாத நிர்மலா, "உங்களை மௌலானா கூப்பிடுகிறார்" என்றாள்.

"அதுதான் தெரிகிறதே. அந்தக் குழந்தையின் பிணத்தை அவர் திரும்பிக் கொண்டு வந்திருப்பார். அவர் என்னை எதையும் மறக்கவிடுவதில்லை. அவர் அதை என் மறுபடியும் கொண்டுவரவேண்டும்?" அவன் பேசியது அவனுடைய குரலாகவே தோன்றவில்லை.

"இல்லை, இது உயிருள்ள குழந்தை!" என்றாள் நிர்மலா.

அதற்குள் அந்தச் சிப்பாயிடமிருந்து தப்பித்துக்கொண்டு மௌலானா ஆனந்தனிடம் ஓடி வந்தார். உடனே அந்தச் சிப்பாய் அவர்களை நோக்கித் துப்பாக்கியைக் குறி வைத்தான். அவன் குறி மௌலானாவின்மேல் இருந்ததா அல்லது ஆனந்தனின்மேல் இருந்ததா என்று தெரியவில்லை.

இதைக் கண்டு மறு பக்கத்தில் இருந்த இந்தியச் சிப்பாயும் துப்பாக்கியைக் குறிவைத்தான்.

மௌலானா அந்தக் குழந்தையை ஆனந்தனிடம் நீட்டி, "நீ இந்தக் கடைசி நிமிஷத்தில் சந்தித்தது ஆண்டவனுடைய அருள்தான். இனி இந்தக் குழந்தையைப்பற்றி நான் கவலையற்று இருப்பேன்" என்றார்.

"இது யார்?" என்று ஆனந்தன் சிறிதும் உணர்ச்சியின்றிக் கேட்டான்.

"இவனா! இவனை உனக்குத் தெரியவில்லையா? இந்தச் சிறு மனிதனை, அடுத்த தலைமுறையை நீ கண்டுகொள்ளவில்லையா? இவன் நாளை மனிதன்!"

"இன்றை மனிதனை நீங்கள் வதைத்ததுபோதாதா, மௌலானா? நீங்கள் ஏன் இவ்வளவு கொடியவராகிவிட்டீர்கள்? இன்றைத் தலைமுறையைக் கொன்றபின்பு நாளைத் தலைமுறையையும் ஏன் இம்சிக்கிறீர்கள்? இவனை நீங்கள் கொன்றுவிடுவதற்கென்ன?"

"இவனைக் கொல்வதா! நானா!" என்று கூறிக்கொண்டே மௌலானா அந்தக் குழந்தையின் மென்மையான தேகத்தைத் தடவிக்கொடுத்தார்.

"அது சரிதான்! நீங்கள் இவனைச் சுகமாகச் சாகவைப்பது ஏது?" என்று கிண்டலாக ஆரம்பித்த ஆனந்தன் நகைத்துக்கொண்டே, "இவன் பட்டினியும் தாகமும் தாங்காமல் துடிதுடித்துச் சாகவேண்டும் என்றுதானே நீங்கள் விரும்புகிறீர்கள்? இவன் தன் தாயைச் சந்திக்கும்போது அவள் முலை அறுபட்டிருக்கும். மௌலானா, உங்களை நான் இப்போது நன்றாகத் தெரிந்துகொண்டேன். உஷாவை

என்னோடு அனுப்பி, நீங்கள் அவனை விஷ முண்ணச் செய்தீர்கள். தாயின் முலையை வெட்டி எரிந்து விட்டு, குழந்தைகளைக் கொடுத்துச் செல்கிறீர்கள். உங்கள் எல்லாரையும் எனக்கு வெகு நன்றாகத் தெரியும். இந்தத் தெய்வக் குஞ்சுகளை, இந்த ஹிந்துக்களை, இந்த முஸ்லிம்களை நீங்கள் உயிரோடு விட்டுவைப்பதன் நோக்கம், அவர்கள் அகதி முகாமில் பசியால் தவித்து அழுகிச் சாகவேண்டும், வெள்ளத்தில் அடிபட்டு மூழ்கிச் சாகவேண்டும் என்பதுதான். அமைதியான சாவை அவர்களுக்குக் கொடுக்க விரும்புகிறவர்களை நீங்கள் அப்படிச் செய்ய விடுவதில்லை. மனிதர்களான உங்களையெல்லாம் எனக்குத் தெரியும். பாவமற்ற இந்த ஜீவனை உங்கள் கொடுமையிலிருந்து விடுவித்து நான் காக்கப்போகிறேன்'' என்று சொல்லி, ஆனந்தன் அந்தக் குழந்தையை மௌலானுவின் கையிலிருந்து பறித்து, ஒரு பந்துபோல வீசி, வாராவதிக்குக் கீழே ஓடும் ஆற்றில் எறிந்துவிட்டான்.

கேள்விக்குறியோடு அலைகள் ஒரு கணம் விலகின; மறுகணம் ஒன்றை ஒன்று அணைந்துகொண்டு முன்போலவே இன்னிசைப் பாடலில் ஆழ்ந்தன.

மௌலானுவின் கண்ணில் துளியும் நீர் அரும்பவில்லை. "அடடா! ஏன் இப்படி அந்தக் குழந்தையைக் கொலை செய்கிறாய்?'' என்று அவர் வாய் லேசாக முணுமுணுத்தது.

"அவன் தற்கொலை செய்துகொண்டிருக்கவேண்டும். அப்படிச் செய்யாததால் நான் அவனைக் கொன்றுவிடுகிறேன், கொன்றுவிடுவேன்'' என்று கத்திக் கொண்டே ஆனந்தன் மௌலானுவின் மென்னியை இறுகப் பிடித்தான். "நான் கொன்றுவிடுவேன், கொன்றுவிடுவேன்...'' ஆனந்தனின் பேய்ச் சிரிப்பு அலைகளின் சத்தத்தை அடக்கிவிட்டது.

எங்கும் ஒரே கூச்சலும் கலவரமும் கிளம்பின.

"முஸ்லிமைக் கொன்றுவிட்டான்!''

"இல்லை, இல்லை; முஸ்லிம்தான் கொன்றவன்!''

எவன் எவனைக் கொன்றான் என்று யாருக்குமே தெரியவில்லை. ஒரு பேய்ச்சிரிப்பும், அந்தச் சிரிப்போடு கலந்துகொண்டு ஒரு சீக்கியன் மௌலானுவின் மார்பில் ஈட்டியைச் செருகி, "நான் தப்பித்துக்கொண்டேன்'' என்று கூவும் சத்தமும் ஒலித்தன.

"கொன்றுவிட்டான்! கொலை! கொலை!'' ஜனங்களின் அந்தக் கூச்சலுக்கு நடுவே பாகிஸ்தானிச் சிப்பாய் துப்பாக்கியைச் சுட்டான்.

அதற்குப் பதிலாக இந்தியச் சிப்பாயும் 'டும் டுமீல்' என்று வெடித்தான்.

"டம், டும், டமீல்! செத்தேன்! கொலை! தப்பித்தேன்! ஆ! ஐயோ!'' இப்படிப் பல சத்தங்கள்.

வாராவதியின் இருபுறமும், "ஹிந்துஸ்தான் ஜிந்தாபாத்! பாகிஸ்தான் ஜிந்தாபாத்!'' என்ற கோஷங்கள் கிளம்பின.

இந்த ஒலி வெள்ளத்தில் உணர்வை இழந்த நிர்மலா மடக்கென்று உட்கார்ந்துவிட்டாள். 'இனி ஏமாற்றந்தானா?' என்ற கேள்வி அவள் உள்ளத்தில் எழுந்தது.

"மனிதன் தற்கொலை செய்துகொள்கிறான். அவனை நான் கொல்வேன், கொன்றேன், தப்பித்துக் கொண்டேன்! ஆஹா! ஹிந்து

ஸ்தான் ஜிந்தாபாத்! பாகிஸ்தான்...''

இந்தச் சத்தத்துக்கு மேலாக இன்னொரு குரல் அவள் காதில் விழுந்தது: ''மனிதன் செத்தான்! மனிதத்தன்மை செத்தது!''

பிறகு எல்லாக் குரல்களும் ஒரே பிரளய கோஷமாக மாறிவிட்டன.

''ஹிந்துஸ்தான் வாழ்க! பாகிஸ்தான் வாழ்க! மனிதன் மாய்க!..'

க்விஸ் விடை

(1) நிரட்ச ரேகையைக் கடக்கும்போது, 'நெப்ட்யூன் கோர்ட்' என்று ஒரு தமாஷ் நாடகம் நடத்துவது பிரிட்டிஷ் ராயல் கடற்படையின் சம்பிரதாயம். அதை மாற்றி 'வருணனின் தர்பார்' என்று சுதந்தர இந்தியக் கடற்படையினர் இப்போது நடத்துகிறார்கள். சமீபத்தில் நம் கடற்படையினர் கிழக்காப்பிரிக்காவுக்குச் சென்றபோது, இந்த நாடகம் நடந்தது.

(2) ஆறு கோடி கோடி கோடி டன். அதாவது முதலில் 6 போட்டு, பிறகு 21 பூஜ்யங்கள் போட்டுவிடுங்கள்; அவ்வளவு டன். முதலில் இதைக் கணித்துச் சொன்னவர் ஹென்ரி காவண்டிஷ் (1731-1810).

(3) ஓரிடத்துக்கும் போகவில்லை. இரண்டு புறமும் சுவர் போல் நிற்கும் மலைப்பகுதிகளைத்தான் சார்கிறது.

(4) நாகரிகம் எப்படியானாலும் ஆகட்டும். அவர் சொன்ன உதாரணம் தவறு. மனிதனைத் தவிர, எத்தனையோ பூச்சி, குருவி, விலங்குகளெல்லாம் குச்சி முதலிய ஆயுதங்களைப் பிரயோகிக்கின்றன.

(5) கனிப் பொருள். நிலக்கரி, காற்று, நீர் மூன்றையும் ரசாயன முறையில் 'சமைத்து' இதைத் தயாரிக்கிறார்கள்

(6) திதி, வாரம், நட்சத்திரம், யோகம், கரணம் என்ற ஐந்து அங்கங்களும் அதில் அடங்கியிருப்பதால்.

(7) கரியேறிய பாத்திரத்தில்தான் சீக்கிரம் சூடு ஏறும்; இறங்கவும் இறங்கும்.

(8) 99 - என்ற ஒரே எண்தான்.

(9) தவறு; சிலவிதப் பனமரச் சோற்றிலிருந்தே தயாரிக்கிறார்கள்.

(10) ஆறு பட்டையும் பச்சையாக 1, நீலமாக 1; ஒரு பட்டை பச்சையாக 1, நீலமாக 1; எதிர் இரண்டு பட்டைகள் பச்சையாக 1, நீலமாக 1; அடுத்தடுத்த இரு பட்டைகள் நீலமாக 1, பச்சையாக 1; எதிர் இரண்டு பட்டைகளும் மற்றொன்றும் ஒரு நிறமாக 1; ஒரே மூலையைத் தொடும் மூன்று பட்டைகள் ஒரு நிறமாக 1. ஆக 10 வகைச் சக்கைகள் தயாரிக்கலாம்.

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
FOR MANJARI AT THE M. L. J. PRESS, MADRAS 4.
MANAGING EDITOR: T. J. RANGANATHAN.

யார் குற்றம்?

சென்ற சில வருஷங்களில் நம் ஒழுக்க உணர்ச்சி குறைந்திருப்பது கண்டு எனக்குத் துக்கமாயிருக்கிறது...நம் துன்பங்களுக்கெல்லாம் அதுதான் காரணம். மற்ற நாட்டினரைவிட நாம் மோசம் என்று நான் சொல்லவில்லை. ஆனால், தினசரி வாழ்க்கை, வியாபாரம், சமூகம், அரசியல் எல்லாத் துறையிலும் நம் ஒழுக்கம் மிகவும் உயரவேண்டும்...

முதலாளி அதிக லாபம் பெற முயல்கிறான்; தொழிலாளி அதிகக் கூலி பெற முயல்கிறான்; குடித்தனக்காரன் முடிந்த சாமானையெல்லாம் வாங்க விரும்புகிறான். கள்ள மார்க்கெட் நடப்பதற்கு ஒரே ஒரு வர்க்கத்தினர் மட்டும் குற்றவாளிகள் அல்ல.

லட்சக்கணக்கான தொழிற்சாலை முதலாளிகள் இருக்கிறார்கள்; அவர்கள் சாமானைக் கள்ள மார்க்கெட்டுக்கு அனுப்பாவிட்டால், அது நடக்காது. குடித்தனக்காரர் அதை வாங்காவிட்டாலும் அது நடக்காது....

நம் ஒழுக்க உணர்ச்சி குறைந்துவிட்டதுதான் - நிலைமையறிந்து அதற்கேற்றபடி நம் கடமையைப் புரியாததுதான் - கள்ள மார்க்கெட் செழிப்பதற்குக் காரணம்.

நம் நெருக்கடிகள் அனைத்தும் தீர்வதற்கு, நாம் ஒவ்வொருவருமே சிறந்த ஒழுக்கத்துடன் நடந்து கொண்டு, பிறருக்கு உதாரணமாய் விளங்க முயல வேண்டும். இதுவே சகல மக்களையும் நான் கேட்டுக் கொள்வது.

—ராஜேந்திரப் பிரஸாத்

July '51 Regd. No. M. 4975

மஞ்சரி

கர - ஆடி

ஊரும் உலகமும்		1
கித்வாயின் யுக்தி	ஸ்வதந்த்ரா	3
புதிய சந்திரன்		4
க்விஸ்		8
ஹாக்கியின் கதை	ஸ்போர்ட் அண்டு பாஸ்டைம்	9
ஈரான் எண்ணெய்த் தொழில் (படம்)	அமிருத பஜார்	12
எண்ணெய்ப் புள்ளி விவரம்		13
தசரதனின் பிரிவு		14
உள்ளங்கை ரகசியம்		17
வழி வழி வந்த வசன நடை: அவிவேக பூரண குரு		21
பாபுராவ் பதில் சொல்லுகிறார்	பிலிமிண்டியா	25
கல்வியில் பொம்மலாட்டம்	அமெரிக்கன் ரிபோர்ட்டர்	27
குழந்தைகள் குறும்பு		31
மக்கியவெல்லியின் அறிவுச்சுடர்	இண்டியன் ரெவ்யூ	33
வானவில்லைப் பிடித்தவர்		36
விவேகானந்தர்: வாழ்வும் வாக்கும்		40
அபிநவ குப்தர்	கர்மவீர்	43
புதிய சணல் விளைச்சல்	ஸர்வோதய	46
வரி கொடாத வீரர்	கதர் மலர்	48
கார்ட்டூன் கதம்பம்		50
தெய்வத் திருநாடு	ரா. ஸ்ரீ. தேசிகன்	52
இந்தியாவின் முதல் பத்திரிகை	ஓரியெண்ட்	57
உடற் பயிற்சி வேண்டாம்		59
பாங்கி அநுபவம் (சிறுகதை)	ஸ்டீபன் லீகாக்	63
பிரளயம் (நாவல் சுருக்கம்)	ராமானந்த ஸாகர்-கா.ஸ்ரீ.ஸ்ரீ.	67
யார் குற்றம்?	ராஜேந்திரப் பிரஸாத்	(மூன்றாம் அட்டை)